விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2049 மார்கழி 12 வியாழக்கிழமை (27.12.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 008

Dishtv
பழைய Dishtv ரிஸீவர்க்கு பதிலாக புதிய ரிஸீவர் 700/= மட்டுமே
SATS-TECH
சாட்ஸ் ரெக் இன்ஜினியர்ஸ்
இல. 56/15 ஸ்ரான்லி வீதி ஒழுங்கை.
(பழைய தபால் கந்தோர் வீதி, யாழ்ப்பாணம்.)
Phone: 021 222 8812, Mob:- 076 886 1160
(C-4904)

### கிளிநொச்சி, முல்லைத்தீவில் நேற்று தொடர் மழை

# இரணைமடு குளத்தின் 9 வான் கதவுகளும் திறப்பு

## வெள்ள இடரால் 90 ஆயிரம் பேர் பாதிப்பு மக்களை அவதானமாக இருக்க அறிவிப்பு

(கொழும்பு)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் நேற்று புதன்கிழமை அதிகாலை முதல் தொடர்ச்சியாக மழை பெய்ததன் காரணமாக இரணைமடு குளத்தின் 9 வான் கதவுகளும் திறக்கப்பட்டது. வெள்ள இடரால் 90 ஆயிரம் மக்கள் பாதிக்கப்பட்டதோடு மக்களை அவதானமாக இருக்குமாறு அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது. (23ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் ரணில் கிளிநொச்சிக்கு நாளை விஜயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் வெள்ள அனர்த்த நிலைமைகளை ஆராய்வதற்காக பிரதமர் ரணில் விக்கிரம சிங்க நாளை வெள்ளிக்கிழமை கிளிநொச்சிக்கு வரவுள்ளதாக 23

## உயர்தர பெறுபேறு நாளை வெள்ளி வெளியாகும்

(கொழும்பு)

கடந்த ஆகஸ்டில் இடம்பெற்ற கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் நாளை வெள்ளிக்கிழமை வெளியிடப்படும் என்று பரீட்சைகள் திணைக்களத் தகவல்கள் தெரிவித்தன. 23

## நத்தார் கொண்டாட்ட விபத்துக்களில்

### 548 பேர் வைத்தியசாலையில்

(கொழும்பு)

நத்தார் கொண்டாட்டத்தில் ஏற்பட்ட விபத்துக்களினால் 548 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 48 மணிநேரத்திற்குள் குறித்த நபர்கள் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட் 23

## ஆழிப்பேரலையில் காவுகொண்ட உறவுகளை நினைந்து உருகி சோகமான தமிழர் தாயகம்





12

### காங்கேசன்துறையில்
## கஞ்சாவுடன் கடற்படை சிப்பாய் கைது

(யாழ்ப்பாணம்)

கஞ்சா போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கடற்படைச் சிப்பாய் 24

### வடக்கில் வெள்ள அனர்த்தத்தால்
## பாதிக்கப்பட்ட மக்களுக்கு விக்னேஸ்வரன் உதவி



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மயில்வாகனபுரம் இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலையில்பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேற்று வெள்ள நிவாரணம் வழங்கிய பின்னர் ஊடகங்களுக் 24

### அரச தொழில் பெற்று தருவதாக 27 இலட்சம் ரூபாய் பணமோசடி
## வவுனியாவில் ஒருவர் கைது

(பனிக்கன்குளம்)

வவுனியாவில் பல நாட்களாக பொதுமக்களை ஏமாற்றி அரச தொழில் வாய்ப்பு பெற்றுத்தருவதாகவும் மாவட்ட செயலகத்தின் புனர்வாழ்வு அமைச்சின் தொடர்புடன் கடமையாற்றி வருவதாகவும் தெரிவித்து பொதுமக்களிடமிருந்து சுமார் 27 இலட்சம் ரூபாய் பணமோசடி செய்த நபர் ஒருவரை நேற்று கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து பொலிஸார் மேலும் தெரிவிக்கையில், 24

## பாராளுமன்றத்தில் சர்வதேசம் தலையிடும்

### லக்ஷ்மன் யாப்பா தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை பாராளுமன்ற செயற்பாடுகளிலும் சர்வதேசம் தலையிடும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக, பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவை எதிர்க்கட்சித் தலைவராக ஏற் 23

## வடக்கில் ஏற்பட்ட வெள்ள இடரால் ஒரு பில்லியன் இழப்பு

### அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவிப்பு



(கொழும்பு)

கடந்த சில தினங்களாக பெய்த கன மழை காரணமாக வடக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள இழப்பு ஒரு பில்லியன் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளதாக அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார். 23

## கையூட்டல் பெற்ற கிராம சேவகர்

### யாழில் இடைநீக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கையூட்டு பெற்ற கிராம சேவகரை உடன் அமுலுக்கு வரும் வகையில் மாவட்ட செயலர் நா.வேதநாயகன் தற்காலிகமாக பதவி நீக்கம் செய்துள்ளார். 24

## தர்மபுரத்தில் தனியார் பேருந்து சாரதி, நடத்துநர், பயணிகள் மீது தாக்குதல்

(பனிக்கன்குளம்)

தர்மபுரம் பகுதியில் தனியார் பேருந்து சாரதி, நடத்துநர், பயணிகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். நேற்று முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பகுதியில் இருந்து காலை யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த தனியார் பேருந்து மாலை யாழ்ப்பாணத்தில் இருந்து ஒட்டுசுட்டான் நோக்கி பயணித்து கொண்டிருக்கையில் தர்மபுரம் பகுதியில் தனியார் பேருந்து ஒன்றினை ஹயஸ் வாக 23

## அணை உடைப்பு என உதவியை குழப்ப முயற்சி - விக்னேஸ்வரன்

(கிளிநொச்சி)

அணை உடைப்பு என மக்களுக்கு உதவும் முயற்சி குழப்பப்பட்டதாக முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் குற்றம் சுமத்தினார். அவர் மேலும் தெரிவிக்கையில், திடீரென வந்த ஒரு தப்பான தகவலினால் அங்கிருந்து மக்கள் தலை தெறிக்க ஓட விழைந்ததைக் கண்டேன். 23

# ரயில் ஊழியர்களின் வேலை நிறுத்தம் இரத்து

(கொழும்பு)

புகையிரத சாரதிகள் மற்றும் நிலைய கட்டுப்பாட்டாளர் நேற்று முன்னெடுக்கவிருந்த வேலைநிறுத்தப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

ரயில்வே தொழிற்சங்கங்கள் இணைந்து இரண்டு நாள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதற்கு தீர்மானித்திருந்தன.

தமது பல்வேறு கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு இந்த பணிப்பகிஷ்கரிப்பு நடவடிக்கையை முன்னெடுக்கப்போவதாக புகையிரத எஞ்ஜின் சாரதிகள் சங்கத்தின் செயலாளர் இந்திக தொடங்கொட தெரிவித்திருந்தார்.

இதேவேளை தமது பிரச்சினைகள் தொடர்பில் நேற்று போக்குவரத்து அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் குறித்த பிரச்சினைகளுக்கு ஒரு மாதத்திற்குள் தீர்வை பெற்றுத்தருவதாக அமைச்சர் எழுத்துமூலம் வாக்களித்ததால் வேலைநிறுத்தத்தை இரத்து செய்ய தீர்மானித்ததாகவும் புகையிரத எஞ்ஜின் சாரதிகள் சங்கத்தின் செயலாளர் இந்திக தொடங்கொட தெரிவித்துள்ளார். (ம-3)

# அசம்பாவிதங்களை தவிர்க்க முறையான நடவடிக்கையை எடுக்கவும் - தம்மரத்ன தேரர்

கடந்த காலங்களில் கண்டி பிரதேசத்தில் இடம்பெற்றது போன்ற அசம்பாவிதங்கள் இடம்பெறாதவண்ணம் செயற்படுமாறும், இது தொடர்பில் உடனடியாக முறையான விசாரணையொன்றை ஆரம்பிக்குமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுப்பதாகவும் யடிஹெலகல ரஜமகா விகாராதிபதி நெல்லிகல வதுரகும்புரே தம்மரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

யடிநுவர மற்றும் மாவனல்லை பிரதேசங்களிலுள்ள சில சிலைகள் உடைக்கப்பட்டமை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் தேரர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். (ம-3)

# சிவனொளிபாத மலைக்கு கேரள கஞ்சாவுடன் சென்ற ஏழு இளைஞர்கள் கைது

(கொழும்பு)

போதைப்பொருளுடன் சிவனொளிபாத மலைக்கு சென்ற 7 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் கேரள கஞ்சாவுடன் குறித்த 7 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹட்டன் பொலிஸ் நிலையத்தின் விசேட குற்றத்தடுப்பு பிரிவு, ஹட்டன் கொழும்பு பிரதான வீதியில் ஹட்டன் பகுதியில் நேற்று முன்தினம் பகல் 11.00 மணிமுதல் இரவு வரை வாகனங்களை சோதனை செய்த போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மாத்தறை, கொழும்பு, உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர்கள் ஹட்டன் நீதவான் முன்னிலையில் பிரசன்னப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். சிவனொளிபாத மலைக்கு போதை பொருட்கள் கொண்டு செல்வதனை தடுப்பதற்காக ஹட்டன் பொலிஸார் விசேட சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். (ம-3)

# சிறுவர் நன்நடத்தை பராமரிப்பு திணைக்களத்துக்கு வடக்கு ஆளுநர் கூரேயால் சிற்றூர்தி வழங்கி வைப்பு



சிறுவர் காப்பகத்திலிருந்து நீதிமன்றம் மற்றும் மருத்துவமனைகளுக்கு சிறுவர்களை அழைத்துச்செல்வதற்காக வடமாகாண சிறுவர் நன்நடத்தை பராமரிப்பு திணைக்களத்திற்கு புதிய சிற்றூர்தி ஒன்றினை வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே நேற்று வழங்கி வைத்துள்ளார்.

சுமார் 94 இலட்சம் ரூபாய் பெறுமதியான இந்த சிற்றூர்ந்தினை புத்தசாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சு வட மாகாணத்திற்கு வழங்கியிருந்தது. அதனை உத்தியோகபூர்வமாக சிறுவர் நன்நடத்தை பராமரிப்பு திணைக்கள ஆணையாளர் ரி.சிவரூபனிடம் ஆளுநர் கையளித்தார். (ம-9)

# துப்பாக்கிச் சூட்டுக்கிலக்காகி இவ்வருடம் 54 பேர் பலி!

நேற்று முன்தினம் மற்றும் நேற்றைய தினம் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் உட்பட இந்த வருடம் இதுவரையான காலப்பகுதியில் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி கொலை செய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை 54 பேர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் இடம்பெற்ற சம்பவங்களாக கொழும்பு கிரேன்பாஸ்- ஹேனமுல்ல வீட்டுத்திட்டத்திற்கு முன்னால் நேற்று காலை துப்பாக்கிச் சூட்டு சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

குறித்த துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் பலியானதுடன், நான்கு பேர் காயமடைந்துள்ளனர். இதேவேளை தங்காலை - குடாவெல்ல மீன்பிடி துறைமுகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் நான்கு பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

34-வது பொதுப் பட்டமளிப்பு விழா (பகுதி I) 22.01.2019 (செவ்வாய்க்கிழமை), கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

பதிவாளர்
26.12.2018

(சி-4907)


# ஆசிரியரின் வீட்டில் திருடிய யாழின் பிரபல பாடசாலை மாணவர்கள் நால்வர் கைது

(யாழ்ப்பாணம்)

ஆசிரியரின் வீட்டில் திருடிய குற்றச்சாட்டில் பிரபல பாடசாலை மாணவர்கள் நான்கு பேர் யாழ்ப்பாணம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். இச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது.

யாழ்ப்பாணத்தில் வசிக்கும் ஆசிரியர் இந்த மாணவர்களில் ஒருவருக்கு கற்பித்துள்ளார். ஆசிரியரின் வீட்டிற்குச் சென்று வந்த மாணவன் அந்த வீட்டில் இருந்த மடிக் கணினி மற்றும் தொலைபேசி, காசு உள்ளிட்ட பெறுமதிமிக்க பொருட்களை பல தடவைகள் திருடி வந்துள்ளார்.

சில வாரங்களுக்கு முன்னர் வங்கி ஏ.ரி.எம் அட்டையை திருடிச் சென்றதுடன், பூட் சிற்றி ஒன்றில் பொருட்கள் கொள்வனவும் செய்துள்ளார். அதேநேரம், ஏ.ரி.எம் அட்டை திருடப்பட்டமை தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்ட நிலையில் இந்த மாணவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் தேடப்பட்டு வந்துள்ளார்.

தனது நண்பர்களுடன் யாழ்.நகரில் உள்ள விருந்தினர் விடுதிக்கு சென்றதை அறிந்த யாழ்ப்பாணம் பொலிஸார் அவர்களை பின் தொடர்ந்து வீட்டிற்குச் சென்று அவர்களது வீட்டில் வைத்து நால்வரையும் நேற்று கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நால்வரிடமும் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். விசாரணைகளின் பின்னர் யாழ்ப்பாணம் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றதாக யாழ்ப்பாணம் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-101)


# கண்ணீர் அஞ்சலி

திருமதி
பொற்கொடி கனகசுந்தரம்

பிறப்பு 14 . 05 . 1940



இறப்பு 22 . 12 . 2018

யாழ். திருநெல்வேலி கிழக்கு முடமாவடியை பிறப்பிடமாகவும், கனடா Scarborough ஐ வதிவிடமாகவும் கொண்ட திருமதி பொற்கொடி கனகசுந்தரம் அவர்கள் 22.12.2018 சனிக்கிழமை காலமானார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சிவலிங்கம் குடும்பம்
"ஜனநோதயம்"
செல்வராஜா அவனியூ, அம்மன் வீதி, திருநெல்வேலி.

(6820)



# பெண் உதவியாளர் தேவை

நடமாடக்கூடிய நிலையில் உள்ள பெண்மணிக்கு உதவியாளராக இருக்கக் கூடிய பொறுப்புகள் அற்ற பெண் உதவியாளர் தேவை. தகுந்த சம்பளம், உணவு, தங்குமிடம் வழங்கப்படும். தங்கி நின்று பணி செய்யக் கூடியவர் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 0764847171
நெல்லியடி

(சி-4908)




மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு அகதி முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு கண்டாவளை பிரதேச செயலர் ஊடாக அகில இலங்கை இந்து மாமன்றம் நிவாரணப் பொருட்களை கையளித்தது. மாமன்றத்தின் சார்பில் உப தலைவர் ஆறு.திருமுருகன் நேரில் கையளித்தார்.

# மாகாண சபைத் தேர்தலை காலந்தாழ்த்துவதற்கு முயற்சி

## அரசு மீது பவ்ரல் குற்றச்சாட்டு



(கொழும்பு)

**மாகாண சபைத் தேர்தலை தொடர்ந்தும் காலம் தாழ்த்துவதற்கு அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி குற்றம் சாட்டியுள்ளார்.**

ஒன்பது மாகாணசபைகளுக்குமான தேர்தல்களை ஒரே தினத்தில் நடத்துவது தொடர்பில் நேற்று கொழும்பில் ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன் சகல மாகாண சபைகளுக்கும் ஒரே சந்தர்ப்பத்தில் தேர்தலை நடத்துவது தென்பது ஜனநாயகத்துக்கு சாதகமான அமைவதோடு தேர்தல் செலவீனத்தை கட்டுப்படுத்துவதிலும் பாரிய பங்களிப்பை செலுத்தும். இருப்பினும் தற்போதைய நடைமுறையில் இது சிக்கலுக்குரிய விடயமாகும் எனவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார். (இ-7)

## குளிக்கச்சென்ற குடும்பஸ்தர் குளத்திலிருந்து சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

நத்தார் தினத்தன்று குளத்தில் குளிக்கச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் யாழ். மணியம்தோட்டம் பகுதியில் இடம்பெற்றது. அதேயிடத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான ராசன் குலேன் என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

குறித்த குடும்பஸ்தர் நேற்று முன்தினம் மாலை அப்பகுதியில் உள்ள குளத்தில் குளிக்கச் சென்றுள்ளார்.

பமைணி நேரமாக இவரை காணவில்லை என குடும்பத்தினர் தேடியுள்ளனர். பின்னர் குளத்தில் சடலமாக மிதப்பதை கண்டுள்ளனர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன். விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (இ-9-101)

## எந்தநேரத்திலும் மகிந்த மீண்டும் பிரதமராகலாம்

வாசுதேவ எதிர்பார்ப்பு

[10 ஆம் பக்கம் பார்க்க...]

## கிரான்பாஸில் துப்பாக்கிச் சூடு! ஒருவர் உயிரிழப்பு;மூவர் படுகாயம்

(கொழும்பு)

கொழும்பு- கிரான்பாஸ் பகு ர் உயிரிழந்துள்ளதுடன் மூவர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவத்தில் 32 வயதுடைய தினேஷ் எரங்க என்பவரே உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையிலிருந்து தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் படுகாயமடைந்த ஏனைய மூவரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த சம்பவம் தொடர்பில் கிரான்பாஸ் பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## தங்காலையில் நேற்றும் துப்பாக்கிச் சூடு

(தங்காலை)

தங்காலை - குடாவெல்ல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தை தொடர்ந்து அங்கு வைக்கப்பட்டிருந்த வீதித் தடையை மீறிப் பயணித்த வேன் மீது பொலிஸார் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

நேற்று அதிகாலை குடாவெல்ல சந்தியில் வைக்கப்பட்டிருந்த பொலிஸ்வீதித்தடை ஊடாக பயணித்த வானை நிறுத்துமாறு பொலிஸார் சமிஞ்சையளித்துள்ளனர்.

எனினும், குறித்த வானின் சாரதி சமிக்ஞையைப் பொருட்படுத்தாது தப்பிச் செல்ல முற்பட்ட போது பொலிஸ்அதிகாரியொருவர் இவ்வாறு துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளார்.

வானின் உரிமையாளரைத் தேடி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ-7)

## கடுகண்ணாவையில் புத்தர் சிலை உடைப்பு

### ஒருவர் கைது; ஒருவர் தப்பியோட்டம்



(மாவனல்லை)

கடுகண்ணாவை, திதுருவத்தை பிரதேசத்தில் அமைந்துள்ள புத்தர் சிலை ஒன்றை உடைத்ததாகச் சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மாவனல்ல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாவனல்ல பிரதேசத்தை சேர்ந்த எம்.அஷ்பர் என்ற நபரே இவ்வாறு சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களாகவே மாவனல்ல பிரதேசத்தில் புத்தர் சிலைகள் உடைக்கப்பட்டு வருவதாகச் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்நிலையிலேயே நேற்று அதிகாலை 4 மணியளவில் திதுருவத்தை பிரதேசத்தில் இருவர் புத்தர் சிலையைச் சேதமாக்குவதை அவதானித்த அப்பிரதேச இளைஞர் ஒருவர், குறித்த இருவரையும் மடக்கிப் பிடிக்க முயற்சி செய்துள்ளார். அதில் ஒருவர் தப்பியோடியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தப்பியோடியவரைக்கண்டு பிடிக்க தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாவனல்லை பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ-7)

## விபத்தில் தாய் பலி! தந்தை,குழந்தைகள் வைத்தியசாலையில்

(கொழும்பு)

நேற்று அதிகாலை 1.05 மணியளவில் அதிவேக நெடுஞ்சாலையில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் மூவர் காயமடைந்துள்ளனர்.

மாத்தறை நோக்கிப் பயணித்த வான் வீதி அருகில் இருந்த கம்பத்துடன் மோதியதில் குறித்த விபத்து இடம் பெற்றது.

ஒரே குடும்பத்தை சேர்ந்த தந்தை, தாய் மற்றும் குழந்தைகள் மூவர் குறித்த வானில் பயணித்துள்ளனர்.

விபத்தில் காயமடைந்த நால்வர் நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் தாய் உயிரிழந்துள்ளதுடன் 14 வயதுடைய பெண் பிள்ளை ஒருவர் மேலதிக சிகிச்சைகளுக்காக கொழும்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

காலி, வலகஞ்துவ பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய நிர்மலா குமுதினி என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் கெனமிக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(இ-7)

## புத்தர் சிலைகள் மீது தாக்குதல்

### அமைச்சர் கபீர் கண்டனம்



(கொழும்பு)

மாவனல்ல பிரதேசத்தில் வணக்க வழிபாட்டுத் தலங்கள் மீது மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கைகளைத் தான் வன்மையாகக் கண்டிப்பதாக அமைச்சர் கபீர் ஹாசீம் தெரிவித்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் கேள்விப்பட்ட உடனே விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கியதாகவும், இதுவரை இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் கபீர் ஹாசீம் தெரிவித்துள்ளார். (இ-7)

## துப்பாக்கிச் சூடு குறித்து விசாரிக்க 11 பொலிஸ் குழுக்கள் நியமனம்

### ஊடகப் பேச்சாளர் ருவான் தகவல்

(வாதுவ)

தங்காலை பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுப்பதற்காக, கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு மற்றும் 11 பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்தார்.



வாதுவ பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.(இ-7)

## ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை எவராலும் வீழ்த்த முடியாது

### பைசர் முஸ்தபா கூறுகிறார்

(ராஜகிரிய)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் தற்போது காணப்படுகின்ற நெருக்கடிகளை மையப்படுத்தி எவராலும் கட்சியை பலவீனப்படுத்தவோ, வீழ்த்தவோ முடியாது எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் பைஸர் முஸ்தபா, கட்சியினர் அனைவரும் ஒன்றிணைந்து நெருக்கடிகளை எதிர்கொள்வோம் எனவும் தெரிவித்தார்.



ராஜகிரியவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசியல் ரீதியில் இன்று காணப்படுகின்ற அனைத்து நெருக்கடிகளையும் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்தே வெற்றிக் கொள்ள வேண்டும். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதான கடமை சுதந்திரக் கட்சியை பலப்படுத்துவதேயாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மயங்க் 'மந்திரம்'... புஜாரா 'தந்திரம்'

## மெல்போர்னில் இந்தியா மெது மெதுவாய் ஆரம்பம்

மெல்போர்ன் டெஸ்டின் முதல் நாளில் இந்திய அணி நிதான ஆட்டத்தை வெளிப் படுத்தியது. அவுஸ்திரேலிய பந்துவீச்சை மயக்கிய மயங்க் அகர்வாலும் தமது சமயோசித புத்தியால் தந்திரமாகக் கையாண்ட புஜாராவும் அரைச்சதம் அடித்து கைகொடுக்க இந்திய அணி முதல் இன்னிங்சில் வலுவான இலக்கு நோக்கி முன்னேறுகிறது.

அவுஸ்திரேலியா சென்றுள்ள இந்திய அணி, அங்கு நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

முதல் இரு டெஸ்ட் நிறைவில் தொடர் 1:1 என்ற கணக்கில் சம நிலையில் உள்ளது.

இந்நிலையில் இரு அணிகள் மோதும் மூன்றாவது டெஸ்ட் ('பொக்சிங் டே') நேற்று மெல்போர்னில் ஆரம்பமானது.

நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணித் தலைவர் ஹோலி துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தார். இந்திய அணியில் லோகேஷ் ராகுல், முரளி விஜய், உமேஷ் யாதவ் நீக்கப்பட்டனர். ரோகித் சர்மா, ஜடேஜாவுடன் 295ஆவது அறிமுக வீரராக மயங்க் அகர்வால் வாய்ப்பு பெற்றார்.

**ஆரம்பம் நம்பிக்கை**

இந்திய அணிக்கு ஆரம்ப ஜோடியை மாற்றியது எதிர்பார்த்த பலனைக் கொடுத்தது. மயங்க் அகர்வால், ஹனுமா விஹாரி ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது. அவுஸ்திரேலிய 'வேகங்களை' எளிதாக சமாளித்தனர். விஹாரி தான் சந்தித்த 25ஆவது பந்தில் முதல் ஓட்டத்தை எடுத்தார். நம்பிக்கையுடன் காணப்பட்ட மயங்க், லயன் பந்துகளில் பவுண்டரிகள் விளாசினார்.

**மயங்க் அரைச்சதம்**

முதல் விக்கெட்டுக்காக 40 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் கம்மின்ஸ் வீசிய 'ஷோர்ட் பிட்ச்' பந்தில் விஹாரி (8) சிக்கினார். பின் மயங்க், புஜாரா இணைந்தனர். மந்திர ஆட்டத்தை வெளிப்படுத்திய மயங்க், டெஸ்ட் அரங்கில் முதல் அரைச்சதம் அடித்தார். லயன் பந்தை சிக்சருக்கு விரட்டிய இவர், 76 ஓட்டங்கள் எடுத்தபோது துரதிர்ஷ்டவசமாக ஆட்டமிழந்தார்.

**புஜாரா கலக்கல்**

அடுத்து புஜாரா, ஹோலி இணைந்தனர். வந்தவேகத்தில் கம்மின்ஸ் பந்தை பவுண்டரிக்கு விரட்டிய ஹோலி, ஹேசல்வுட் ஓவரில் 2 பவுண்டரிகள் அடித்தார். மறுபக்கம் தந்திரமாக ஆடிய புஜாரா டெஸ்ட் அரங்கில் 21ஆவது அரைசதம் விளாசினார். ஹோலி 47 ஓட்டங்களில் கொடுத்த 'பிடி' வாய்ப்பை விக்கெட் காப்பாளர் பெய்ன் கோட்டைவிட, கண்டம் தப்பினார்.

முதல் நாள் முடிவில் இந்திய அணி முதல் இன்னிங்சில் 2 விக்கெட்டுக்களை இழந்து 215 ஓட்டங்களை எடுத்திருந்தது.

ஹோலி (47), புஜாரா (68) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலியா சார்பில் கம்மின்ஸ் மட்டும் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.



அறிமுக இன்னிங்ஸில் அரைச்சதமடித்த மயங்க் அகர்வால்

**"முதல்வன்" மயங்க்**

அவுஸ்திரேலிய மண்ணில் அறிமுக போட்டியில் அதிக ஓட்டங்கள் எடுத்த முதல் இந்திய வீரர் ஆனார் மயங்க் அகர்வால்.

இந்தியா - அவுஸ்திரேலிய அணிகள் மோதும் மூன்றாவது டெஸ்ட் மெல்போர்னில் நடக்கிறது. இப்போட்டியில் இந்திய அணியில் அறிமுக வீரராக களமிறங்கினார் மயங்க் அகர்வால். ஹனுமா விஹாரியுடன் இணைந்து ஆரம்பம் கொடுத்த இவர், டெஸ்ட் அரங்கில் முதல் அரைச்சதம் (76) எட்டினார்.

இதன்மூலம் அவுஸ்தி ரேலிய மண்ணில் அறிமுக டெஸ்டில் அதிக ஓட்டங்கள் எடுத்த வீரரானார் மயங்க் அகர்வால். இதற்கு முன் 1947, சிட்னி டெஸ்டில் தத்து பத்கர் 51 ஓட்டங்கள் எடுத்திருந்தார்.

**மயங்க் - விஹாரி அசத்தல்**

கடந்த 2010, செஞ்சூரியன் டெஸ்டில் இந்தியாவின் சேவக், கம்பிர் இணைந்து முதல் விக்கெட்டுக்காக 29.3 ஓவர்கள் தாக்குப்பிடித்தனர். 8 ஆண்டுக்குப்பின் நேற்று மயங்க் அகர்வால், விஹாரி ஜோடி அதிகபட்சம் 18.5 ஓவர்கள் தாக்குப்பிடித்தனர்.

**3**

நேற்று 68 ஓட்டங்கள் எடுத்த புஜாரா, 200 பந்துகளை சந்தித்தார். இதையடுத்து கவாஸ்கருக்கு அடுத்து (1977-78) ஒரு தொடரில் மூன்றாவது முறையாக 200 பந்துகளுக்கும் மேல் எதிர்கொண்ட வீரர் என்ற பெருமை பெற்றார்.


**4**

மெல்போர்ன் டெஸ்ட் வரலாற்றில் முதல் நாளில் 2 அல்லது அதற்கும் குறைந்த விக்கெட்டுகள் மட்டும் வீழ்த்தப்பட்டது நான்காவது முறையாக நேற்று நடந்தது. 1924-25 (2 விக்.,), 1952-53 (2), 1970-71ல் (1) முதல் நாளில் இதுபோல நடந்தது. அடிலெய்டில் 123, 71, பெர்த்தில் 24, 4 ஓட்டங்கள் எடுத்த புஜாரா, நேற்று 68 ஓட்டங்கள் எடுத்கார்.

**71, 376 இரசிகர்கள்**

மெல்போர்ன் டெஸ்ட் முதல் நாளான நேற்று 71,376 ரசிகர்கள் மைதானத்துக்கு வந்து ரசித்தனர். இங்கு இந்தியா மோதிய போட்டி களின் போது அதிக ரசிகர்கள் வந்தது இதுதான் முதன் முறை. இதற்கு முன் 2011ல் 70,068 பேர் வந்திருந்தனர். 2014ல் 70,000 பேர் பார்த்து ரசித்தனர்.

## தெ.ஆ., அசத்தல்



சாதனை விக்கெட்டை கைப்பற்றிய தருணத்தில் ஸ்ரெய்ன்

செஞ்சூரியனில் நடக்கும் முதல் டெஸ்டில், தென்னாபிரிக்க 'வேகங்கள்' அசத்த முதல் இன்னிங்சில் பாகிஸ்தான் அணி 181 ஓட்டங்களுக்கு சுருண்டது. ஒலிவியர் 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

தென்னாபிரிக்கா சென்றுள்ள பாகிஸ்தான் அணி, மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்ட் ('பொக்சிங் டே') செஞ்சூரியனில் நடக்கிறது.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணிக்கு தென்னாபிரிக்க 'வேகங்கள்' தொல்லை கொடுத்தனர். ரபாடா பந்தில் இமாம் உல் ஹக் 'டக்-அவுட்' ஆனார். ஸ்ரெய்னிடம் பகார் ஜமான் (12) சரணடைந்தார். பின் ஒலிவியர் 'வேகத்தில்' மிரட்டினார். இவரது பந்தில் ஷாக் மசோத் (19), அசத் ஷபிக் (7), அசார் அலி (36), அணித் தலைவர் சர்பராஸ் அகமட் (0), மொஹமட் அமிர் (1) ஆகியோர் ஆட்டமிழந்தனர். பாபர் ஆசம் அரைச்சதம் கடந்தார். ரபாடா பந்தில் யாசிர் ஷா (4), பாபர் அசம் (71) வெளியேறினர். தொடர்ந்து அசத்திய ஒலிவியரிடம் ஷஹீன் ஷா அப்ரிடி (0) சிக்கினார்.

முதல் இன்னிங்சில் பாகிஸ்தான் அணி 181 ஓட்டங்களுக்கு சுருண்டது. ஹசன் அலி (21) ஆட்டமிழக்காமல் இருந்தார். பந்துவீச்சில் தென்னாபிரிக்கா சார்பில் ஒலிவியர் 6, ரபாடா 3, ஸ்ரெய்ன் ஒரு விக்கெட் கைப்பற்றினர்.

**பாக்., பதிலடி**

பின் முதல் இன்னிங்சை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணிக்கு பாகிஸ்தான் பந்துவீச்சாளர்கள் பதிலடி கொடுத்தனர். ஹசன் அலி பந்தில் மார்க்ராம் (12) சிக்கினார். அமிர் 'வேகத்தில்' அம்லா (8), டி புரூன் (29) வெளியேறினர். அப்ரிடி பந்தில் எல்கர் (22), அணித் தலைவர் பிளசி (0) சரணடைந்தனர்.

முதல் நாள் ஆட்டநேர முடிவில் முதல் இன்னிங்சில் தென்னாபிரிக்க அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 127 ஓட்டங்கள் எடுத்து, 54 ஓட்டங்களால் பின்தங்கி இருந்தது. பாவுமா (38), ஸ்ரெய்ன் (13) ஆட்டமிழக்காமல் இருந்தனர். பந்துவீச்சில் பாகிஸ்தான் சார்பில் மொஹமட் அமிர், ஷஹீன் ஷா அப்ரிடி தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

**ஸ்ரெய்ன் சாதனை**

| வீரர் | டெஸ்ட் | விக்கெட் |
|---|---|---|
| ஸ்ரெய்ன் | 89 | 422 |
| பொலக் | 108 | 421 |
| நிடினி | 101 | 390 |
| டொனால்ட் | 72 | 330 |
| மோர்கல் | 86 | 309 |

டெஸ்ட் அரங்கில் அதிக விக்கெட்டுக்களைச் சாய்த்த தென்னாபிரிக்க பந்துவீச்சாளர்களில் முதலிடம் பிடித்தார் டேல் ஸ்ரெய்ன்.

தென்னாபிரிக்கா சென்றுள்ள பாகிஸ்தான் அணி, அங்கு மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்ட் ('பொக்சிங் டே') நேற்று செஞ்சூரியனில் ஆரம்பமாகியது.

இப்போட்டியில் பகர் ஜமானின் (12) விக்கெட்டை கைப்பற்றியதன் மூலமே டெஸ்ட் அரங்கில் அதிக விக்கெட்டுக்களை கைப்பற்றிய தென்னாபிரிக்க பந்துவீச்சாளர்களில் ஷோன் பொலக்கை (421) முந்தி 'நம்பர் 1' இடம் பிடித்தார் ஸ்ரெய்ன் (422 விக்.,).



## சில்லர் கணிப்பு

இந்திய அணிக்கு எதிரான மெல்போர்ன் டெஸ்டில் முதலில் துடுப்பாட்டம் செய்ய வேண்டும் என, ஏழு வயது சுழற்பந்துவீச்சாளர் ஆர்ச்சி சில்லர் விருப்பம் தெரிவித்தாராம்.

இந்தியா - அவுஸ்திரேலிய அணிகள் மோதும் மூன்றாவது டெஸ்ட் நேற்று மெல்போர்னில் ஆரம்பமாகியது. இதற்கான அவுஸ்திரேலிய அணியில், 15ஆவது கௌரவ வீரராக ஆர்ச்சி சில்லர் சேர்க்கப்பட்டார். மூன்று மாத குழந்தையாக இருக்கும் போது இவரது இருதய வால்வில் பாதிப்பு ஏற்பட்டது தெரிந்தது. இதுவரை 13 முறை 'சத்திரசிகிச்சை' செய்துள்ளார்.

உடல்நிலை காரணமாக பள்ளிக்கு செல்ல முடியவில்லை. நேரம் கிடைக்கும் போது கிரிக்கெட் மட்டும் விளையாடுவார். ஷேன் வோர்ன் மாதிரி 'லெக் ஸ்பின்னராக' அசத்துவார். ஆர்ச்சி சில்லருக்கு அவுஸ்திரேலிய அணியின் தலைவராக வேண்டுமென ஆசை.

இதையடுத்து அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை இவரது விருப்பத்தை நிறைவேற்றியது. மெல்போர்ன் டெஸ்டில் கௌரவ தலைவராக செயற்படுகிறார். நேற்று காலையில் இவருக்கு அவுஸ்திரேலிய டெஸ்ட் வீரர்கள் அணியும் பச்சை நிற தொப்பி வழங்கப்பட்டது. வீரர்களுடன் இணைந்து பயிற்சியில் ஈடுபட்டார். நாணயச்சுழற்சி போடும் தருணம் அணித் தலைவர் பெய்னுடன் இணைந்து சென்றார்.

இந்திய அணித் தலைவர் ஹோலி 'நாணயசுழற்சியில்' வென்று துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார். அதன்போது அணித் தலைவர் பெய்ன் கூறுகையில், "இது துடுப்பாட்ட ஆடுகளம்', முதலில் துடுப்பாட்டம் செய்யுங்கள் என ஆர்ச்சி சில்லர் அடம் பிடித்தார். இதற்கு நான் அவரிடம் இந்த ஆடுகளம் முழுதும் துடுப்பாட்டத்துக்கு கைகொடுக்காது என தெரிவித்தேன்," என்றார்.

ஆர்ச்சி சில்லர் கூறுகையில்,"அவுஸ்திரேலிய வீரர்கள் சிக்சர்களாக விளாச வேண்டும், எதிரணியின் விக்கெட்டுகளை விரைவில் வீழ்த்த வேண்டும்," என்றார். தொடர்ந்து வர்ணனை அறைக்குச் சென்று போட்டி குறித்து வர்ணனை செய்தார்.

# வெள்ள அனர்த்த நிவாரணப் பொருட்கள் வழங்கல்






தேசிய சேமிப்பு வங்கியின் வட பிராந்திய ஊழியர்களின் பங்களிப்பின் மூலம் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் என்பன வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக கரைச்சி, கண்டாவளை மற்றும் புதுக்குடியிருப் பிர தேச செயலகங்க ளிடம் வடபிராந்திய முகாமையாளர், கிளை முகாமை யாளர்கள் மற்றும் ஊழியர்களால் கையளிக்கப்பட் டன. (இ-7)

# அமைச்சர்களின் எண்ணிக்கை தொடர்பாக நீதிமன்றத்தின் கருத்தை கோர எதிர்பார்ப்பு



(கொழும்பு)

விடுமுறை காலத்தின் பின்னர் அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கை தொடர்பில் நீதிமன்றத்தின் கருத்தை கோருவதற்கு எதிர்பார்த்துள்ளதாக சுற்றுச் சூழல் பிரதியமைச்சர் அஜித் மன்னப் பெரும தெரிவித்துள்ளார்.

அந்த அமைச்சில் நேற்றுக் காலை தமது கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு:
021 221 7603, 021 567 1532





ஸ்ரீ ராம ஜெயம்

## அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில்

இணுவில்-மருதனார் மடம், சுன்னாகம்

இசை ஆராதனை

27.12.2018 வியாழக்கிழமை பகல் 11 மணிக்கு

புல்லாங்குழல்:- சர்மிலா ரதிதரன்

வயலின்:- சியாமகிருஷ்ணா

மிருதங்கம்:- ப்ரம்மஸ்ரீ வ.ரமணா

கடம்:- கு.ரவிசங்கர்

அனுசரணை:- நா.திருச்செல்வம்

36,2ஆம் ஒழுங்கை, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.



## வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி

## 'பதவி வெற்றிடம் நிரப்புதல்

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிகளுக்கான வெற்றிடம் நிரப்புவதற்கான தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.பதவிப் பெயர்:- எழுதுநர்

குறியீட்டு இலக்கம்:- 302/14

சம்பள அளவுத் திட்டம்:- 15960-135×10-145×10-18760

வெற்றிடம்-01

தகைமைகள்

- கூட்டுறவுப் பணியாளர் 15ஆவது சம்பளத் திட்டத்தில் லிகிதர் பதவியில் ஆகக் குறைந்தது 02 வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 16ஆவது சம்பளத் திட்டத்தில் 04 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

அல்லது

- க.பொ.த.சாதாரண தரத்தில் 02 அமர்வுக்கு மேற்படாது கணிதம்/ வர்த்தக கணிதம்/ எண்கணிதம் மற்றும் தமிழ் அல்லது சிங்கள பாசை உட்பட 06 பாடங்களில் சித்தியும் கூட்டுறவுச் சங்கத்தில் லிகிதர் பதவியில் குறைந்தது 01 வருட அனுபவம்.

ஏனைய விபரங்கள்

- கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு (வ/மாகாணம்) சுற்றுநிருபம் 04/2017 இற்கமைய வாழ்க்கைச் செலவுப்படி வழங்கப்படும்.
- விண்ணப்பங்கள் எமது கொத்தணியின் தலைமைக் காரியாலயத்தில் பெற்று பூர்த்தி செய்த விண்ணப்பங்களை " தலைவர், வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி, பிப்பிலிச்சந்தி மானிப்பாய்" என்னும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
- வயதெல்லை 18-45 வயது வரை (தற்போது கூட்டுறவுச்சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை கருத்தில் கொள்ளப்படமாட்டாது)
- தற்போது கூட்டுறவுச் சேவையில் இருப்பவர்கள் மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்கும் போது தமது விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட சங்கத்தினூடாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். இத்தகைய ஊழியர்கள் நேரடியாக விண்ணப்பங்களை அனுப்புதல், விண்ணப்பங்களை நிராகரிப்பதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னர் வெளிப்படுமிடத்து நியமனத்தை இல்லாதொழிப்பதற்கும் வழிவகுக்கும்.
- நியமனத்துக்கென தெரிவு செய்யப்படும் போது சங்கத்தால் கோரப்படும் ரொக்க பிணையை செலுத்த வேண்டும்.
- விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி:- 12.01.2019 (C-4905)

தலைவர், வலிகாமம் ப.தெ.வ.அ.கூ.
சங்கங்களின் கொத்தணி, மானிப்பாய்.

திகதி 27.12.2018



## திரு.செ.ஜெயநாதன்

சிரேஷ்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர், தென்னைப் பயிர்ச் செய்கைச்சபை, யாழ்ப்பாணம்.

அவர்களின்

## பணி ஓய்வும் பிறந்தநாள் வாழ்த்தும்



தென்னைப் பயிர்ச்செய்கை சபை யாழ்ப்பாணத்தின் வலிகாமம் பிரதேசத்தில் சிரேஷ்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தராகவும் வவுனியா மாவட்டத்தில் உதவி பிராந்திய முகாமையாளராகவும் திரு. செ.ஜெயநாதன் அவர்கள் 34 வருடங்கள் கடமையாற்றி 27.12.2018 இன்றுடன் பணியிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் இவரின் மகத்தான விரிவாக்கச் சேவையினை பாராட்டுவதுடன் என்னுடன் 34 வருடகாலம் சேவையாற்றியுள்ளார். அத்துடன் தென்னைச் செய்கையாளர்களுக்கு வழங்கிய அளப்பரிய சேவையினையும் நிறைவுற செய்தமைக்கு அகமகிழ்வுடன் வாழ்த்தி ஓய்வுக்காலம் சிறப்புற அமையவும் தேக ஆரோக்கியத்துடன் நீண்டகாலம் இனிதே வாழ இறைவன் அருள்புரிய வேண்டுமென்று வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-

திரு.ஜெ.சத்தியேந்திரன் (J.P) குடும்பத்தினர்.
சிரேஷ்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்,
தென்னைப் பயிர்ச் செய்கை சபை,
கமநல சேவை நிலையம் நல்லூர். (6813)


## இராசி பலன்

**மீனம்:** உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், உடல் நலனில் இருந்த பாதிப்புகள் அகலும், செய் தொழில் சிறப்புக்கள் வந்து சேரலாம், கௌரவமான நாள்.

**மேடம்:** அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்ய முற்படுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகள் குடும்பப் பொறுப்பு உணர்ந்து நடந்து கொள்வர்.

**இடபம்:** வீட்டில் விருந்தினர் வருகையுண்டு, தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், பெற்றோர் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**மிதுனம்:** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டுகொள்வீர்கள்.

**கும்பம்:** சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றை செய்து முடிப்பீர்கள், இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள்.

**கடகம்:** நன்மைகள் நடைபெறும் நாள், புதிய பொருட்சேர்க்கையுண்டு, கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், தொழிலில் எதிர்பார்ப்புகள் கைகூடும் வாய்ப்புண்டு

**மகரம்:** சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், குடும்பத்தினரிடையே சில கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், உடல் நலனில் கவனம் தேவை.

**சிம்மம்:** நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், அனுபத்தின் வாயிலாக பலதகவல்களை அறிந்து கொள்வீர்கள், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.

| | | | |
|---|---|---|---|
| செவ் | | | |
| | இராசி பலன் | | ராகு |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டம்<br>திருவோணம்,அவிட்டம் | | சந் |
| சனி, சூரி | குரு,புத | சுக் | |

27.12.2018

மார்கழி 12, வியாழக்கிழமை

சூரிய உதயம் காலை 6.27 மணிக்கு

பஞ்சமி பிற்பகல் 1.27 மணிவரை

மகம் பிற்பகல் 5.01 மணிவரை

சுபநேரம் 7.57-9.27 மணிவரை

இராகுகாலம் 1.57-3.27 மணிவரை

அமிர்தசித்தம்

வளவன்

**தனுசு:** தன்னம்பிக்கையோடு பணியாற்றி தடைகளை அகற்றுவீர்கள், உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், சாமர்த்தியமாகப் பேசி சாதனை படைக்கும் நாள்.

**விருச்சிகம்:** பயணங்களால் பலனுண்டு, தொழில் வளர்ச்சி கூடும் நாள், சேமிப்புகள் உயரும் வாய்ப்புண்டு, ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு, மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.

**துலாம்:** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், தொழில் முன்னேற்றப் பாதையை நோக்கி செல்லும், எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம்.

**கன்னி:** அலைச்சல்கள் அதிகரித்தாலும் சிறு ஆதாயமும் கிடைக்கலாம், சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம், நண்பர்கள் சந்திப்புண்டு.

# தேசிய பாதுகாப்புத்தினம் அனுஷ்டிப்பு



அனர்த்தத்தின் போது இறந்த மற்றும் பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூருவதற்கான நிகழ்வு தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ தலைமையில் நேற்றுக் காலை 9.15 மணிக்கு நடைபெற்றது. இந் நிகழ்வில் அனர்த்தங்களின் போது இறந்தவர்களை நினைவுகூரும் வகையில் காலை 9.25 தொடக்கம் 9.27 வரை சகல உத்தியோகத்தர்களும் மௌனமாக இருந்து அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களை நினைவு கூர்ந்தனர். (இ-7)

(யாழ்ப்பாணம்)



ஆழிப்பேரலை தாக்கிய 14, ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு தேசிய பாதுகாப்புத்தினம் நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றது

மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அலகின் ஏற்பாட்டில் அனர்த்த முகாமைத்துவ இணைப்பு அலகின் பிரதிப்பணிப்பாளர் ரவி சங்கரப்பிள்ளை தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் தேசிய கொடியை ஏற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ந்து 2004 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஆழிப்பேரலையில் சிக்கி உயிரிழந்த சகலருக்கும் இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் தேசிய பாதுகாப்புத் தினம் தொடர்பில் விழிப்புணர்வு நிகழ்வுகளும் மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றன. சர்வ மதத் தலைவர்கள், முப்படை அதிகாரிகள் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் இந்நிழ்வில் கலந்து கொண்டனர். (இ-101)

# கல்லறையை சுற்றிவந்த நாய்



(கரணவாய்)

சுனாமி ஆழிப் பேரலையில் காவு கொள்ளப்பட்ட உறவுகளின் அஞ்சலிக்கு மத்தியில் நாய் ஒன்றும் கல்லறைகளைச் சுற்றி சுற்றி வந்தது.

சுனாமி ஆழிப்பேரலை ஏற்பட்டு அதனால் காவு கொள்ளப்பட்ட உறவுகளின் 14 ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்றுப் புதன்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

புலோலி சூசையப்பர் ஆலயத்திலுள்ள கல்லறைகளுக்கு உறவுகள் மலர் அஞ்சலி செலுத்தினர்.

அப்போது அங்கு நாய் ஒன்று கல்லறைகளை சுற்றிச் சுற்றி வந்தது.(இ-60)

# பாரம்பரிய நாட்டாரியல் கலைவிழா

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பாரம்பரிய கலைகளை ஊக்குவிக்கும் நோக்குடன் நாட்டார் கலைகள் தொடர்பான முன்னோடி கலைநிகழ்ச்சிகள் அடங்கிய பாரம்பரிய நாட்டாரியல் கலைவிழா நாளை மறுதினம் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெறும்.

இந் நிகழ்வு இரண்டு அமர்வுகளாக நடைபெறும். முற்பகல் 10 மணிக்கு பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த பாரம்பரிய கலைஞர்களுடனான கலந்துரையாடல் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து வெவ்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த பாரம்பரியக் கலைநிகழ்வு இடம்பெறும்.

யாழ்.பல்கலைக்கழக நாடகமும் அரங்கியலும் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி க.சிதம்பரநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ள, இந்து கலாசார திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் திருமதி ஹேமலோஜினி குமரன் தலைமையில் நிகழ்வு நடைபெறும்.

பாரம்பரிய கலைகளுடன் ஆர்வமுடைய அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.(இ-7)

# நிர்வாகத்தெரிவு

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் ஜே/144 மாகியப்பிட்டி முதியோர் சங்கத்தின் 2019 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் சங்கத் தலைவர் ந.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

ஜே/144 கிராம உத்தியோகத்தர் இ.மோகனவாணி, சண்டிலிப்பாய் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் வி.சிவராஜா, அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி தர்மினி றஜீவன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இந்த நிர்வாகத் தெரிவில் தலைவராக செ.எட்வின் குணரட்ணம், செயலாளராக திருமதி. சரோஜினிதேவி துரைசிங்கம், பொருளாளராக திருமதி தெய்வசோதி தில்லையம்பலம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (இ-5)

# போதைப்பொருளுடன் கைதான இளைஞன் விளக்கமறியலில்!

(யாழ்ப்பாணம்)

போதைப் பொருளை வைத்திருந்த இளைஞர் ஒருவர் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

6 கிராமும் 106 மில்லி கிராம் போதைப்பொருளை வைத்திருந்த போதே குறித்த நபரை விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம்பண்ணைப் பகுதியில் வைத்து கடந்த 24 ஆம் திகதி மாலை கைது செய்துள்ளனர்.

கிளிநொச்சி கனகாம்பிகைக்குளம் பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இளைஞனை விசேட அதிரடிப் படையினர் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

யாழ்ப்பாணம் பொலிஸார் யாழ்.நீதவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் முற்படுத்திய போது நீதவான் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (இ-101)

# திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் கோட்டைக்காடு சாளம்பை முருகமூர்த்தி ஆலயத்தில் நாளை 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.30 மணியளவில் திருவாசக முற்றோதல் நடைபெறும். (இ-5)

➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீராவியடியிலுள்ள சைவ பரிபாலன சபையின் திருவாசக முற்றோதல் நிகழ்வு சபையின் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியளவில் ஆரம்பமாகி நடைபெறும். (இ-5)

# ஜனசக்தி சனசமூக நிலையத்தில் 52 ஆவது விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.சுன்னாகம் மயிலணி ஜனசக்தி சனசமூக நிலையத்தின் 52 ஆவது விளையாட்டுப் போட்டி நாளை மறுதினம் 29 ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் முருகமூர்த்தி ஆலய மைதானத்தில் ஜனசக்தி சனசமூக நிலையத் தலைவர் அ.சந்திரகுமார் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.தெற்கு பிரதேச சபைத் தவிசாளர் க.தர்சன், சிறப்பு விருந்தினர்களாக உடுவில் பிரதேச செயலக கிராம உத்தியோகத்தர் சே.சிறிஸ்கந்தராசா, உடுவில் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி மலர்மகள் தயாபரன், மயிலணி சைவமகா வித்தியாலய அதிபர் திருமதி றிசா தனஞ்சயன், அதிபர், சமாதான நீதவான் ராமதாஸ், சுன்னாகம் நகர் வடக்கு கிராம உத்தியோகத்தர் ம.கபிலன், கௌரவ விருந்தினர்களாக சுன்னாகம்பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.செல்வக்குமார், உடுவில் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் இ.ச.யசிதரன், உடுவில் பிரதேச செயலக இளைஞர் சேவை உத்தியோகத்தர் சி.அனுஷன், பிரதேச செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோத்தர் திருமதி சந்திரா நக்கீரன், சுன்னாகம் நகர் வடக்கு சமூர்த்தி உத்தியோத்தர் சி.பாஸ்கரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 80 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 105 | 100 | 95 | 120 |
| பச்சைமிளகாய் | 400 | 450 | 400 | 350 | 400 |
| தக்காளி | 200 | 200 | 200 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 80 | 30 | 40 |
| கோவா | 80 | 100 | 120 | 80 | 100 |
| கரட் | 120 | 150 | 200 | 120 | 200 |
| பூசணி | 60 | 40 | 50 | 40 | 80 |
| புடோல் | 100 | 140 | 80 | 70 | 80 |
| வாழைக்காய் | 80 | 80 | 60 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 140 | 100 | 100 | 100 | 160 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 90 | 95 | 100 |
| பாகற்காய் | 200 | 350 | 180 | 220 | 300 |
| வெண்டிக்காய் | 140 | 120 | 80 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 40 | 70 | 40 | 80 |
| பயற்றங்காய் | 120 | 150 | 120 | 90 | 120 |
| லீக்ஸ் | 150 | 180 | 220 | 110 | 200 |
| பீற்றூட் | 200 | 160 | 160 | 200 | 100 |
| கறிமிளகாய் | 300 | 340 | 180 | 200 | 300 |
| முருங்கைக்காய் | — | — | — | — | — |
| போஞ்சி | 100 | 140 | 160 | 110 | 120 |
| கத்தரிதம்புள்ள | 100 | 70 | — | 70 | 100 |
| கீரை-1பிடி | 50 | 25 | 40 | 40 | 40 |
| தேசிக்காய் | 300 | 350 | 200 | 150 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 40 | 40 | 30-50 |
| இராசவள்ளி | 200 | 180 | 160 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 300 | 450 | — | — | — |
| முள்ளங்கி | 80 | 80 | 80 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 50 | 45 | 40 | 20 | 50 |
| வல்லாரை | 20 | 50 | 30 | 20 | 30 |
| ஈரப்பலா | 60 | 80 | — | 110 | 80 |





யாழ்.புத்தூர் கலைமதி முன்பள்ளி நடத்திய தரம் ஒன்றிற்குச் செல்லும் மாணவர்களைக் கௌரவித்தலும் கலை நிகழ்வும் அண்மையில் து.சுரேஸ்குமார் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக யாழ்.வலய முன்பள்ளிகளின் உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.கணேசலிங்கம் கலந்து கொண்டார்.

# பொது அறிவித்தல் - 2019
# வலிகாமம் தெற்கு பிரதேசசபை சுன்னாகம்

| இல | விடயம் | தொடர்புபட்டோர் | வருடாந்த அறிவித்தல் |
|---|---|---|---|
| 01 | ஆதன வரி | பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ஆதன உரிமையாளர்கள் | 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி 2019ம் ஆண்டுக்கான ஆதன வரி சுன்னாகம், உடுவில் உப அலுவலகங்களுக்கான மீள் மதிப்பீடு செய்யப்பட்ட வருடாந்த பெறுமதியின் 14% ஆகவும் ஏழாலை உப அலுவலகத்திற்கான ஆதன வரி வருடாந்த பெறுமதியின் 15% ஆகவும் அறவீடு மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய 2019ம் ஆண்டுக்கான ஆதன வரியை 31.01.2019ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவோர் ஆண்டுக்கான மொத்த வரியில் 10% கழிவினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதோடு ஒவ்வொரு காலாண்டிற்குமுரிய வரியை குறித்த கந்தாயத்தின் முதல் மாத முடிவிற்குள் செலுத்துவோருக்கு காலாண்டு வரியில் 5% கழிவு வழங்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன். குறிப்பிட்ட திகதிக்குள் ஆதன வரியை செலுத்த தவறின் விறாந்துக்கட்டணமாக வெற்றுக்காணி அல்லது வதிவிட ஆதனங்களுக்கு 15%உம் ஏனைய ஆதனங்களுக்கு 20% உம் ஆதன வரியுடன் சேர்த்து அறவிடப்படும். எனவே குறித்த ஆதன வரிகளை 31.01.2019ஆம் திகதிக்கு முன் எமது உப அலுவலகங்களில் முழுமையாகச் செலுத்தி வரிக்கழிவுகளைப் பெற்று ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். |
| 02 | ஆதனப் பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்தல் | ஆதனப் பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்யப்படாத ஆதனச் சொந்தக்காரர்கள் | பெயர் மாற்றம் செய்வதற்குரிய ஆவணங்களை பிரதேசசபை உப அலுவலகங்களில் சமர்ப்பித்து பெயர் மாற்றம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். |
| 03 | 1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் கீழ் கட்டட அனுமதி வழங்கல் | பிரதேச சபை எல்லைக் குட்பட்ட பொதுமக்கள் மற்றும் அரச, தனியார் நிறுவனங்கள் | 1. தங்களது ஆதனத்தில் புதிதாக கட்டடங்கள், மதில்கள் அமைப்பதாயின் அல்லது பழைய கட்டடத்தினை புனரமைப்ப தாயின் பிரதேசசபையில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்னரே கட்டடங்கள், மதில்கள் அமைக்கப்படல் வேண்டும்<br>2. புதிய கட்டடம் அமைப்பதற்கு அனுமதி பெற்றவர்கள் அனுமதி பெற்ற திகதியிலிருந்து ஒரு வருட காலத்தினுள் வேலை பூர்த்தியடையாவிடின் உரிய கட்டணம் செலுத்தி கட்டட அனுமதியைப் புதுப்பிக்கவேண்டும்.<br>3. அத்துடன் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டதும் பிரதேசசபை அலுவலகத்துடன் தொடர்புகொண்டு படிவங்களைப்பெற்று பூர்த்தி செய்து உரிய கட்டணத்தை செலுத்தி அமைவுச் சான்றிதழைப் பெற்றுக்கொண்ட பின்னரே கட்டடத்தில் குடிபுகுதல் வேண்டும்.<br>4. சபை எல்லைக்குள் குழாய்க் கிணறுகள் அமைப்பவர்கள் சபையின் அனுமதி பெற்று அமைத்தல் வேண்டும்.<br>5. அனுமதியற்ற கட்டடங்களை முறைப்படுத்தி சீர்செய்கை நடவடிக்கைக்காக பின்வருமாறு தண்டப்பணம் அறவீடு செய்யப்படும்.<br>**பொதுப்போக்குவரத்திற்கு இடையூறாக வீதியோரங்களில் அமைக்கப்படும் நிரந்தர அலங்கார அமைப்புக்கள் அமைத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.** |

| தொ. இல | அனுமதியற்று கட்டப்பட்ட கட்டட விபரம் | கீழ் தளத்தில் ஒவ்வொரு சதுர அடிக்குமான விதிப்பனவு (ரூபா) | மேல் மாடியில் ஒவ்வொரு சதுர அடிக்குமான விதிப்பனவு (ரூபா) |
|---|---|---|---|
| 01 | அத்திபார வேலை மட்டும் பூர்த்தியாக்கப்பட்டது | 5.00 | -- |
| 02 | கூரை வரை நிர்மாணித்தல் (கூரை தவிர்ந்த) | 10.00 | 10.00 |
| 03 | கூரை உட்பட நிர்மாணித்தல் | 15.00 | 15.00 |
| 04 | முழுமையாக நிர்மாணித்தல் | 20.00 | 20.00 |
| 05 | மதில் அமைத்தல் | 5.00 (அடிக்கு) | -- |

| இல | விடயம் | தொடர்புபட்டோர் | வருடாந்த அறிவித்தல் |
|---|---|---|---|
| 04 | காணி உப பிரிவிடுகை | ஆதனம் ஒன்று பல துண்டுகளாகப் பிரிக்கப்பட்ட ஆதன உரிமையாளர்கள் | ஆதனம் ஒன்று பல துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து அனுமதி பெற்றுக்கொள்ளல் வேண்டும். |
| 05 | சூழல் பாதுகாப்பு உரிமம் | தொழில் வியாபார நடவடிக்கைகளை பிரதேசசபை எல்லைக்குள் மேற்கொள்வோர் | சூழல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ள வேண்டிய செயற்பாடு தொடர்பாக 2000ஆம் ஆண்டு நவம்பர் 22ஆம் திகதி 1159/22ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் "இ" பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்/வியாபார நடவடிக்கைகளை பிரதேசசபை எல்லைக்குள் மேற்கொள்பவர்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பூர்த்திசெய்து உரிய கட்டணத்தைச் செலுத்தி சூழல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெற்றுக்கொள்ளலாம். |
| 06 | வியாபார அனுமதிப் பத்திரம் 2019 | பிரதேசசபை எல்லைக்குட்பட்ட சகல வியாபாரம்/ தொழில் நிலையத்தவர்கள் | இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் மற்றும் எமது பிரதேசத்திற்குப் பொருட்களை விநியோகிப்போர் உரிய விண்ணப்பப்படிவத்தை உடுவில், சுன்னாகம், ஏழாலை ஆகிய உப அலுவலகங்களில்2019ஆம்ஆண்டு ஜனவரி 15ஆம் திகதிக்குள் பெற்று அதனைப் பூரணப்படுத்தி உரிய உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31.03. 2019ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி வியாபார அனுமதிப்பத்திரத்தை (Trade license) பெற்றுக்கொள்ளவும். 31.03.2019ஆம்திகதிக்கு முன்னர் வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளாதவர்கள்மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். |
| 07 | துவிச்சக்கர வண்டி உரிமம் | துவிச்சக்கர வண்டி உரிமையாளர்கள் | துவிச்சக்கர வண்டிகள் வைத்திருப்போர் 2019.03.31ஆம் திகதிக்கு முன் உரிய உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களை செலுத்தி 2019ம் ஆண்டுக்கான துவிச்சக்கரவண்டி உரிமங்களைப் பெற்றுக்கொள்ளவும். |
| 08 | மிருகங்களுக்கான உரிமம் | வளர்ப்பு நாய் உரிமையாளர்கள் | வளர்ப்பு நாய்கள் வைத்திருப்போர் 2019.03.31ஆம் திகதிக்கு முன் உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களை செலுத்தி 2019ஆம் ஆண்டுக்கான மிருக உரிமங்களைப் பெற்றுக்கொள்ளவும் |
| 09 | விளம்பரங்கள் அமைத்தல் அல்லது காட்சிப்படுத்தல் | விளம்பரங்களை காட்சிப்படுத்தும் முகவர்கள், நிறுவனங்கள், வர்த்தக உரிமையாளர்கள் | பிரதேசசபை எல்லைக்குள் அமைக்கப்படும் விளம்பரப் பலகைகளுக்கு பிரதேசசபையின் அனுமதியைப் பெற்றே விளம்பரங்களைக் காட்சிப்படுத்த வேண்டும். அனுமதி பெறப்படாத விளம்பரங்கள் சபையினால் அகற்றப்படும்.<br>கட்டண விபரம் பின்வரும் |

| தொ. இல | விபரம் | கட்டணம் (1 சதுர அடி) |
|---|---|---|
| 01 | சுவர் ஒன்றில் அல்லது மதில் ஒன்றில், பலகை ஒன்றில் அல்லது வேறு ஏதேனும் ஒன்றின் உதவியுடன் (தகரம், பிலெக்ஸ், லுமினஸ்) அல்லது வேறு ஏதேனும் ஒன்றின் உதவியுடன் காட்சிக்கு வைக்கப்படுகின்ற நிரந்தர விளம்பர அறிவித்தல் | ரூபா 100.00 |
| 02 | ஒரு மாதத்திற்கு மேல் 03 மாதங்களுக்கு குறைவான கால எல்லைக்குள் காட்சிக்கு வைக்கப்படுகின்ற பதாகை | ரூபா 30.00 |
| 03 | ஒரு மாதத்திற்கு அல்லது அதற்கு குறைவாகக் காட்சிக்கு வைக்கப்படுகின்ற பதாகை | ரூபா 20.00 |
| 04 | கட்அவுட்களுக்கு 03 மாதங்களுக்கு கூடுதலான கால எல்லை | ரூபா 40.00 |
| 05 | கட்அவுட்களுக்கு 03 மாதங்களுக்கு குறைவான கால எல்லை | ரூபா 30.00 |
| 06 | வர்த்தக நிலையங்களுக்குள் காட்சிக்கு வைக்கப்படுகின்ற தனது வர்த்தக நாமத்தை உடைய வர்த்தக பெயர்ப்பலகை தவிர்ந்த வேறு பெயர்ப்பலகை | ரூபா 100.00 |
| 07 | டிஜிற்றல் பெயர்ப்பலகை | ரூபா 150.00 |
| 08 | ஒளிபுக கூடிய விளம்பரம் | ரூபா 150.00 |

| இல | விடயம் | தொடர்புபட்டோர் | வருடாந்த அறிவித்தல் |
|---|---|---|---|
| 10 | வீதி ஒழுங்கும் தெருவோர வியாபாரமும் | பாதசாரிகள், வாகன ஓட்டுநர்கள் மற்றும் வியாபாரிகள் | வீதி ஒழுங்கைப்பேணி நடக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றது. வியாபார நிலையங்களிற்கு முன்னால் பாதசாரிகளின் போக்குவரத்திற்கு இடையூறாக பொருட்களை வெளியே வைத்து விற்பனை செய்வது, காட்சிப்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு வர்த்தக நிலைய உரிமையாளர்களிற்கு அறியத்தருகின்றேன். சந்தைச் சுற்றாடலில் இருந்து 500மீற்றர் சுற்றுவட்டாரத்தில் கடல் உணவுகள், மரக்கறி, முட்டை என்பன விற்பது தடைசெய்யப்பட்டுள்ளது. |
| 11 | பொதுச் சுகாதாரத்தைப் பேணுதல் | உணவு கையாளும் நிலையம் | உணவு கையாளும் நிலையப் பணியாளர்கள் மருத்துவப் பரிசோதனை மேற்கொண்டு அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.<br>2034/33ஆம் இலக்க 2017.09.01ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையின் பிரகாரம் 20 மைக்ரோன் அல்லது அதற்கு குறைவான தடிப்புள்ள பொலித்தீன் பாவனை தடை செய்யப்பட்டுள்ளது. |
| 12 | பொது இடங்களில் கழிவு போடுதலும்டெங்கு நுளம்புப்பெருக்கத்திற்கு ஊக்கம் அளிப்பதும் | பொதுமக்கள், வியாபார நிலையங்கள், அரச, தனியார் நிறுவனங்கள் | திண்மக்கழிவுகளை பிரதேசசபைக்கு ஒப்படைக்கும்போது அவை தரம்பிரித்து வழங்கப்பட வேண்டும்என்பதுடன்திண்மக்கழிவுகள் பொது இடத்தில் கொட்டுதல் தடை செய்யப்படுவதோடு நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவாக சூழலை வைத்திருப்போர் மீதும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.<br>அபிவிருத்தி செய்யப்படாத காணிகளில் உள்ள பற்றைகள் துப்புரவு செய்யப்படல் வேண்டும்.<br>பொதுப்போக்குவரத்திற்கு இடையூறாக வீதியோரங்களில் பூமரங்கள் நாட்டுதல் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. |
| 13 | படவரைஞர்களை பதிவு செய்தல் | படவரைஞர்கள் | 2019ஆம் ஆண்டு படவரைஞராகப் பதிவுசெய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2019ஆம் ஆண்டு பங்குனி 31ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளவும்/புதுப்பித்துக்கொள்ளவும். மேலதிக விபரங்களுக்கு தலைமை அலுவலகத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்புகொள்ளவும். |
| 14 | தரகர் முறை நீக்கல் | சந்தைக் குத்தகையாளர்கள் | எமது பிரதேசசபை எல்லைக்குட்பட்ட சந்தைகளில் தரகர் மூலமான நடைமுறை முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு சந்தைக்குத்தகையாளர் வேண்டப்படுகின்றனர். |

மேற்கூறிய விடயங்கள் தொடர்பில் பொதுமக்கள் மற்றும் தொழில்புரிபவர்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது. குறித்த அறிவித்தலின் பிரகாரம் செயற்படத் தவறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**க.தர்சன்,**
**தவிசாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை,**
**சுன்னாகம்.**

**021 224 4045, 021 224 0017**

(C-4958)

## முல்லைத்தீவு, கிளிநொச்சியில்

# 36 ஆயிரத்து 239 ஏக்கர் வயல் நிலங்கள் அழிவு

(கண்டாவளை)

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் கொட்டித்தீர்த்த அடைமழை காரணத்தால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் பல்லாயிரக்கணக்கான வயல் நிலங்கள் வெள்ளநீரில் மூழ்கியுள்ளன.

சுமார் 36 ஆயிரத்து 239 ஏக்கரிற்கு மேற்பட்ட வயல் நிலங்கள் முற்றாக அழிவடைந்துள்ளதாக ஆரம்பகட்டத் தகவல்களில் இருந்து தெரியவந்துள்ளது.

இதனால் இன்னும் 25 நாட்களில் அறுவடை செய்யக்கூடிய நிலையில் காணப்பட்ட வயல் நிலங்களே நீரில்மூழ்கி அழிவடைந்துள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் 15 ஆயிரத்து 810 ஏக்கர் வயல் நிலங்கள் வெள்ளநீரில் மூழ்கி பாதிக்கப்பட்டுள்ளதாக இரணைமடு விவசாய சம்மேளனத்தின் தலைவர் மு.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

அதாவது, மகிழங்காடு, சின்னக்காடு, பன்னங்கண்டி, மருதநகர், முரசுமோட்டை, வட்டக்கச்சி, இராமநாதபுரம், ஊரியான், பெரிய பரந்தன், குஞ்சுப்பரந்தன், கோரக்கன்கட்டு, பெரியகுளம், நாகேந்திரபுரம், புளியம்பொக்கணை, கண்டாவளை ஆகிய பிரதேசங்களே இவ்வாறு வெள்ளநீரில் மூழ்கியதால் இந்தப்பிரதேசங்களில் மானாவாரியாக மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கைகளில் சுமார் ஏழாயிரத்து 700 ஏக்கர் வயல் நிலங்களும் நீர்ப்பாசனத்தின் கீழுள்ள சுமார் எண்ணாயிரத்து 110 ஏக்கர் வயல் நிலங்களும் நீரில் மூழ்கி அழிவடைந்துள்ளன.

இவை உள்ளடங்கலாக சுமார் 26ஆயிரத்து 560 ஏக்கருக்கு மேற்பட்ட வயல் நிலங்கள் அழிவடைந்துள்ளன.

இதேபோன்று முல்லைத்தீவு மாவட்டங்களில் ஆரம்பகட்டத் தகவல் படி சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சுமார் ஒன்பதாயிரத்து 679 ஏக்கர் வயல் நிலங்கள் வெள்ளநீரில் மூழ்கி அழிவடைந்துள்ளதுடன் இதைவிட, ஐந்திற்கும் மேற்பட்ட சிறிய குளங்கள் ஆபத்தான நிலையில் காணப்படுகின்றன.

இவ்வாறு இரண்டு வருடங்கள் நிலவிய தொடர் வறட்சி காரணமாக காலபோக மற்றும் சிறுபோக செய்கைகள் மேற்கொள்ளப்படாத நிலையில் விவசாயிகள் இம்முறை மேற்கொண்ட இந்த நெற்செய்கையானது அழிவடைந்தமையால் இதனை நம்பி வாழும் விவசாயக்குடும்பங்கள் நிர்க்கதி நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். (2)




## புதுமுறிப்புக் குளத்தின் நீர்மட்டம் அதிகரிப்பு; அச்சத்தில் மக்கள்

### வீதிகள் வெள்ளத்தில்



(சிவநகர்)

கிளிநொச்சியில் தொடரும் சீரற்ற காலநிலையால் இடையிடையே பலத்த மழை பெய்து வருவதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு வருகின்றது.

நேற்றுக் காலை 9 மணிக்குப் பின்னர் தொடர்ச்சியாக பெய்த மழையை அடுத்து முகாம்களில் தஞ்சமடைந்த குடும்பங்கள் தொடர்ந்தும் முகம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் ஏ-9 வீதி மேற்குப் பகுதி வீதிகள் அனைத்திலும் கூடுதலான வெள்ளநீர் தேங்கி காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் உருத்திரபுரம் வடக்கு, மேற்கு, கிழக்கு, சிவநகர், நேவில் ஆகிய பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை புதுமுறிப்புக் குளத்தின் நீர் மட்டம் தொடர்ந்தும் உயர்வடைந்து வருவதால் குளம் உடைப்பெடுக்கும் அபாயத்தை எட்டியுள்ளது.

குளம் உடைபெடுத்தால் இடம்பெயர வேண்டி வரும் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

தொடர்ச்சியாக மழை பெய்தால் இடம்பெயர வேண்டி வரும் என மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். (2-254)

## மூச்சுப்பயிற்சி வவுனியாவில் இருதினங்கள்

(வவுனியா)

சுதர்ஷனகிரியாவின் தனிச்சிறப்பு வாய்ந்த மூச்சுப் பயிற்சியானது நாளையும் நாளை மறுதினமும் வவுனியா நகரசபை வீதியிலுள்ள Rest House Hall இல் நடைபெறும்.

இன்றைய தினம் பிற்பகல் 6 மணிக்கு அறிமுக வுரை இடம்பெறும்.

மூன்று நாட்களும் தினமும் மூன்று மணிநேரமும் இடம்பெறும் இப்பயிற்சியில் 18 வயதிலிருந்து பங்குபற்ற முடியும். (2)

## மழை தொடருமாகில்

### முக்கொம்பனில் 500 ஏக்கர் நெல்வயல்கள் நீரில் மூழ்கும் அபாயத்தை எட்டியுள்ளன

(பூநகரி)

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி-மன்னார் வீதியில் இருந்து கிராஞ்சி, வேரவில், வலைப்பாடு ஆகிய பகுதிகளுக்கு செல்லும் 6 கிலோமீற்றர் நீளம் வரையான வீதி நீரில் மூழ்கியுள்ளதால் அவ்வீதியூடான போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

இதனால் நேற்று முன்தினம் மாலையில் இருந்து இவ் வீதியூடான போக்குவரத்து தடைப்பட்டிருந்த நிலையில் இப்பகுதிக்கு யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், பூநகரி பிரதேசசபை தவிசாளர் அ.ஐயம்பிள்ளை உட்பட பல உறுப்பினர்கள் அவ்வீதியை நேரில் சென்று நேற்று முன்தினம் இரவு பார்வையிட்டதோடு மேற்கொண்டு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் ஆராய்ந்துள்ளனர்.

இதேவேளை முக்கொம்பன் பிரதேசத்தில் காரயம்பிட்டிகுளம் நிறைந்து வான்பாய்வதால் சுமார் 500 ஏக்கரிற்கும் மேற்பட்ட நெல் வயல்கள் நீரில் மூழ்கியுள்ளதாக பிரதேசசபை தவிசாளர் அ.ஐயம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

மழை தொடருமாகில் இந்த நெல்வயல் அழியும் அபாய நிலை ஏற்படும் என அவர்தெரிவித்துள்ளார்.(2-84)

## குஞ்சுக்குளம் சுற்றுலா மையத்தை மீளவும் இயக்க நடவடிக்கை

(மன்னார்)

மன்னார் குஞ்சுக்குளத்தில் இயங்காமல் இருந்த தேக்கம் சுற்றுலாமையத்தை மீண்டும் இயக்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நானாட்டான் பிரதேசசபை தவிசாளர் தி.பரஞ்சோதி தெரிவித்துள்ளார்.

கடந்த 2014 ஆம் ஆண்டு வடக்கு மாகாண சுற்றுலா அமைச்சினால் ஒதுக்கப்பட்ட 12 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இச் சுற்றுலா மையத்தை 2016 ஆம் ஆண்டு முன்னைய பிரதேச சபையினர் தனியாருக்கு குத்தகைக்கு வழங்கியிருந்தனர்.

குத்தகைக்கு எடுத்தவர்கள் சுற்றுலா மையத்தை பயன்பாட்டிற்கு விடாமல் இருந்தமையால் கட்டடங்கள்,கூரைகள் என்பன சேதமடைந்து காணப்பட்டன.

இதற்கான காரணம் தொடர்பில் தற்போதைய நிர்வாகம் கேட்டதற்கு அமைவாக சுற்றுலா மையத்தில் பூரண வசதிகள் இல்லாமையால் திறக்கவில்லை எனக் கூறப்பட்டது.

இதனை மறுத்த பிரதேச சபை அங்கத்தவர்கள் கடந்த 19 ஆம் திகதி எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி குறித்த தனியாருக்கான ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டு திறந்த கேள்வி கோரல் மூலம் குத்தகைக்கு விடப்படவுள்ளதாக தவிசாளர் தெரிவித்துள்ளார். (2-285)

## கிரவல் மண் கொண்டு சென்ற டிப்பர் வாகனங்கள் தடுத்து நிறுத்தம்

### பிரதேச செயலாளர் வரவழைக்கப்பட்டு வாகனங்கள் விடுவிப்பு




(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் புளியம் பாக்கணை பெரியகுளம் வட்டக்கச்சி பிரதான வீதி ஊடாக டிப்பர் வாகனங்களில் கிரவல் மண் கொண்டு செல்லும் வீதியானது சேதமடைவதனால் இதனை நிறுத்துமாறும் நேற்று முன்தினம் பிரதேச மக்கள் விடுத்த கோரிக்கைக்கு மாறாக நேற்றைய தினம் கிரவல்மண் ஏற்றிச் சென்ற 40 வரையான டிப்பர் வாகனங்களை பிரதேச மக்கள் தடுத்து நிறுத்தியிருந்தனர்.

கண்டாவளைப் பிரதேசத்திற்குட்பட்ட பெரியகுளம், வட்டக்கச்சி, கல்மடுநகர் ஆகிய கிராமங்களுக்கான பிரதான வீதியாகக் காணப்படும் புளியம்பொக்கணை-வட்டக்கச்சி வீதியூடாக டிப்பர் வாகனங்களில் கிரவல் மண் கொண்டு செல்வதற்கான அனுமதிகள் வழங்கப்பட்டு கிரவல் கொண்டு செல்லப்படுவதனால் வீதி முழுமையாகச் சேதமடைந்து வருகின்றது.

இதனை தடுத்து நிறுத்துமாறு நேற்று முன்தினம் அப்பகுதிக்குச்சென்ற பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

குறித்த அனுமதிகளை தற்காலிகமாக நிறுத்த நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தபோது நேற்றைய தினம் நாற்பது வரையான டிப்பர் வாகனங்கள் கிரவல் மண் ஏற்றிச்சென்ற சமயம் பிரதேச மக்கள் ஒன்றிணைந்து வீதியில் தடுத்து நிறுத்தி பிரதேச செயலாளருக்கு தகவல் வழங்கினர்.

சம்பவ இடத்திற்குச் சென்ற கண்டாவளை பிரதேச செயலாளர் சம்பந்தப்பட்ட தரப்புக்களிடம்பேசி பொதுமக்களின் ஒப்புதலுடன் டிப்பர் வாகனங்கள் விடுவிக்கப்பட்டன.(2-315)

## இரணைமடுகுள வான்பகுதிக்குள் மீன் பிடிப்போரின் வருகை அதிகம்



(பரந்தன்)

இரணைமடுகுளத்தின் வான்பகுதிக்குள் நூற்றுக்கணக்கான மீன்கள் பிடிபடுவதனால் பெருமளவான வியாபாரிகள் இரணைமடுவில்குவிந்துள்ளனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் மட்டும் பல இலட்சங்களுக்கு மீன்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு தொடர்ந்தும் வான்பகுதிக்குள் பலர் மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர். அவற்றை கொள்வனவு செய்வதற்கு மக்களும் வியாபாரிகளும் குவிந்துள்ளனர். (2-312)

## வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கி வைப்பு



(குருமன்காடு)

வவுனியா வடக்கில் மழை காரணமாக பாதிப்படைந்த 132 குடும்பங்களைச் சேர்ந்த 455 பேருக்கும் நிவாரணப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

வவுனியா வடக்கு பிரதேச செயலகம் ஊடாக எழுகை என்ற தன்னார்வத் தொண்டு அமைப்பு இந்த நிவாரணப் பொருட்களை வழங்கியது.

இவர்களில், 17 குடும்பங்களைச் சேர்ந்த 46 அங்கத்தவர்கள் வவுனியா வடக்கு மருதோடை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மற்றும் பொது மண்டபத்தில் தங்கியுள்ள மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கே இவ்வாறு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் பாதிக்கப்பட்ட மக்களை மாவட்ட அரச அதிபர், அனர்த்த முகாமைத்துவ நிலைய உதவிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா உள்ளிட்டவர்கள் சென்று பார்வையிட்டு நிலைமைகளை ஆராய்ந்தனர். (2-250)

# இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ள மக்களை சந்தித்து வடக்கு ஆளுநர் நிவாரணப் பொருட்களை வழங்கினார்





(கிளிநொச்சி)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களை நேற்றைய தினம் நேரடியாகச் சென்று பார்வையிட்ட வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே அவர்களின் உடனடித்தேவைகளுக்கான நிவாரணப் பொருட்களையும் வழங்கி வைத்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான்,பேராறு, மன்னங்கண்டி, சுதந்திரபுரம்,மாணிக்கபுரம் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள முகாம்களுக்கும் கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை, தர்மபுரம், முரசுமோட்டை, பரந்தன், ஆனந்தபுரம், முறிகண்டி உள்ளிட்ட பகுதிகளில் அமைந்துள்ள முகாம்களையும் ஆளுநர் அதிகாரிகள் சகிதம் சென்று பார்வையிட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிப் பொருட்களை வழங்கியுள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநர் முகாம்களை பார்வையிட சென்றபோது அங்கு அரசியல் பிரமுகர்களையும் சந்தித்தார். தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்,கரைச்சி பிரதேசசபை தவிசாளர் வேழமாலிகிதன், ஈபிடிபி பாராளுமன்ற உறுப்பினர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, சமூக நீதிக்கான அமைப்பின் தலைவர் முருகேசு சந்திரகுமார், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் கே.தவராசா, யாழ்.மாநகர சபை உப தவிசாளர் து.ஈசன், கோப்பாய் பிரதேசசபை தலைவர் நிரோஸ், ஈ.பி.ஆர்.எல்வை சேர்ந்த உதயகுமார் உட்பட பிரதேச சபை உறுப்பினர்களையும் சந்தித்து கலந்துரையாடினார்.

அங்குள்ள மக்கள் முன்னிலையில் தமிழில் உரையாற்றிய வடக்கு மாகாண ஆளுநர் உங்கள் துக்கத்தை நேரடியாக சென்று பார்வையிட்டு செய்ய வேண்டிய அனைத்து உதவிகள் தொடர்பில் தமக்கு கூறுமாறு ஜனாதிபதி என்னை அனுப்பியிருக்கின்றார்.

உங்களுக்கு வேண்டிய அனைத்து உதவிகளை யும் அதிகாரிகளுக்கு கூறியுள்ளேன். செய்ய சொல்லி நான் அது சரியாக நடை பெறுகிறதா என்றும் கண்காணிப்பேன்.

உலருணவு பொதிகளை வழங்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு சொல்லி இருக்கின்றேன்.

நுண்கடன் வழங்கிய நிறுவனம் நீங்கள் இடம்பெயர்ந்து இருக்கின்ற முகாம்களுக்கு வந்து பணம் கேட்டு கரைச்சல் கொடுப்பதாக கேள்விப்பட்டிருக்கின்றேன்.

அது தொடர்பில் நான் கூடியகவனம் செலுத்தி வருகின்றேன். உங்கள் குறைகள் தொடர்பாக ஆளுநர் செயலகத்துடன் தொடர்பு கொள்ளுங்கள் என்று தெரிவித்தார். (2-9)




# 40 வருடங்கள் பழைமையான கர்த்தர் சொரூபம் உடைப்பு

## பரப்புக்கடந்தான் பிரதான வீதியில் சம்பவம்



(மாந்தை)

மன்னார் மாவட்டத்தின் மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஆட்காட்டி வெளி பரப்புக் கடந்தான் பிரதான வீதியில் அமைக்கப்பட்டிருந்த சுமார் 40 வருடங்கள் பழைமை வாய்ந்த புனித கர்த்தர் சொரூபம் நேற்று முன்தினம் நள்ளிரவு இனம் தெரியாத நபர்களினால் அடித்து உடைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு குறித்த வீதியூடாக கரோல் நிகழ்வில் கலந்து கொண்டு விட்டு மீண்டும் அவர் வீதியூடாக பங்கு மக்கள் சென்று கொண்டிருந்த போதே குறித்த சொரூபம் உடைக்கப்பட்டுள்ள நிலையில் ஆட்காட்டிவெளி பங்குத் தந்தை அருட்தந்தை ச.சத்தியராஜ் அடிகளாரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

உடனடியாக சம்பவ இடத்திற்குச் சென்ற பங்குத் தந்தை நிலைமையை பார்வையிட்டதோடு, மன்னார் ஆயர் இல்லத்திற்கு தெரியப்படுத்தியும், அடம்பன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

இந்த நிலையில் நேற்று காலை சம்பவ இடத்திற்கு சென்ற அடம்பன் பொலிஸார் விசாரனைகளை மேற்கொண்டனர்.

பின்னார் விசேட தடயவியல் நிபுணத்துவ பொலிஸார் வருகை தந்து தடயங்களைப் பெற்றுக் கொண்டனர்.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-285)

# வெள்ளப் பாதிப்புக்குள்ளான முல்லை. மாவட்டத்தை மீள் புனரமைப்பது தொடர்பில் நேற்று கூடி ஆராய்வு



(பனிக்கன்குளம்)

நாட்டில் ஏற்பட்ட கால நிலை சீரின்மையால் வெள்ள பாதிப்புக்குள்ளான முல்லைத்தீவு மாவட்டத்தின் மீள்புனரமைப்பு தொடர்பில் மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன் தலைமையில் கலந்துரையாடல்இடம்பெற்றுள்ளது.

அண்மையில் திடீரென ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்கள் பல்வேறு பாதிப்புக்களை சந்தித்துள்ளன. அந்த வகையில் கடும் மழை காரணமாக பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தின் நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்து முகாமில் உள்ள மக்களை மீள வீடுகளுக்கு அனுப்புதல், கிணறுகளை சுத்தப்படுத்தல்,வீதிகள் மற்றும் சுகாதாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல் தொடர்பில் ஆராயும் விசேட கலந்துரையாடல் ஒன்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் மாவட்ட செயலாளர் தலைமையில் நேற்று காலை 9.30 மணியளவில் இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் மேலதிக மாவட்ட செயலாளர் கோ. தனபாலசுந்தரம், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் சி.லிங்கேஸ்வரகுமார் மற்றும் மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட செயலக பிரதம கணக்காளர், மாவட்டத்தின் அனைத்து திணைக்களங்களின் உயர் அதிகாரிகள்,பிரதேச செயலாளர்கள்,பிரதேச சபை தவிசாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போதுஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் மக்களை வீடுகளுக்கு அனுப்பி வைத்து அவர்களுக்கு என்னென்ன செய்யப்பட வேண்டும் குறிப்பாக குடிநீர்,காதாரம் உள்ளிட்ட அடிப்படைத்தேவைகள் அடங்கலாக பாதிக்கப்பட்டுள்ள வீதிகள்,விவசாய நிலங்கள்,வடிகான்கள் உள்ளிட்ட அனைத்து விடயங்களின் பாதிப்புக்கள் தொடர்பில் திணைகள தலைவர்கள் ஊடாக அறிந்து அதனை சீர்செய்ய என்ன நடவடிக்கைகள் மேற்கொள்வது என்பது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.(2-281)

# அரியாலை சனசமூகத்தினரால் ஆனந்தபுரம் மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள்



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட ஆனந்தபுரம் கிராம மக்களுக்கு அரியாலை சமூகத்தினரால் உலருணவு பொருட்கள் மற்றும் அத்தியாவசிய பொருட்கள் என்பன நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டன.

இதன்படி ஆனந்தபுரம், ஒட்டுசுட்டான், மாங்குளம், பனிக்கன்குளம், திருமுறிகண்டி ஆகிய பிரதேசங்களில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலருணவு பொருட்கள் மற்றும் அத்தியாவசிய பொருட்கள் என்பன அரியாலை சமூகத்தினரால் வழங்கி வைக்கப்பட்டது.

இந நிவாரண பணிகளில் அரியாலையை சேர்ந்த பெருமளவிலான இளைஞர்கள் கலந்து கொண்டு உதவி பொருட்கள்ள வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.(2-315)

# 132 குடும்பங்கள் பாதிப்பு; 17 குடும்பங்கள் இடம்பெயர்வு

## வவுனியா வடக்கு பிரதேச செயலகம் தகவல்

(பனிக்கன்குளம்)

வவுனியாவில் கொட்டித் தீர்த்த கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளம்காரணமாக 132 குடும்பங்களைச்சேர்ந்த 455 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக வவுனியா வடக்கு பிரதேச செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

வவுனியா வடக்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட புளியங்குளம் வடக்கு கிராம அலுவலர் பிரிவில் 36 குடும்பங்களைச் சேர்ந்த 139 பேரும், கனகராயன்குளம்வடக்கு கிராம அலுவலர் பிரிவில் 5 குடும்பங்களைச் சேர்ந்த 22 பேரும், நைனாமடு கிராம அலுவலர் பிரிவில் 11 குடும்பங்களைச் சேர்ந்த 31 பேரும், மன்னகுளம் கிராம அலுவலர் பிரிவில் 25 குடும்பங்களைச் சேர்ந்த 89 பேரும், மாறா இலுப்பை கிராம அலுவலர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 4 பேரும், வெடிவைத்தகல் கிராம அலுவலர் பிரிவில் 18 குடும்பங்களைச் சேர்ந்த 70 பேரும், கற்குளம் கிராம அலுவலர் பிரிவில் 19 குடும்பங்களைச் சேர்ந்த 48 பேரும், கனகராயன் குளம் தெற்கு கிராம அலுவலர் பிரிவில் 17 குடும்பங்களைச் சேர்ந்த 52 பேருமாக மொத்தம் 132 குடும்பங்களைச் சேர்ந்த 455 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஓர் வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

மேலும் 17 குடும்பங்களைச் சேர்ந்த 46 அங்கத்தவர்கள் வவுனியா வடக்கு ஊஞ்சல்கட்டி அ.த.க. பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். தற்போது செய்கை செய்யப்பட்ட நெற்செய்கையும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வயல் நிலங்கள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன.

அத்துடன் கால்நடைகள் பல வெள்ளநீரில் சிக்கி காணாமல் போயுள்ளதுடன், வீடுகள் வியாபார நிலையங்களுக்குள் வெள்ளம் சென்றமையால் சொத்திழப்புக்களும் ஏற்பட்டுள்ளன. (2-281)

# நாதன் குடியிருப்பு மக்களுக்கு வெள்ள நிவாரணப் பொருட்கள்



(பனிக்கன்குளம்)

கிளிநொச்சி - கண்டாவளைப் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட, புன்னை நீராவி நாதன் குடியிருப்புப் பகுதியிலுள்ள வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

குறித்த நிவாரணப் பொருட்களை வவுனியா பல்கலைக் கழகவளாக 2007ஆம்ஆண்டு மாணவர்களே வழங்கியிருந்தனர்.

130 குடும்பங்களுக்கு ஒரு இலட்சத்து முப்பதாயிரம் ரூபா பெறுமதியான நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

நிவாரணப்பொருட்கள்வழங்கும் நிகழ்வில் கிராம சேவையாளர், வவுனியா பல்கலைக்கழக மாணவர்கள், கிராம மட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-281)

# எந்நேரத்திலும் மகிந்த மீண்டும் பிரதமராகலாம்

## வாசுதேவ நாணயக்கார எதிர்பார்ப்பு

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நீண்ட தூரம் பயணத்தை மேற்கொள்வதற்கு வாய்ப்பில்லை. ஆகையால் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கும் பிரேரணையையொன்று எந்நேரத்திலும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் நிலைமை காணப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் தற்போதைய செயற்பாடுகள் தொடர்பாக நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில், "கூட்டமைப்புடன் இணைந்து அரசாங்கம் பயணிப்பதை ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த சிலரே விரும்பவில்லை.

ஆகையால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களை அரசாங்கத்துடன் இணைக்கும் முயற்சிகள் இடம்பெற்று வருவதாக தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதேவேளை ஐக்கிய தேசிய கட்சி மற்றும் கூட்டமைப்பு ஆகியவற்றுக்கு மகிந்த மீண்டும் பிரதமராவாரென்ற அச்சம் நிலவுகின்றது.

ஆகையால்தான் மகிந்தவைச் சார்ந்த உறுப்பினர்களின் நாடாளுமன்றப் பதவியைப் பறிப்பதற்கான செயற்பாடுகளை இரு கட்சிகளும் மேற்கொண்டு வருகின்றன.

இந்நிலையில் நாமும் மகிந்தவைப் பிரதமராக்குவது தொடர்பில் ஏனைய சில கட்சிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றோம்.

அந்தவகையில் ஐ.தே.க.வுக்கு எதிராக பிரச்சினைகள் மேலோங்கும்போது நாம் மகிந்தவைப் பிரதமராக்கும் பிரேரணையை முன்வைப்போம்" என வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவித்தார். (இ-7)

# மத்தள விமான நிலையத்தில் திடீரென தீப்பற்றிய விமானத்தால் பரபரப்பு!

(கொழும்பு)

மத்தள சர்வதேச விமான நிலையத்தில் நேற்றுக் காலை விமானம் ஒன்றில் தீ பரவியுள்ளது.

CVK 7042 என்ற சரக்கு விமானம் ஒன்றிலேயே இவ்வாறு தீப்பற்றியுள்ளது.

குறித்த விமான நேற்று முன்தினம் மாலை தாய்லாந்திலிருந்து மத்தள விமான நிலையத்திற்கு வந்துள்ளது.

நேற்றுக்காலை ஓமானை நோக்கிப் பறக்கத் தயாரான போது இந்தத் தீ விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தீப்பற்றிய போது விமானத்திற்குள் 7 பேர் இருந்துள்ளனர். அவர்களில் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை. இருப்பினும் விமான நிலைய தீயணைப்புப் பிரிவினர் தீயைக் கட்டுப்படுத்தியுள்ளனர்.

எனினும் தீப்பற்றியமைக்கான காரணம் வெளியாகவில்லை. (இ-7)

# நல்லுறவை வலுப்படுத்திக் கொள்வதற்கு இலங்கைக்கு தென்னாபிரிக்கா அழைப்பு

(பிரிட்டோரியா)

இலங்கை மற்றும் தென்னாபிரிக்கா நாடுகளுக்கிடையில் நல்லுறவை வலுப்படுத்திக் கொள்வதற்கு இலங்கைக்கு தென்னாபிரிக்க ஜனாதிபதி சிரில் ரமபோஷா அழைப்பு விடுத்துள்ளார்.

தென்னாபிரிக்காவிற்கான இலங்கையின் புதிய தூதுவராக மல்லிமாராட்சி நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தென்னாபிரிக்க ஜனாதிபதி சிரில் ரமபோஷாவை ஜனாதிபதி விருந்தினர் இல்லத்தில் சந்தித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

இச்சந்திப்பின் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வாழ்த்துக்களைத் தென்னாபிரிக்க ஜனாதிபதி ரமபோஷா மற்றும் தென்னாபிரிக்க மக்களுக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

இதேவேளை, அடுத்த வருடம் செப்டெம்பர் மாதத்தில் இலங்கை மற்றும் தென்னாபிரிக்கா என்பன இருநாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர நல்லுறவின் 25 ஆவது வருட நிறைவைக் கொண்டாடவுள்ளமையை நினைவுறுத்தினார்.

மேலும் இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் இருதரப்பு நல்லுறவு என்பவற்றை மேலும் வலுப்படுத்துவதற்கு தாம் எதிர்பார்த்துள்ளதாகவும் மல்லிமாராட்சி தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கை மற்றும் தென்னாபிரிக்கா நாடுகளுக்கிடையில் நல்லுறவை வலுப்படுத்திக் கொள்வதற்கும், நிலைபேறான அபிவிருத்தியுடைய உலகினை உருவாக்குவதற்கும் அழைப்பு விடுத்துள்ளார். (இ-7)

# மீண்டும் வீழ்ச்சியடைந்த இலங்கை ரூபாவின் பெறுமதி

இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்டுள்ள அமெரிக்க டொலர் ஒன்றுக்கான விற்பனை மற்றும் கொள்வனவு பெறுமதிப்படி இலங்கை ரூபா மேலும் வீழ்ச்சியடைந்துள்ளது. அதன்படி நேற்று அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 183.17 ரூபாவாகப் பதிவாகியுள்ளது.

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி அண்மையில் அதிகரித்திருந்த நிலையில் நேற்று வீழ்ச்சியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நாடாளுமன்றத்தில் மோதல் இழப்பீடுகளை எம்.பிக்களிடம் அறவிட அரசு நடவடிக்கை



(கொழும்பு)

பாராளுமன்றத்தில் சொத்துக்களுக்குச் சேதங்களை ஏற்படுத்திய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், ஏற்படுத்தப்பட்ட சேதங்களுக்கான இழப்பீடுகளை அவர்களிடமிருந்தே பெற்றுக் கொள்வதற்கும் எதிர்பார்க்கப்படுவதாக பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறி தெரிவித்தார்.

கடந்த நவம்பர் மாதம் 14, 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவங்களால் பாராளுமன்ற சொத்துக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட சேதங்கள் குறித்த பிரதான மதிப்பீட்டாளரின் அறிக்கைக்காக பொலிஸார் காத்திருப்பதுடன். அதன் அடிப்படையில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஒலிக் கட்டமைப்புக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட சேதங்கள் குறித்து தனியார் நிறுவனம் அறிக்கையொன்றைச் சமர்ப்பித்திருப்பதுடன், ஏனைய சொத்துக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட இழப்பீடுகள் குறித்து பிரதான மதிப்பீட்டாளருக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாகவும் பிரதி சபாநாயகர் தெரிவித்தார். சபையில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து ஆராய்வதற்காக பிரதி சபாநாயகர் தலைமையிலான குழுவொன்றை சபாநாயகர் கரு ஜெயசூரிய நியமித்திருந்தார்.

இந்தக் குழு இன்று வியாழக்கிழமை பொலிஸ் திணைக்கள அதிகாரிகளைச் சந்திக்கவுள்ளது. மோதல் சம்பவங்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் பொலிஸ் விசாரணைகள் முன்னெடுக்கப் படுகின்றன.

பொலிஸாரால் முன்னெடுக்கப்படும் விசாரணைகள் குறித்த விடயங்கள் இன்று வியாழக்கிழமை நடைபெறவிருக்கும் சந்திப்பில் கேட்டறியப்படும் என்றும், இது தொடர்பில் முன்னேற்றம் தொடர்பான வாராந்த கூட்டத்தைக் கூட்டவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தனியார் ஊடக நிறுவனத்திடமிருந்து ஒளிப்பதிவுகளைப் பெற்று அவற்றின் அடிப்படையில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு பொலிஸ் திணைக்களத்திடம் கோரிக்கை விடுக்கவிருப்பதாகவும் பிரதி சபாநாயகர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து ஆராய்வதற்கு கடந்த 29ஆம் திகதி ஆறு பேர் கொண்ட குழுவொன்றை சபாநாயகர் நியமித்திருந்தார். பிரதி சபாநாயகரை தலைமையாகக் கொண்ட இக்குழுவில் பாராளுமன்ற உறுப்பினர்களான சமல் ராஜபக்ஷ, பிமல் ரத்நாயக்க, மாவை சேனாதிராசா, ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் சந்திரசிறி கஜதீர ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

அன்றையதினம் பதிவான சி.சி.ரி.வி கமராக்களின் ஒளிப்பதிவுகளை நாம் பார்வையிட்டுள்ளோம். அதனை அடிப்படையாகக் கொண்டு சபைக்கு அறிக்கையொன்றை சமர்ப்பிக்கவுள்ளதுடன், அதில் சம்பந்தப்பட்ட உறுப்பினர்களின் பெயர்களை உள்ளடக்குவதற்கு எதிர்பார்த்துள்ளோம். எமது அறிக்கையை விரைவில் சமர்ப்பிக்க வேண்டும் என்பதில் சபாநாயகர் உறுதியாகவிருக்கின்றார். விசாரணைகள் ஏன் இன்னமும் காலதமதப்படுகின்றன என மக்கள் கேள்வியெழுப்புகின்றனர்" எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (இ-7)

## 5 கொலைகளுடன் தொடர்பு

# விசேட அதிரடிப்படையினரிடம் சிக்கிய முக்கிய சந்தேகநபர்

(கொழும்பு)

திட்டமிட்டு குற்றச் செயல்களில் ஈடுபடும் கல்தேமுல்ல கயான் என்பவர், இரத்மலானையில் வைத்து பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் 5 கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என பொலிஸ் விசேட அதிரடிப் படையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அங்குலான ரோஹா எனப்படும் பாதாள உலகக்குழு உறுப்பினரின் உதவியாளர் எனவும் அவர் தெரிவித்தார். சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக திட்டமிட்ட குற்றச்செயல் தடுப்புப்பிரிவில் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மட்டக்களப்பில் ஆழிப்பேரலையால் உயிரிழந்தவர்களின் நினைவுகூரல்





(கல்லடி)

ஆழிப்பேரலை இடம்பெற்று 14 அண்டுகள் கடந்துள்ள நிலையில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் நிகழ்வுகள் மட்டக்களப்பில் நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

மட்டக்களப்பு- கல்லடி, டச்பார், திருச்செந்தூர், நாவலடி ஆகிய பகுதிகளில் நேற்றுக் காலை 8.55 மணியளவில் சுனாமி நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன.

மேலும் திருச்செந்தூர் சுனாமி ஞாபகார்த்த நினைவாலயத்திலும் நினைவேந்தல் நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக நடைபெற்றன.

இதன்போது மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் பொன்னையா ஜோசப் ஆண்டகையால் விசேட பூஜைகள் நடத்தப்பட்டு, ஈகச்சுடர் ஏற்றப்பட்டது. பின்னர் உயிரிழந்தவர்களின் உறவுகள் அஞ்சலி செலுத்தினர்.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தி.சரவணபவன், பிரதி முதல்வர் க.சத்தியசீலன், ஆணையாளர் க.சித்திரவேல், முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம்உட்பட பலர் கலந்துகொண்டனர். (இ-7)

# கலைத்தரிசனம்





# கவிஞர் சோ.பத்மநாதன் (சோ.ப)

## அவர்களுடனான சந்திப்பு

**ஈழத்தின் மூத்த கவிஞரும் பலாலி ஆசிரிய கலாசாலையின் முன்னாள் அதிபரும் மொழிபெயர்ப்பாளரும் விமர்சகரும் பேச்சாளருமான சோ.ப. என்று இலக்கிய உலகில் நன்கு அறியப்படும் கவிஞர் சோ.பத்மநாதன் 1939 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 14 ஆம் திகதி வண்ணார்பண்ணையில் பிறந்தார். இவர் இதுவரை பதினொரு நூல்களை வெளியிட்டுள்ளார். 1982-1990 வரை கம்பன் கழகம் ஏற்பாடு செய்த கவியரங்குகளில் நிறையவே கவிபாடியுள்ளார். தனது 15 வயதில் எழுதத் தொடங்கிய இவர் ஓசைச் சிறப்புடன் எழுதுவதில் வல்லவர். மும்மொழிகளில் சிறப்புச் தேர்ச்சி பெற்ற இவர் எப்பொழுதும் அடக்கமாகவே இருப்பார். இலக்கிய உலகில் நன்கு அறியப்பட்ட கவிஞர் சோ.ப. தன்னைப் பற்றியும் தன் கலைப்பணி பற்றியும் மனந்திறந்து வலம்புரியின் கலைத்தரிசனம் பகுதிக்காக தந்தவற்றைத் தருகின்றோம்.**

**➢ஈழத்தின் மரபுக் கவிஞர்களுள் எல்லோருக்கும் நன்கு தெரிந்த ஒரு கவிஞராக நீங்கள் விளங்குகிறீர்கள். அந்தவகையில் கவித்துறையில் உங்களுக்கு எவ்வாறு ஈடுபாடு ஏற் பட்டது?**

எனது குடும்பம் ஒரு கலைப்பின்னணியைக் கொண்ட குடும்பம் அல்ல. சோ எனது முதலெழுத்தாக இருப்பதால் நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் மகனா என்று கேட்போரும் உள்ளனர். ஆயினும் எனக்குள் ஒரு அதிர்ஷ்டம் இருந்தது என்றே கூற வேண்டும். 1948, 1958 ஆம் ஆண்டுகளில் கிருபானந்தவாரியாரின் சொற்பொழிவுகளை நிறையவே கேட்டிருக்கிறேன். அவர் வருடத்திற்கு ஒருமுறை அல்லது இருமுறை யாழ்ப்பாணம் வருவார். அவரது சொற்பொழிவுகள் மிகவும் அற்புதமானவை. மிகச் சிறந்த அறிஞர் அவர். நிறைந்த ஞாபகசக்தி படைத்தவர்.

மிக அற்புதமாகப் பாடிச் சொற்பொழிவுகள் செய்வார். என்னை எனது மாமா ஒருவரே வளர்த்து வந்தபடியால் அவரது சொற்பொழிவுகள் எங்கு இடம்பெற்றாலும் மாமா என்னை அழைத்துச் செல்வார். அவரின் சொற்பொழிவு ஓசை என் காதுகளில் நிறைந்திருந்து ஒலித்துக் கொண் டேயிருக்கும். பின் கல்லூரி நாட்களில் வித்துவான் கார்த்திகேயன் என்ற ஒரு தமிழறிஞர் எனக்குக் கற்பித்தார். அவர் என்னைப் போன்ற திறமையான மாணவர்களுக்குத் தனிப்பட்ட ரீதியில் கற்றுத் தருவார். இதுவும் நான் கவிப்புலத்தில் வளர்வதற்கு வித்திட்டது.

மேலும் அந்தக் காலத்தில் அதிகமான தமிழ்நாட்டு அறிஞர்கள் யாழ்ப்பாணத்திற்கு வந்து சொற்பொழிவுகள் ஆற்றுவர். இன்றைய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக இருக்கின்ற அன்றைய பரமேஸ்வராக் கல்லூரியில் தமிழ்நாட்டுத் தமிழறிஞர்கள் பலர் வருகை தந்து சொற்பொழிவுகள் செய்வர். அப்போது சு.நடேசபிள்ளைதான் அதிபராக இருந்தார். அவர் அமைச்சராக இருந்தவர். தமிழ்நாட்டு அறிஞர்களை இவர் இங்கு அழைத்து வந்து சொற்பொழிவுகள் நடத்தினார். வைத்தீஸ்வர வித்தியாலயத்திலும் இலக்கிய உரைகள் நிகழும்.

**➢கவிதைகளை ஆங்கிலத்தில் இருந்து தமிழுக்கு மொழி பெயர்க்கும் போது எழக்கூடிய இடர்பாடுகள் சிலவற்றைக் கூறுங்கள்?**

மொழிபெயர்க்கப்பட்ட அதுவும் கவிதை மொழிபெயர்ப்பு ஒரு சவால். கவிதையின் உயிர் மொழிபெயர்ப்பில் இழக்கப்படும் அபாயம் உண்டு. மூலமொழியின் மரபு ஒன்று. இலக்கு மொழியின் மரபு பிறிதொன்று. இவ்விரண்டுக்கும் இடையே கயிற்றில் நடக்க வேண்டும். பொதுப்பண்பாட்டுக்குள் இரண்டும் அமையுமாயின் வெற்றி வாய்ப்பு அதிகம். ஆபிரிக்கக் கவிதையை தமிழாக்கம் செய்யும் போது இரண்டு பண்பாட்டுக்குமிடையிலுள்ள பொதுமையைக் கருத்திற்கொண்டேன். சிங்களக் கவிதையைத் தமிழாக்கம் செய்வது எளிதாய் இருந்தது. அகண்ட இந்தியப் பண்பாட்டுக்குள் இரண்டும் வருவதால் உண்மையில் கவிதை மொழிபெயர்ப்பு ஒரு மறுபடைப்பாகும். Translation சிலவேளைகளில்- மிகச் சில வேளைகளில் மொழிபெயர்ப்பு மூலத்தை விஞ்சுவதுண்டு கம்பன் செய்தது போல.

**➢கவிதை துறையில் புதிதாக காலடி எடுத்து வைத்த சிலர் கவிதையின் உச்சங்களைப் பற்றிய புரிதலின்றி தம்மையும் வாழ விடுகிறார்களில்லை என்று மூத்த படைப்பாளிகள் சிலரை தமது கவிதைகளில் சாடுகின்றமை வரவேற்கத்தக்கதா?**

இரங்கத்தக்கது. இந்த நிலைமை இளங்கவிஞர்களால்பால் பரிவுடையவன் நான். பல கவிதைகளைச் செப்பனிட்டும் தந்திருக்கிறேன். பலரை முன்னுரை எழுதி ஊக்குவித்திருக்கிறேன். ஆனால் அவர்கள் மற்றைய கவிஞர்களின் படைப்புக்களைப் படிப்பதில்லை. பாரதியையாவது முழுக்கப் படித்திருப்பார்களா? என்பது சந்தேகம். சட்டியிலிருந்தால் தானே அகப்பையில் வரும்? எந்தக் கலைஞனும் பயிற்சியின்றி வளர்ந்ததில்லை.

**➢பத்து பதினைந்து கவிதைகளை எழுதி விட்டால் உடனே ஒரு கவிதை நூலை வெளியிட்டு விடலாம் என்று கருதும் இன்றைய போக்கு பற்றி என்ன கருதுகிறீர்கள்? இப்போக்கு இளம் தலைமுறையைவளர்த்துவிடுவதாகஅமையுமா?**

தன் படைப்பைப் பல தடவை திருத்தி எழுதத் தயங்கக்கூடாது. ஹெம்மிங்வே தன் நூலை 22 தடவை திருத்தி எழுதினாராம். செம்மையை நோக்கி சிறகை விரிப்பது தான் சிருஷ்டி. செதுக்கச் செதுக்கச் சிலை அழகு பெறும். நூல்வெளியிடுவதில் அவசரம் கூடாது. விரைந்து நூல் வெளியிடுவோரை சர்ப்ப சர்ப்ப என்று பண்டிதமணி பகிடி பண்ணுகிறார்.

**➢பழந்தமிழ் இலக்கியத்துடன் உங்களுக்கு ஈடுபாடும் அதிகம் புலமையும் உண்டு. இவை தங்களின் கவிதை உருவாக்கத்தில் எப்படி உறுதுணையளிக்கின்றன?**

நாம் சூனியத்திலிருந்து தோன்றியவர்களல்ல. நீண்டதோர் இலக்கிய மரபின் வாரிசுகள். சங்க இலக்கியம், நீதிநூல்கள், பக்தி இலக்கியம், நாட்டார் இலக்கியம், பாரதி என்றெல்லாம் பன்முகப்பட்ட தமிழ் இலக்கியத்தோடு ஓரளவேனும் பரிச்சயம் இருப்பது எனக்கு அனுகூலம். பழந்தமிழ் இலக்கியத்தில் காலூன்றி நிற்கிறேன். என் பாட்டான் பார்த்த உலகம் ஒன்று. என் அப்பன் பார்த்த உலகம் வேறொன்று. பாட்டன் தோளிலும் அப்பன் தோளிலும் ஏறி நான் பார்த்த உலகம் பிறிதொன்று. நான் முந்தையோர் தோள்களில் நிற்கிறேன். நீண்டதூரம் தெரிகிறது.

**➢தங்களின் கவிதைகளுக்கு அலாதியான வீச்சும் அழகும் மரபில் தோய்ந்த இறுக்கமும் இருப்பதாக நாம் கருதுகின்றோம். இந்தப் புலமைப் பின்னணியையும் புதுக்கவிதை பற்றிய தங்களது கருத்தையும் சொல்லுங்கள்?**

மரபுவழி வடிவங்களையே நான் பெரிதும் கையாளுகிறேன். அவற்றினோடு சமகாலப் பிரச்சினைகளைச் சொல்வதில் எனக்குச் சிரமமில்லை. பழைய வடிவங்களில் பழைய செய்திகளையே சொல்லிக் கொண்டேயிருக்கும் பண்டிதர்களும் தோற்றுப் போகிறார்கள். மரபும் தெரியாமல் புதுக்கவிதையின் பண்பும் புரியாமல் சொற்றொடர்களை அடுக்கும் பாமரர்களும் தோற்றுப் போகிறார்கள்.

**➢புதுக்கவிதை பற்றி?**

யாப்பு விதிக்கும் கட்டுப்பாடுகளை பொருட்படுத்தாதது புதுக்கவிதை. அலங்காரம் எதுவுமின்றி புனைவு இன்றி கவிஞன் தன் கருத்தை சுயம்புவாகத் தருவது புதுக்கவிதை எனலாம். புதுக்கவிதையாளர் உருவகங்களையும் படிமங்களையும் அடுக்குகிறார்கள். புதுக்கவிதை பற்றி என் கருத்தைக் கேட்கிறீர்கள். பண்டிதர்கள் பலர் எப்படி யாப்பு என்ற சட்டகத்தை (Frame) வைத்துக்கொண்டு வெற்றுச் சொற்களை அடுக்குகிறார்களோ அப்படியே பெரும்பாலான புதுக்கவிதைக்காரர்கள் சட்டகமின்றியும் தெளிவான கருத்தின்றியும் வெற்றுத் தொடர்களை அடுக்குகிறார்கள். இரண்டுமே கவிதையில்லை.

**➢நல்ல கவிஞன் சிறந்த பாடலாசிரியனாக முடியும். ஆனால் சிறந்த பாடலாசிரியன் நல்ல கவிஞனாக முடியாது என்ற கருத்துப்பற்றிய உங்கள் எண்ணம் என்ன?**

மெத்தச்சரி . கவிதை எழுதினாலும் இசைப்பா எழுதினாலும் அதில் கவிதைப்பண்பு இருந்தால் நம் நெஞ்சை தொடும் தாகூரின் கீதாஞ்சலி வசனம் தான். அது கவிதையாய்த் தித்திக்கும். கண்ணதாசனுடைய புஷ்ப மாலிகாவுக்கு கவிதையின் வீச்சு உண்டு. நல்ல கவிஞன் எழுதும் இசைப்பாவில் கவிதைப்பண்பு இருக்கும். வெறுமனே சொற்கூட்டமாக நிறையப் பேர் எழுதுகிறார்கள். இசை கூட்டிப்பாடவும் செய்கிறார்கள்.

**ஈழத்தில் கவியரங்கு செத்துப் போய் விட்டதாக விமர்சகர்கள் கூறியுள்ளனர். நீங்கள் வெற்றிகரமான கவியரங்கக் கவிஞரும் கூட. இதை ஏற்றுக் கொள்கிறீர்களா?**

கவியரங்கு செத்துவிட்டதென்பதை நான் ஒரு காலமும் ஏற்றுக்கொள்ளமாட்டேன். கவிதை ஆதிகாலத்தில் செவிக்குரிய- கேட்டதற்குரிய கலையாகவே இருந்து வந்தது. காலப்போக்கிலேயே கவிதையை ஏட்டிலே அல்லது அச்சிலே பார்க்கின்ற வழக்கம் ஏற்பட்டது. ஏட்டில் பார்த்துப் படித்தாலும் எம்முடைய மனதுக்குள்ளே மனச்செவிக்குக் கவிதையினுடைய ஓசை கேட்டுக் கொண்டு தான் இருக்கும். கவிதையோடு நிரம்பிய பரிச்சயமும் ஊடாட்டமும் உடையவர்கள் இதை உணர்வார்கள். நான் கவிதையைப் படிக்கின்றபோது சிலவேளை முதலாவது பகுதியில் அல்லது முதலாவது பகுதி முடிவடைவதற்கிடையில் என் மனதுக்குள் அக்கவிதைக்குரிய இனங்காணப்ப ட்ட ஓசையைக் கண்டறிந்து நான் அதற்கு மாறி விடுவேன்.

நீங்கள் ஒரு கவிதையை உரத்து வாசிக்கும்படி தருவீர்களாயின் நான் கொஞ்சநேரம் மௌனமாகப் பார்த்து விட்டு படித்தால் ஒரே மூச்சில் சரியான ஓசைக்குப் போவேன். அவசாசம் தராமல் வாசிக்கச் சொன் னால் ஒரு சில வரிகள் தாண்டுகின்ற அள விலே சரியான ஓசைக்கு வந்துவிடுவேன். இது என்னுடைய தமிழ்க் கவிதைப் பரிச்சயத்தால் வந்தவொரு விடயம். கவியரங்குகளிலே என்ன நடக்கிறது என்றால்நாங்கள்எங்களுடைய கவிதைகளைப் படிக்கின்றோம். அவற்றை நேயர்கள் கேட்கிறார்கள். அவர்களுக்கும் எங்களுக்கும் இந்த ஓசை பற்றிய ஒரு பொதுமை இருக்கும். அவர்களுக்குப் பரிச்சயமானதாக இருக்கும். நான் முன்பு குறிப்பிட்டேனே லயம்... நான் படிக்கின்ற லயம் எந்த லயத்திலே உணர முடியும். நவீனமாகச் சொல்வதானால் ஒரு Wave.Length இல் அலைவரிசையிலே இருசாராரும் கவிஞனும் கேட்கிற ரசிகனும் இணைந்து கொள்கின்றனர். இதுதான் அங்கே நடக்கிறது.

இப்பொழுது கவிதை கட்புலமாகிவிட்டது என்று ஒரு கட்சி பேசுகிறது. அச்சுவாகனம், நூற்பண்பாடு முதலியவற்றால் எல்லாமே கட்புலனுக்குரியனவாகி மௌன வாசிப்புக்கு உரியன ஆகிவிட்டாலும் கூட எங்களுடைய மனச்செவிக்கு கவிதையினுடைய ஓசை, லயம் கேட்டுக்கொண்டேயிருக்கும்.

ஆபிரிக்க கவிதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த Ulli Bier எனும் ஜேர்மனியர் சொல்லியிருக்கிறார் கவிதை தன்னுடைய வேர்களை நேரக்கித் திரும்பவேண்டும். பூர்வீக ஆபிரிக்காவில் கவிதை படிக்கப்பட்டது மட்டுமல்லாமல் பாடப்பட்டது. கூடவே ஆடப்பட்டது. இவ்வாறு கவிதையை மீள வேர்களை நோக்கி திருப்பவேண்டும். அதாவது அதனை இசையோடு சேர்க்க வேண்டும் என்று சொல்லியுள்ளார். இந்தக் கருத்து தற்போதைய நவீன காலத்தில் இருக்கிறது என்பதனைத்தான் சொல்ல வருகின்றேன். கவிதை கட்புலமாகிவிட்டது. ஓசையை விட்டுப் பிரிந்து வந்துவிட்டது என்கிற கட்சி யைத் தூக்கிப் பிடிக்கிறார்கள். நான் சொன்ன மேற்படி உல்லிய கருத்தும் நவீன காலத் தில் இருக்கின்றதென்பதை நினைவிற் கொள்ளவேண்டும்.

**➢நிறைவாக தற்கால இளம் கவிஞர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

இன்றைய கவிஞர்களிடமுள்ள அடிப்படைப் பிரச்சினை ஒன்று குறித்துக் கருத்துக் கூறுதல் வேண்டும். அவர்கள் பழந்தமிழர் இலக்கியங்களைப் படிக்கிறார்கள் இல்லை. இப்படிச் சொல்கிறதாலே அவர்கள் என்மீது கோபம் கொள்ளக்கூடும். படிக்கிறவர்கள் ஒரு சிலபேர் இருக்கவும் கூடும். சரி பழசுதான் படிக்கவில்லை. நவீனதமிழ்க் கவிதைகளைத் தானும் படிக்கின்றார்களா? இன்றைய புதுக் கவிஞர்கள் நமது மரபுத் தமிழ்ச் செழுமையை அறிந்து கொள்ள வேண்டுமென்பதே எனது அறிவுரையாகும்.

**நேர்காணல்:**
**ஜெயம் ஜெகன்**



# ஆழிப்பேரலை காவு கொண்ட




யாழ்.பல்கலைக்கழகம்



மணற்காடு



புலோலி சூசையப்பர் ஆலயம்



உடுத்துறை



# ண்ட உறவுகளுக்கு அஞ்சலி!













முல்லைத்தீவு சுனாமி நினைவாலயம்













மன்னார் பள்ளிமுனை லூசியா ம.வி.





பூந்தோட்டம் நரசிங்கர் ஆலயம்

(படங்கள்:- சோபிகா, மகாலிங்கம்,பொற்பதி, தும்பளை, குருமன்காடு, மன்னார், பனிக்கன்குளம் செய்தியாளர்கள்)



# 50 நாள் பிரதமர் பொருளாதாரத்தை சீரழித்து விட்டார்!

## மகிந்த மீது சஜித் சீற்றம்



(கொழும்பு)

50 நாள் அரசியல் நெருக்கடியின் போது, பிரதமராகப் பதவி வகித்த மகிந்த ராஜபக்ஷ நாட்டின் பொருளாதாரத்தைச் சீரழித்து விட்டார் என்று அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

வறிய மக்களுக்காக வீடுகளை அமைப்பதற்கு, வீடமைப்பு அமைச்சுக்காக ஒதுக்கப்பட்ட 2600 மில்லியன் ரூபா இந்தக் காலகட்டத்தில் திறைசேரிக்குத்திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அடுத்த ஓராண்டு காலப் பகுதியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இணைந்து பணியாற்ற வேண்டும்.

2015 இல், இரண்டு பேரும் இணைந்து பணியாற்றுவதற்கே மக்கள் ஆணை வழங்கியுள்ளனர். இது இரட்டை அதிகாரம். யாரும் தனி ஆதிக்கம் செலுத்த முடியாது" என்றும் சஜித் தெரிவித்துள்ளார். கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# ஆழிப்பேரலையால் உயிர்நீத்த மக்களுக்கு அஞ்சலி



(ஹற்றன்)

ஆழிப்பேரலை அனர்த்தம் இடம்பெற்று, நேற்றுடன் 14 ஆண்டுகள் நிறைவடைந்ததை நினைவுகூரும் வகையில் மலையக மக்கள் தங்களது அஞ்சலியைச் செலுத்தினர்.

ஹற்றன் பொலிஸார், நகர வர்த்தகர்கள் மற்றும் ஹற்றன் டிக்கோயா நகர சபையின் ஏற்பாட்டில் ஹற்றன் புத்தர் சிலைக்கு முன்னால் இந்த அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.(இ-7)

# துப்பாக்கிச் சூட்டில் நால்வர் பலி! 20 பேரிடம் வாக்குமூலம் பதிவு

(தங்காலை)

தங்காலை - குடாவெல்ல மீன்பிடித் துறைமுகத்தில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் 20 பேரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாக விசாரணைக்குழு தெரிவித்துள்ளது.



இதன்போது, சம்பவத்துடன் தொடர்புடைய பல முக்கிய தகவல்கள் தெரியவந்துள்ளதாகத் தங்காலை பிரதேசத்திற்குப் பொறுப்பான உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், மேலதிக விசாரணை நடவடிக்கைகள் காரணமாகக் குறித்த தகவல்களின் இரகசியத்தன்மையைத் தொடர்ந்தும் பாதுகாக்க வேண்டியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் காலை மேற்கொள்ளப்பட்ட இந்தத் துப்பாக்கிப்பிரயோகத்தில் 4 பேர் உயிரிழந்த நிலையில், 8 பேர் காயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)



யாழ்.தெல்லிப்பழைப் பிரதேச செயலகமும் கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்திய கலாசார விழா அண்மையில் நடைபெற்றது. தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வட மாகாண மகளிர் விவகாரம் புனர்வாழ்வளித்தல் சமூக சேவைகள் மற்றும் கூட்டுறவு அமைச்சின் செயலாளர் திருமதி ரூபினி வரதலிங்கம், சிறப்பு விருந்தினராக கலாபூஷணம் வி.கே.நடராசா, கௌரவ விருந்தினராக சமாதான நீதவான் செ.திருமாறன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். இந்நிகழ்வில் மாருதப்புரவீகம் எனும் நூல் வெளியீடும் மூத்த கலைஞர்கள் கௌரவிப்பும் பல்வேறு கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## புத்தகம்

சிலபேர் புத்தகம் எழுதினால் அதற்குப் பரிசு கொடுக்கலாம் போலத் தோன்றும்! சிலபேர் புத்தகம் எழுதாமல் இருந்தால் அவருக்கு ஏதாவது பரிசு கொடுக்கலாம் போலத் தோன்றும்!

ஒரு நல்ல புத்தகம் அறிவை வளர்க்க வேண்டும். படிக்கப் படிக்க அறிவு வளரும். அறிவு வளர வளர பண்பாடு வளரும் என்று சொன்னார் ஒரு பெரியவர்.

புத்தக வாரம் என்று கொண்டாடுகிறார்களே எதற்காக? புத்தக வியாபாரம் பெருக வேண்டும் என்பதற்காகவா? அது மட்டும் நோக்கம் இல்லை!

படிக்கும் பழக்கம் நிறையப் பேருக்கு வர வேண்டும். நல்ல நூல்களைப் படிக்க வேண்டும். படிப்பில் இருந்து அறிவு. அறிவில் இருந்து பண்பாடு என்று போகவேண்டும்.

படித்தவர்களை எல்லாம் அறிவாளிகள் என்று ஒத்துக்கொள்ள முடியாது. அறிவாளிகளை எல்லாம் பண்பாட்டில் உயர்ந்தவர்கள் என்று ஒத்துக்கொள்ள முடியாது.

அப்பாவிகளை விட அறிவாளிகள் ஆபத்தானவர்கள் என்று சொன்னார் ஒருத்தர். அறிவாளிகள் அறிவைத் தவறான வழிக்குப் பயன்படுத்தினால் அதனால் உண்டாகும் ஆபத்து அதிகம்.

சிலபேர் அறிவைப் பயன்படுத்தி என்ன செய்து கொண்டு இருக்கிறார்கள் தெரியுமா? மிக நவீனமான வெடிகுண்டுகள் தயார் செய்கிறார்கள்!

"இது என்னத்துக்கு? சண்டை போடுவதற்குத் தானே!" என்று கேட்டால், "இல்லை... சமாதானத்துக்காக" என்று சொல்கிறார்கள்!

ஐக்கிய நாடுகள் ச்பையில் ஆயுதத்தடை நிலையம் ஒன்று இருக்கு. அங்கே இருந்த பெரிய டாக்டர் பைசண்ட் படேல் என்ன சொன்னார் தெரியுமா?

"ஒரு போர் விமானம் தயார் செய்வதற்கு 50 கோடி டொலர் பணம் செலவாகிறது. இந்தப் பணத்தை உலக நலவாழ்வு ஸ்தாபனத்திடம் கொடுத்தால், இந்த உலகத்தில் மலேரியா, தொழுநோய் - சருமநோய் சுத்தமாக இல்லாமல் செய்துவிடலாம்" என்று சொன்னார்.

புத்தகம் படிப்பதால் கிடைக்கும் அறிவை அறிவுபூர்வமாகப் பயன்படுத்தினால் தான் பண்பாடு வளர்ந்ததாக அர்த்தம்.

எல்லாப் புத்தகமும் வாழ்க்கைக்குத் துணையாக ஆகிவிட முடியாது! திருக்குறளைத்தான் வாழ்க்கைத் துணை என்று சொல்கிறோம்.

பல புத்தகங்களை "பஸ் துணை" என்று வேண்டும் என்றால் சொல்லலாம்... பஸ் பிரயாணம் முடியும் வரைக்கும் அது துணையாக இருக்கும். அதற்குப் பின்னர் பிரிந்து போய் விடும்...

சில புத்தகங்கள் ஒரு வாரத்துக்குத் துணையாக இருக்கும். அதற்குப் பின் போய்விடும்... அடுத்த வாரத்துக்கு இன்னொன்று வாங்க வேண்டும்...

கடையில் போய்... "இந்த வாரம் இந்தப் பத்திரிகை வந்துட்டுதா?" என்று தான் கேட்போம்!

இந்த வாரம் "திருக்குறள்" வந்து விட்டுதா என்று கேட்பதில்லை! அது எப்பவும் நம்ம கூடவே இருக்கிறது. நல்ல புத்தகத்துக்கு அது தான் அழகு.

"கற்காமல் இருப்பதை விட பிறக்காமல் இருப்பதே மேல். ஏனென்றால் அறியாமை தான் கஷ்டங்கள் அனைத்திற்கும் காரணம்" என்கிறார் பிளேட்டோ!

கொஞ்ச நாளைக்கு முன்னால் ஒரு பத்திரிகைச் செய்தி, அமெரிக்காவில் "கிளின்டன் வில்லி" என்னும் இடம். அங்கே இருப்பவர்கள் "ருடால்ப்" தம்பதியர். இவர்கள் புத்தகமாக வாங்கிக் குவித்து வைத்திருக்கிறார்களாம். வீடு முழுவதும் நிரம்பிப் போய்விட்டது.

அதனால் பக்கத்தில் உள்ள வீட்டை விலைக்கு வாங்கி அங்கே குடிபோய் விட்டார்களாம். அவர்களிடம் 42 ஆயிரம் புத்தகம் இருக்கிறதாம். 1925 இல் பேர்னார்ட்ஷாவுக்கு இலக்கியத்துக்கான நோபல் பரிசு கொடுத்திருக்கிறார்கள்! அப்பவும் அவர் தமாஷாகச் சொன்னாராம்,

"இந்த வருடத்தில் நான் புத்தகம் எதையும் எழுதி வெளியிடவில்லை! உலகம் அதைக் கண்டு விடுதலை உணர்ச்சியோடு சந்தோசப்பட்டு எனக்கு நன்றி பாராட்டிச் செய்த காரியம் இது!" என்றாராம்.

# யாருடன் யார் இருக்கிறார் என்பதை மக்கள் அறிவர்

## வியாழேந்திரன் விளக்கம்



(ஏறாவூர்)

என்னைப் பற்றி குறைகூறும் மகான்கள் யோக்கியமானவர்களா? என்பதை மக்கள் புரிந்து கொள்வார்கள் எனப் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். வியாழேந்திரன் தெரிவித்துள்ளார். மகிந்தவுடன் இணைந்து கொள்ள பணம் பெற்றுக்கொண்டதாக குற்றச்சாட்டு சுமத்தப்படுவது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில், "நான் மகிந்தவோடு இணைந்து கொண்டேன் என்று கூறுகின்றவர்கள் முதலில் அதனை நிரூபிக்க வேண்டும். ஒன்றைத் தெளிவாகப் புரிந்து கொள்ளுங்கள்.

நான் ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் அவருடன் இணைந்து அவர் தலைமையிலான அமைச்சரவையிலேயே அங்கம் வகித்தேன். இதை எங்கள் பகுதி பாமரனும் புரிந்து கொள்வார். உண்மையில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி செய்தாலும் அந்த ஆட்சியும் ஜனாதிபதிக்கு கீழ் தான் இருக்கிறது.

மகிந்த ராஜபக்ஷவிடமிருந்து ஏதாவது வாங்கினால் நிரூபியுங்கள். அல்லது அவருடன் அவரது கட்சியில் இணைந்திருந்தால் அதையும் நிரூபியுங்கள். ஆரம்பத்தில் ஐம்பது கோடி என்றார்கள். தற்போது ஐந்து கோடி என்கிறார்கள். என் வீட்டு நாய்க்கும் அந்த எண்ணம் இல்லை.

அரசியலுக்கு வந்த பிறகும் தொழில் செய்தே நாங்கள் வாழ்கிறோம். முன் கதவால் சென்று பதவி பெற்றது உண்மை. அது ஒரு வேளை கையூட்டாகத் தெரியலாம்.

அது மக்களுக்குச்சேவை செய்வதற்காகவே! இவ்வாறு என்னை நோக்கி கைநீட்டுபவர்கள் கடந்த காலங்களில் தாங்கள் சந்தித்த விமர்சனங்களை ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். அத்துடன் தங்களை சுய பரிசோதனையும் செய்ய வேண்டும்.

என்னைத் துரோகி என்று கூறுமளவிற்கு நான் யாரையும் காட்டியும் கொடுக்கவில்லை. யாரையும் கடத்தவுமில்லை. யாரையும் கொல்லவுமில்லை. யாரையும் துஷ்பிரயோகம் செய்யவுமில்லை. என் இனத்தின் நிலத்தையும் வளத்தையும் காட்டிக் கொடுக்கவுமில்லை. கிழக்கில் ஒரு தலைமைத்துவம் வந்தால் சிலர் இலகுவாக துரோகிப் பட்டம் வழங்கிவிடுவது இயற்கையாகி விட்டது.

தயவு செய்து புண்ணியம் கிடைக்கும் பிரதேசவாதத்தை நேரடியாகவோ, மறைமுகமாகவோ, சில ஊடகங்கள் வாயிலாகவோ வளர்த்து விடாதீர்கள். எம் கிழக்குத் தமிழ் மக்களைப் பாதுகாக்க நாம் எந்த எல்லைக்கும் எவ்வாறும் செல்லத்தயார்.

என்னை இன்னும் சிலரோடு இணைத்து மகிந்தவோடு சேர்த்து பாராளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார கருத்து வெளியிட்டிருக்கிறார். அவருக்கு பதில் சொல்ல வேண்டிய அவசியம் எனக்கு இல்லை. காரணம் என் சமூகத்தைச் சேர்ந்தவர் அவர் இல்லை. இருந்தாலும் மக்களுக்கு தெளிவு படுத்த வேண்டிய கடமை எனக்கு உள்ளது.

அதன்படி, அவ்வாறு மகிந்தவிடம் இருந்து எதையாவது பெற்றிருந்தால் அதை நிரூபிக்கலாம். இவ்வாறு பொய்யான கட்டுக் கதைகளை வெளியிட்டு நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார தன்னை நல்லவன் போல வெளிக்காட்ட முனைகிறார். அத்துடன் அவர் கடந்த காலங்களில் ஊடகங்களால் எப்படி பேசப்பட்டார். அவருடைய மகன் மீது எவ்வாறான குற்றச்சாட்டுக்கள் எழுந்தன என்பதை அவர் சார்ந்த மக்கள் அறிவார்கள்.

மேலும், என்னைப் பற்றியும் என்னுடைய நடவடிக்கை பற்றியும் விமர்சிக்கும் சிலர் முதலில், உங்கள் சார்ந்த மக்கள் மீது நீங்கள் என்ன செய்து இருக்கின்றீர்கள் என்பதை உங்களுக்கு மனச்சாட்சி இருக்குமாக இருந்தால் அந்த மனச்சாட்சியிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள்.

வெறுமனே அரசியல் பிழைப்பு நடத்த் வந்தோம் என நினைத்து போட்ட தாளத்தை திரும்பத் திரும்ப போட வேண்டாம் என தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# அம்பாறை மாவட்டத்தில் சுனாமி நினைவு தின நிகழ்வு



கல்முனை

(கல்முனை)

கரையோர மாவட்டங்களில் ஈரமல்லா பேரலையின் கோரப்பசிக்கு பல்லாயிரக்கணக்கான உயிர்கள் காவு கொள்ளப்பட்ட நினைவு நாள் நேற்றாகும்.

சுனாமி எனும் ஆழிப் பேரலையால் உயிர் நீத்த 14ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்று நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் அனுஷ்டிக்கப்பட்டது.

கல்முனை பிரதேசத்தின் சுனாமி நினைவாலயத்தில் நேற்று காலை 8:50 மணியளவில் ஆழிப்பேரலையால் உயிரிழந்தவர்களை நினைவு கூரும் வகையில் உயிரிழந்தோரின் உறவுகளால் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த அஞ்சலி நிகழ்வு கல்முனை ஷைனிங் விளையாட்டு கழகத்தினரின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

கல்முனை பிரதேசத்தில்1650இற்கு மேற்பட்ட உயிர்கள் 2004ஆம் ஆண்டு சுனாமியால் காவு கொள்ளப்பட்டிருந்தன.

இந்த நினைவஞ்சலியில் கல்முனை வடக்கு பிரதேச செயலக பிரதேச செயலாளர் ஜே.கே. அதிசயராஜ், கல்முனை மாநகர சபை உறுப்பினர் எஸ். ராஜன் மற்றும் உயிர் நீத்தவர்களின் உறவுகளும், பொதுமக்களும் கலந்து கொண்டிருந்தனர்.

14ஆம் வருட சுனாமி நினைவுதின நிகழ்வு காரைதீவு கடற்கரையில் நேற்று இடம்பெற்றது.



காரைதீவு



கடற்கரையிலுள்ள நினைவுத்தூபி முன்றலில் சுனாமி சுடர்கள் ஏற்றப்பட்டு விசேட பூஜை நிகழ்த்தப் பட்டது.

தொடர்ந்து உயிரிழந்த உறவுகளால் கடலுக்குள் சென்று சுனாமி அஞ்சலி செலுத்தப்பட்டது.

காரைதீவு மீனவர் சமூகமும் இந்து சமய விருத்திச் சங்கமும் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

காரைதீவு பிரதேச செயலாளர் வெ.ஜெகதீசன், தவிசாளர் கி.ஜெயசிறில் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்ததுடன் ஆலய பிரதம குருக்களான சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள், சிவஸ்ரீ சாந்தரூபன் ஐயா ஆகியோர் ஆத்மார்த்த பூஜைகளை நடத்தினர். (இ-7)

# இ.தொ.காவுடன் இணைந்து சம்பளப் பிரச்சினைக்கு தீர்வு

## அமைச்சர் திகாம்பரம் தெரிவிப்பு



(கொழும்பு)

அரசியல் ரீதியாக எவருடனும் இணைவதற்குத் தயாரில்லாத போதிலும், தொழிலாளர்களின் சம்பள பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுடன் இணைந்து தொழிற்சங்க ரீதியில் போராடத் தயார் என அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கத்தின் மலையக புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சராக நியமிக்கப் பட்ட திகாம்பரம் நேற்றுப் புதன்கிழமை தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

அதனை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"போராட்டமே மலையக மக்களின் ஆயுதம். ஆனால், அந்த போராட்டம் தற்போது செயலிழந்துள்ளது.

நாட்டில் அரசாங்கமொன்று இல்லாத பட்சத்தில் போராட்டம் நடத்துவதால் எந்தப்பயனும் இல்லை.

இன்று அரசாங்கமொன்று காணப்படுகிறது. இத்தருணத்தில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டும். நான் பொறுப்பேற்றுள்ள இந்த அமைச்சுப் பதவியை மலையக மக்களுக்காகத் துறக்கவும் தயாராக இருக்கிறேன்" எனத் தெரிவித்தார். (இ-7)

# எமது மக்களின் அவல நிலையை நீக்க துரித நடவடிக்கை எடுங்கள்

## அமைச்சர்களிடம் சிறிதரன் எம்.பி.வேண்டுகோள்

(கிளிநொச்சி)

வடக்கு மாகாணத்தின் கிளிநொச்சியிலும் முல்லைத்தீவிலும் பெய்து வரும் கன மழையால் பாதிக்கப்பட்டு முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களின் நிலை தொடர்பாக அவசர கலந்துரையாடல் ஒன்று பிரதமர் காரியாலயத்தில் இடம்பெற்றது.

குறித்த சந்திப்பில் மக்களின் இடர்பாடுகள்,உணவுத்தேவைகள்,வாழ்விடங்களின் நிலை தொடர்பாகவும் சுகாதார தேவைகள் தொடர்பாகவும் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் அமைச்சர்களுக்கு தெளிவுபடுத்தினார்.

மக்களின் இயல்புநிலை முற்றுமுழுதாக பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அவர்கள் தமது அன்றாட தேவைகளை பூர்த்தி செய்ய முடியாமல் விரக்தியில் இருப்பதாகவும் தற்போதும் கிளிநொச்சியில் கனமழை பெய்து வருவதால் தற்போதும் மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாகவும் இந்த காலநிலை தொடர்ந்தால் எமது மாவட்டம் முற்று முழுதாக பாதிக்கும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் அமைச்சர்களுக்கு சுட்டிக் காட்டினார்.

எமது மக்களின் அவல நிலையை நீக்க துரித நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர்களிடம் நாடாளுமன்ற உறுப்பினர் வேண்டுகோள் விடுத்தார்.



குறித்த கலந்துரையாடலில் அமைச்சர்களான வஜிர அபே குணவர்த்தன, அகிலவிராஜ் காரியவசம், ரஞ்சித் மத்தும பண்டார, பிரதமரின் செயலாளர், அமைச்சுக்களின் செயலாளர்கள், அனர்த்த முகாமைத்துவ பணிப்பாளர் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (2)

# தூக்க கலக்கத்தில் வாகனத்தை செலுத்திய சாரதி

## மயிரிழையில் உயிர் தப்பிய பயணிகள்

(காத்தான்குடி)

காத்தான்குடி பிரதான வீதி மருங்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 3 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் மின் கம்பம் என்பனவற்றின் மீது வான் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் கடும் சேதம் ஏற்பட்டிருப்பதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த விபத்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 11 மணியளவில் காத்தான்குடி நகர பிரதான வீதியில் இடம் பெற்றுள்ளது. குறித்த விபத்தில் வானில் பயணித்த சாரதி உட்பட ஏனையோருக்கும் சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளன.

விடுமுறையில் சுற்றுலாச் சென்றவர்கள் பயணித்த வானின் சாரதி தூக்கக் கலக்கத்தில் வானைச் செலுத்திச் சென்றதால் இவ்விபத்து நேர்ந்துள்ளமை ஆரம்பக் கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)



# பாலிதீவு - பயணத்தின் அனுபவம்

08


சோ.நிக்கஜ்
அரியாலை.




கிந்தாமணி கிராமம் (Kintamani Village) அமைந்துள்ளது ஒரு மலைப் பாங்கான இடத்திலா இங்கு மென்மையான குளிர் விரவிக்கிடக்கும். ஒரு மாதிரியாக வயன் எங்களை திரட்டிக் கொண்டு சென்ற இடம் **Holy spring water temple** என அழைக்கப்படும் **Tirita Empul** எனும் இடத்திற்காகும். இங்கு நுழைவுக் கட்டணமாக 30,000 **IDR** கள் வசூலிக்கிறார்கள்.



இக்கோவில் கி.பி 10ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் இயற்கையான நீரூற்று ஒன்றை சுற்றி அமைக்கப்பட்டது. இங்கு தோன்றும் நீரூற்றினை இரண்டு குளங்களில் 30 துளைகள் ஊடாக வழிந்தோட விட்டிருக்கிறார்கள்.

புனித நீராக கருதப்படும் இந் நீரூற்றில் நீராடுவது மத ரீதியாக தங்களை சுத்திகரிக்கும் சடங்காக கருதப்படுகிறது. குளிப்பதற்கு மத, இன ரீதியான தடைகள் ஏதுமில்லை. மாற்று உடைகளை எடுத்துச்செல்வது சிறந்தது. இங்கு பிரதான தெய்வமாக விஸ்ணு வணக்கப்படுகிறார்.

இதை விட சிதிலமடைந்த சிவலிங்கம் மற்றும் நந்தி ஒன்றினையும் காணக்கூடியதாக இருந்தது.

அடுத்ததாக சென்ற இடம் Goa Gajah அல்லது Elephant cave என்று அழைக்கப்படும் இடத்திற்காகும். இதற்கு நுழைவுக் கட்டணமாக 50,000 IDR கள் அறவிடுகிறார்கள்.

ஒன்பதாம் நூற்றாண்டை சேர்ந்த இவ் யானை மலைக்குகை முகப்பில் யானை போன்ற உருவத்துடன் மலையினை குடைந்து வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதன் முகப்பில் இருந்து உள்நுழையும் போது யானை ஒன்றின் வயிற்றினுள் நுழைவது போன்ற தோற்றப்பாட்டினை உண்டு பண்ணும். இக்குகை இங்கு தவம் செய்வதற்காக முனிவர்களினால் வெறும் கைகளால் சுரண்டி செய்யப்பட்டதாக மரபுவழிக்கதையொன்றும் நிலவுகிறது. அது போக அகஸ்திய முனிவர் தவம் செய்த குகையாகவும் அறியப்படுகிறது.

குகையின் உட்புறம் ஒரு சிறிய நீண்ட அறை போல காணப்படுகிறது. பிள்ளையார் மற்றும் சிவலிங்கங்களினை உள்ளே காணலாம். பிள்ளையார், சிவன் என குகையின் உள்ளே இருந்தாலும் இது புத்தருக்குரிய இடம் என பௌத்தர்களினால் கோரப்பட்டிருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

என்னதான் இந்த குகை ஒன்பதாம் நூற்றாண்டை சேர்ந்ததாக இருந்தாலும் 1920களில் தான் இது கண்டுபிடிக்கப்பட்டது.

பின்னர் அகழ்வாராய்ச்சியாளர்களினால் முழுமையாக வெளிக்கொணரப்பட்டது. இதனோடு அமைந்திருக்கும் தீர்த்தத்தடாகம் 1950களில் தான் கண்டுபிடிக்கப்பட்டது யுனெஸ்கோவின் புராதன இடங்கள் பட்டியலில் இவ்விடமும் இடம் பெறுகின்றது.

பார்க்கும் இடமெல்லாம் கோவில்களாய் இருப்பதானால் தான் பாலியை கோவில்களின் நகரம் என அழைக்கிறார்கள் போலும்.

அப்பொழுது தான் மழை பெய்து ஓய்ந்திருந்தது. மெல்லிய தூறல்கள் விழுந்த வண்ணம் இருந்தன. களைப்பிற்கும் மத்தியில் அது ஒரு விதமான உற்சாக மனநிலையையே தந்தது.

ஆனாலும் எங்கள் துரதிர்ஷ்டம் நீர்வீழ்ச்சியில் எங்களால் குளிக்க முடியவில்லை.

**Unud** இல் **tegenungan waterfall** ற்கே எங்களை வயன் அழைத்துச்சென்றிருந்தார். இதற்கு நுழைவுக் கட்டணமாக 15,000 IDR கள் செலுத்தினோம்.



யானை மலைக்குகைகள்

காலையில் எல்லாம் நன்றாக இருந்த அருவியில் மதியத்திற்கு பின் எங்கிருந்தோ உடைந்த வாய்க்காலில் இருந்து குப்பை கலந்து விட்டது. அதனால் குளிப்பதனை தற்காலிகமாக நிறுத்தியிருந்தார்கள்.

மூன்று நாட்களாக அலைந்து திரிந்து களைத்த எங்களுக்கு ஒரு நாள் ஓய்வெடுத்தால் பரவாயில்லை போல தோன்றியது.

பயணத்தில் மொத்தம் 8 நாட்கள் பாலியில் தங்கியிருக்க போவதனால் கொஞ்சம் ஓய்வெடுப்பதில் தப்பில்லை அவசியமும் கூட). அதற்காக முழுநாளும் சோம்பி படுத்திருக்காமல் மதியத்துடன் கிளம்பி சுற்றியிருக்கும் கடைகளுக்கும் பின்னர் Kutaற்கு அருகிலிருக்கும் **Semayak** (செமயாக்) கடற்கரைக்கும் செல்வதற்கு திட்டமிட்டோம்.

பொதுவாக இரவு நேரங்களில் நாங்கள் பொடிநடையாக கிளம்பி உலா வருவோம்.

கடற்கரை அருகில் என்பதனால் சற்று நேரம் அங்கே நடைபோடுவோம் அல்லது உட்கார்ந்து கதை பேசுவோம்.

(பயணம் தொடரும்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1599

### குறிஞ்சி

துன்பத்தில் இருப்பவனை
உடனே போய் பார் செல்வத்தில்
இருப்பவனை கூப்பிட்டால் மட்டும் போய்ப்பார்




### மதுமிதா

முடியும் என்றால் முயற்சி செய்,
முடியாது என்றால் பயிற்சி செய்



### கொடிமலர்

தினமும் ஓய்வில்லாமல்
உழைப்பதால்தான் எல்லா இடத்திலும்
உயரத்தில் உள்ளது கடிகாரம்




### சுமங்கலி

சோதனைகளுக்கு துணிந்தவனே
சாதனைக்குச் சொந்தக்காரன்



### இளங்கொடி

வீரம் என்பது எதிர்த்து போராடுவதே
தவிர சந்தர்ப்பம் வரும் போது
ஒளிந்திருந்து தாக்குவதில்லை



### லக்ஷ்மி

இந்த உலகமே உன்னைத் திரும்பிப்
பார்க்க வேண்டுமென்றால்
நீ யாரையும் திரும்பிப் பார்க்காதே



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

130

## பிரித்தானியரின் ஆரம்ப ஆட்சிக்காலமும் தமிழரும் (கி.பி. 1796-கி.பி. 1850)



“மேற்குக் கரையோரமாக தொண்ணூறு மைல்களுக்கும் கரையோரத்தை அண்டிப் பிற இடங்களிலும் கால்வாய்கள், முகத்துவாரங்கள், குடாக் கடல்கள் வழியாக நீர்ப்பயணம் மேற்கொள்ளக் கூடியதாக இருந்தது. 1867 இல் மலைநாட்டில் புதிதாகத் திறக்கப் பட்ட புகையிரதப் பாதையைத் தவிர இக்கால கட்டத்தில் வடக்கில் வேறெந்தப் புகையிரதப் பாதையோ நெடுஞ்சாலையோ இருக்கவில்லை”

அவர்களுடைய நிலங்களின் பெறுமதி அதிக மாகவும் தீபகற்பத்தில் நிலம் கிடைப்பது குறைவாகவும் இருந்ததனாலேயே மக்கள் தயக்கம் காட்டியிருக்க வேண்டும்.

இருப்பினும் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது அவர்களின் நிலங்களை அரசாங்கம் சுவீகரித்து தீபகற்பத்தில் வீதிகளை அமைப்பதற்குப் பணத்தையும் தொழிலாளரையும் பயன்படுத்தியது.

முடிவில் இந்தப்புதிய முன்னேற்றங்களைக் கண்டபோது அவர்கள் தமது தியாகங்களை யிட்டு மகிழ்ச்சியடைந்தனர்.

பெரிய வீதிகள் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்குப் பயன்பட்டதுமன்றி தீபகற்பத்துத் தமிழர் மத்தியில் நெருக்கமான பரஸ்பரத் தொடர்புகளையும் ஏற்படுத்திக் கொள்ள வழிவகுத்தது.

குடும்பம் மற்றும் கோயில் கொண்டாட்டங்களில் பங்கு பற்றுவது, கலாசார செயற்பாடு, யாத்திரை, பரஸ்பரம் நலம் விசாரித்தல், வெளிச் சந்தையில் பணப்பயிர் வர்த்தகம் போன்ற தொடர்புகளைச் சீராக்கியதுடன் சமூக ரீதியிலும் அபிவிருத்தியடைவதற்கான ஒற்றுமையுணர்வு தமிழரிடையே மேலும் விரிவடைய வழிவகுத்தன.

வீதிகள் வன்னிப் பெருநிலத்திற்கும் கிழக்கு மாகாணத்திற்கும் விரிவாக்கம் பெற்றபோது தமிழரிடையேயான தொடர்புகள் மேலும் வலுவடைந்தன.

தீபகற்பத்தில் நிகழ்ந்த இந்த ஆரம்ப பொருளாதாரச் செயற்பாடுகள், முன்னேற்றங்கள் என்பவற்றுடன் வீதி நெடுஞ்சாலை உருவாக்கமும் இணைந்தபோது யாழ்ப்பாணத் தீபகற்பம் பிரதானமானதொரு தமிழ் மையமாக மாறியது.

யாழ்ப்பாணத் தீபகற்பத்திலும் வன்னிப் பெருநிலப் பரப்பிலும் வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கான அரசாங்க வரவு- செலவுத் திட்டமொன்றுதயாரிக்கப்பட்டிருந்த போதும் கிழக்கில் இத்தகைய கட்டுமானங்கள் சம்பந்தப்பட்ட ஆவணச்சான்றுகள் எதுவும் கிடைக்கப் பெறவில்லை.

25 ஜூன் 1846 ஆம் திகதிய மோர்னிங் ஸ்ரார் பத்திரிகைச் செய்தியின்படி வெஸ்லியன் மதகுரு ஒருவர் பருத்தித்துறையிலிருந்து பயணம் மேற்கொண்டு திருகோணமலைக்கும் மட்டக்களப்புக்கும் சென்றுள்ளார். இவர் தரைவழியாகவோ கடல்மார்க்கமாகவோ சென்றார் என்பது தெளிவில்லை.

ஆயினும் இன்னுமோர் வெஸ்லியன் மதகுருவும் கத்தோலிக்கப் பாதிரியார் ஒருவரும் யாழ்ப்பாணத்திலிருந்து மாட்டு வண்டியில் ஆறு நாட்களாகப் பயணித்து மட்டக்களப்பை அடைந்தனர் என்பதை உணர்த்தும் சான்றுக்குறிப்பு உண்டு. ஆயினும் இந்தப் பாதை கற்கள் நிறைந்ததாகவும் இருமருங்கும் காடும் பற்றையும் கொண்டதாகவும் இருந்ததெனச் சொல்லப்படுகிறது.

10 ஜூன் 1847 மோர்னிங் ஸ்ரார் பத்திரிகையின்படி மலைநாட்டுப் பெருந்தோட்ட உரிமையாளர்கள் திருகோணமலைத் துறைமுகத்திற்கும் மலைநாட்டுக்கும் ஒருவீதியை அமைக்கும் படி அரசாங்கத்தை வற்புறுத்தினர் எனத் தெரிகின்றது.

இதேவேளை புத்தளம் ஊடாக கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு ஒரு வீதி ஏற்கனவே அமைக்கப்பட்டுக் கொண்டிருந்தது. இதே வருடத்தில் யாழ்ப்பாணத்து தீபகற்பத்து வீதிகளின் அபிவிருத்திக்காகவும் யாழ்ப்பாண நகரில் ஒரு வைத்தியசாலையை நிறுவவும் நோயாளிகளுக்கான ஒரு புதிய மண்டபத்தைக் கட்டவும் அரசாங்கம் 4426.00 ஸ்ரேலிங் பவுண்களை ஒதுக்கியது.

1850 ஆம் ஆண்டு வட மாகாணத்துக்கான சட்ட வரவு- செலவு பற்றிய கூற்றொன்று அரசாங்கத்தின் முயற்சிகளைத் தெளிவாகக் காட்டுகின்றது. 16 ஒகஸ்ட் 1854 மோர்னிங் ஸ்ரார் இக்கூற்றை மக்களின் நலன் கருதி மீளப் பிரசுரித்தது.

அரசாங்கம் யாழ்ப்பாணத் தீபகற்பத்துக்கு 2609.09 ஸ்ரேலிங் பவுண்களும் மன்னாருக்கு 462.02 ஸ்ரேலிங் பவுண்களும் வன்னிக்கு 175.00 ஸ்ரேலிங் பவுண்களும் செலவிடப்பட்டது என இது பதிவு செய்கின்றது.

தரைவழிப் பாதைகள் ஊடாக மட்டும் போக்குவரத்து நடைபெறவில்லை. இக்கால கட்டத்தில் போக்குவரத்து கால்வாய்களும் நதிகளும் உபயோகிக்கப்பட்டன.

மேற்குக் கரையோரமாக தொண்ணூறு மைல்களுக்கும் கரையோரத்தை அண்டிப் பிற இடங்களிலும் கால்வாய்கள், முகத்துவாரங்கள், குடாக் கடல்கள் வழியாக நீர்ப்பயணம் மேற்கொள்ளக் கூடியதாக இருந்தது.

1867 இல் மலைநாட்டில் புதிதாகத் திறக்கப்பட்ட புகையிரதப் பாதையைத் தவிர இக்காலகட்டத்தில் வடக்கில் வேறெந்தப் புகையிரதப் பாதையோ நெடுஞ்சாலையோ இருக்கவில்லை.

24 ஜூலை 1842 மோர்னிங் ஸ்ராருக்கு எழுதிய ஒரு வாசகர் அரசாங்கத்தின் வீதி அபிவிருத்திக்கான செயற்பாடுகளையும் மக்களின் நலன்கருதி ஆற்றப்பட்ட ஏனைய சேவைகளையும் புகழ்கின்றார். அரசாங்கம் நாட்டை மேம்படுத்துவதற்குப் பலவற்றைச் செய்ததென்பதில் ஐயமில்லை.

எமது தமிழ்ப்பிரதேசம் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பிருந்த நிலையைத் தற்போதைய நிலையுடன் ஒப்பிடுகையில் முன்னேற்றம் எவ்வாறு பலவழிகளில் நிகழ்ந்துள்ளது எனத் தெரிகின்றது. எமது பிரதேசங்களின் தற்போதைய அபிவிருத்தியடைந்த நிலைக்குக் காரணம் இலங்கை அரசாங்கத்தின் சிறந்த முயற்சியாகும்.

புதிதாக அமைக்கப்பட்ட ஒழுங்கைகள், வீதிகள், பாலங்கள் என்பன அரசாங்கத்தின் பங்களிப்பாக இருந்ததுடன் நிர்வாகக் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும் இவை அதிகமாக உதவியுள்ளன.

(தொடரும்)

# கொங்கோவில் கோர விபத்து 50 பேர் பலி; பலர் படுகாயம்



(கொங்கோ)

மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோவில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கோர விபத்தில் 50 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளதோடு மேலும் பலர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்நாட்டின் மேற்கு பகுதியில் உள்ள கிசன்டு வழியாக அளவுக்கதிகமான பயணிகளுடன் வேகமாக பயணித்த ஒரு பேருந்தும் எதிரே வந்த லொறியும் நேருக்கு நேர் மோதியதாலேயே இந்த கோர விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் 50பேர் உயிரிழந் ததாகவும், படுகாயங்களுடன் பலர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சிகிச்சை பெற்றுவரும் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது. (4-7)

# ஆங்கிலக் கால்வாயில் படகுகளில் தத்தளித்த நாற்பது அகதிகள் மீட்பு

(லண்டன்)

கிறிஸ்மஸ் நாளில் ஆங்கிலக் கால்வாயின் வெவ்வேறு இடங்களில் தத்தளித்த 40 அகதிகளை கடலோர பாதுகாப்பு படையினர் பாதுகாப்பாக மீட்டுள்ளனர்.

உள்நாட்டுப் போர், வன்முறை மற்றும் வறுமை காரணமாக சிரியா, ஈரான், ஈராக், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்கள் அகதிகளாக வெளியேறி, ஐரோப்பிய நாடுகளுக்கு சென்று செய்துள்ளனர். ஒரு படகு பழுதடைந்ததால் அதில் பயணித்தவர்கள் தத்தளித்துக் கொண்டிருந்தனர்.

இதையடுத்து, கடலோர காவல்படை வீரர்கள் ஹெலிகொப்டர் மூலமாகவும், படகுகளில் சென்றும் அவர்களை மீட்டனர். இவ்வாறு ஆங்கிலக் கால்வாயின் 5 இடங்களில் இருந்து 2 குழந்தைகள் உள்ளிட்ட 40 அகதிகள் மீட்கப்பட்டனர்.

மீட்கப்பட்ட அனைவருக்



வண்ணம் உள்ளனர். இவ்வாறு செல்பவர்களில் ஆபத்தான கடல் பயணம் மேற்கொள்ளும்போது பலர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், கிறிஸ்மஸ் நாளன்று அகதிகள் பலர், படகுகள்மூலம் ஆங்கிலக்கால்வாயைக் கடந்து பிரிட்டனுக்குள் நுழைய முயன்றுள்ளனர்.

ஆட்கடத்தும்கும்பல்மூலம் அவர்கள் சட்டவிரோதமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் சிலர் பாதுகாப்பு உடை அணியாமல் சாதாரண படகில் பயணம்

கும் மருத்துவ உதவிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. குழந்தைகள் 2 பேரும் பாதுகாப்பு மையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். பெரியவர்கள் குடியேற்ற அதிகாரிகள் வசம் ஒப்படைக்கப்பட்டனர். மீட்கப்பட்டவர்களில் சிலர் ஈராக், ஈரான் மற்றும் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது.

இதேபோல் கடந்த சனிக்கிழமையன்று பிரிட்டன் நோக்கி சென்ற 16 அகதிகளை பிரான்ஸ் அதிகாரிகள் தடுத்து நிறுத்தி மீட்டது குறிப்பிடத்தக்கது. (4-7)

# அமெரிக்காவின் மிரட்டும் குடியேற்றக் கொள்கை; எல்லையைக் கடக்க முற்பட்ட 8 வயது சிறுவன் பலி

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் குடியேறும் நோக்கில் பெற்றோருடன் அமெரிக்க எல்லையை கடக்க முற்பட்ட 8 வயது சிறுவன் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

குவாத்தமாலாவைச் சேர்ந்த பெஃலிப்பே அலொன்சோ கோம்ஸ் என்ற சிறுவன், தனது பெற்றோருடன் அமெரிக்காவிற்குள் குடியேற முயற்சித்தபோது எல்லைப் பாதுகாப்பு படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

அமெரிக்க - மெக்சிக்கோ எல்லையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த குறித்த சிறுவன், நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மரணமாகியுள்ளார்.

அமெரிக்க - மெக்சிக்கோ எல்லையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த குடியேற்றவாசிகளில், கடந்த வாரம் 7 வய



தான சிறுமியொருவர் காலமானார். அவரது இறுதிக் கிரியை நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்நிலையில், மற்றுமொரு மரணம் சம்பவித்துள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த சிறுவன் கடந்த சில தினங்களாக நோய் வாய்ப்பட்டிருந்த நிலையில் மரணமடைந்ததாக அமெரிக்க எல்லைப்பாதுகாப்பு படையினர் குறிப்பிடுகின்றனர். எனினும், தடுப்பிலுள்ளவர்கள் உரிய முறையில் கண்காணிக்கப்படுவதில்லையென்ற குற்றச்சாட்டுஎழுந்துள்ளது.

இது குறித்து கருத்துத் தெரிவித்துள்ள டெக்ஸாஸ் மாநிலத்தைச் சேர்ந்த காங்கிரஸ் உறுப்பினர் ஜோகுயின் காஸ்ரோ, குடியேற்றவாசிகள் மனித நேயத்துடன் நடத்தப்பட வேண்டும் என்றும், மருத்துவம் உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளை வழங்கி அவர்களுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அவசியம் என்றும் தெரிவித்துள்ளார்.

அதனை விடுத்து குடியேற்றவாசிகளை திருப்பி அனுப்புவதில் அரசாங்கம் கடைப்பிடிக்கும் கொள்கை, குடியேற்றவாசிகளை குறிப்பாக குழந்தைகளை ஆபத்தில் தள்ளும் செயற்பாடென தெரிவித்துள்ளார்.

எனினும், சட்டரீதியான அங்கீகாரமின்றி குடியேற்றவாசிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டார்கள் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அமெரிக்க -மெக்சிக்கோ எல்லையை கடக்க முற்பட்ட குடியேற்றவாசிகள் மீது பாதுகாப்புப் படையினர் கண்ணீர்ப்புகை தாக்குதலை நடத்தினர். குடியேற்றவாசிகள் மீது கற்களை வீசியெறிந்ததாகவும் குற்றஞ் சாட்டப்பட்டது.

இவ்விடயம் ட்ரம்ப் நிர்வாகத்தை கடும் விமர்சனத்திற்குள்ளாக்கியுள்ளதோடு, உரிய விசாரணை நடத்தப்பட வேண்டுமென மெக்சிக்கோ வலியுறுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (4-7)

# பஸ் பாதசாரிகள் மீது மோதி விபத்து 5 பேர் பலி; 21 பேர் படுகாயம்

சீனாவின் தென்கிழக்கே உள்ள Fujian மாகாணத்தில்கடத்தப்பட்ட பேருந்து ஒன்று பாதசாரிகள் மீது மோதியதில் 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

குறித்த பகுதியூடாக சென்ற பேருந்து ஒன்றை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை 3.20 மணியளவில் அடையாளம் தெரியாத மர்மநபர் கத்தி முனையில் கடத்தியுள்ளார்.

இதன் பின்னர் குறித்த பேருந்து வீதியோரம் நின்றிருந்தவர்கள் மீது மோதி விபத்திற்குள்ளானது. இதில் 5 பேர் உயிரிழந்துள்ளதாகவும் அவர்களில் ஒருவர் பொலிஸார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த விபத்தில் 21 பேர் காயமடைந்தனர் என்றும், சம்பவத்திற்கு காரணமாக இருந்த மர்மநபரும்கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அந்நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (4-7)

# வெள்ளை மாளிகையில் தனிமையில் இருக்கிறேன்

## ஜனாதிபதி ட்ரம்ப் டுவிட்டரில் தெரிவிப்பு



(வோஷிங்டன்)

அமெரிக்க - மெக்ஸிக்கோ எல்லையில் பாதுகாப்பு கருதி சுவர் எழுப்ப வேண்டும் எனவும், அதற்காக 500 கோடி டொலர் நிதி ஒதுக்க வேண்டும் எனக்கூறி ஜனாதிபதி ட்ரம்ப் கோரிக்கை வைத்தார்.

ஆனால் இந்த கோரிக்கைக்கு அமெரிக்க எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சி மறுத்து விட்டது. மேலும் அமெரிக்க அரசின் செலவின நிதி மசோதாவை செனட்டில் நிறைவேற்ற எதிர்க்கட்சி முன்வரவில்லை.

இதனால் தொடர்ந்து 3 வது நாளாக அமெரிக்க அரசு நிர்வாகம் முடங்கியுள்ளது. அத்தோடு அரசாங்க ஊழியர்கள் ஊதியம் இன்றி பணியாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டு உள்ளது.

அத்தோடு நேற்று முன்தினம் கிறிஸ்மஸ் பண்டிகை, அதைக்கூட கொண்டாட செல்லாமல், ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வெள்ளை மாளிகையில் தங்கி உள்ளார். இது குறித்து அவர் தனது டுவிட்டர் பக்கத்தில்,

"வெள்ளை மாளிகையில் நான் தனியாக இருக்கிறேன். அமெரிக்க ஷட்டவுனை முடிவுக்குக் கொண்டுவரவும், அவசரமாக தேவைப்படும் எல்லை பாதுகாப்புக்கு ஒரு ஒப்பந்தம் செய்யவும் உழைத்துக் கொண்டிருக்கிறேன்.

ஜனநாயக கட்சி எம்.பி.க்கள் திரும்பி வந்து அமெரிக்க - மெக்ஸிக்கோ எல்லையில் பாதுகாப்பு ஒப்பந்தத்துக்கு அனுமதி அளிக்க வேண்டும். அதற்காக காத்திருக்கிறேன்.

ஆனால் ஜனநாயக கட்சி எம்.பிக்கள் நாட்டை பற்றி கவலைப்படாமல் கிறிஸ்மஸ் கொண்டாடி வருகின்றனர். அவர்கள் நாட்டைப் பற்றி பேசுகிறார்கள். வேடிக்கையாக இருக்கிறது.

ஆனால், நான் வெள்ளை மாளிகையில் ஒரு ஏழை போல உணர்வுடன் தனியாக இருக்கிறேன்" என தெரிவித்துள்ளார். (4-7)

# ஈராக்கில் 20 பேர் கடத்தல் பயங்கரவாதிகள் அட்டூழியம்

(பக்தாத்)

ஈராக் நாட்டில் இருந்து அடித்து விரட்டப்பட்டு சில மாதங்களாக பதுங்கி வாழ்ந்து வந்த ஐ.எஸ்.பயங்கரவாதிகள் கிர்குக் நகரின் அருகேயுள்ள கிராமங்களுக்குள் புகுந்து 20 பேரை கடத்திச் சென்றனர்.

ஈராக்-சிரியா நாடுகளுக்கு உட்பட்ட எல்லைப்பகுதியில் உள்ள முக்கிய நகரங்களை கைப்பற்றி ஆதிக்கம் செலுத்தி வந்த ஐ.எஸ். பயங்கரவாதிகள் அனைவரும் வேட்டையாடி கொல்லப்பட்ட



தாகவும், பலர் உயிருக்கு பயந்து பாலைவனப் பகுதிகளுக்கு தப்பியோடி விட்டதாகவும் ஈராக் பிரதமர் ஹைடர் அல் அபாதி கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் தெரிவித்திருந்தார்.

இதன்மூலம் ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு எதிரான போரில் ஈராக் ராணுவம் முழுமையான வெற்றியை பெற்றதாகவும் அவர் பிரகடனம் செய்தார். எனினும், கிர்குக் மாகாணத்தில் ஐ.எஸ். பயங்கரவாதிகளின் ஆதிக்கம் மீண்டும் தலைதூக்க தொடங்கியதாக அண்மையில் தெரிய வந்தது.

இந்நிலையில், கிர்குக் மாகாணம், ரஷாத் மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்துக்குள் பயங்கர ஆயுதங்களுடன் நேற்று முன்தினம் நுழைந்த ஐ.எஸ் .பயங்கரவாதிகள் 14 பேரை கடத்திச் சென்றனர்.

அருகாமையில் உள்ள மற்றொரு கிராமத்துக்கும் சென்று அங்கிருந்து 6 பேரை கடத்திச் சென்றுள்ளனர் என உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (4-7)

# சூடானில் அரசாங்கத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டம் பாதுகாப்புத் தரப்பினர் கண்ணீர்ப்புகை பிரயோகம்

(கார்டூம்)

சூடானில் அந்நாட்டு அரசாங்கத்திற்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தை கலைக்க, பாதுகாப்புத் தரப்பினர் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மேற்கொண்டனர்.

அந்நாட்டில் காணப்படும் பொருளாதாரப் பிரச்சினைகள் மற்றும் ஜனாதிபதி ஒமர் அல் பஷீரின் மூன்று தசாப்தகால ஆட்சிக்கு எதிராக கடந்த ஒருவார காலமாக ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கூடிய ஆர்ப்பாட்டக்காரர்கள், ஜனாதிபதி மாளிகையை நோக்கி பேரணியாகச் செல்ல முற்பட்டனர்.

இந்நிலையில், அவர்களை கலைப்பதற்காக பாதுகாப்புத் தரப்பினர் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மேற்கொண்டனர். அத்தோடு, வானை நோக்கி துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

நாட்டில் பொருட்களின் விலை அதிகரிப்பதாகவும் அத்தியாவசிய பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகவும் குறிப்பிட்டு சூடான் மக்கள் தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக கடந்த 19 ஆம் திகதி முதல் தொடர் போராட்டம் இடம்பெற்று வருகின்றது. போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட நாட்களிலிருந்து இன்றுவரை சுமார் 12 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

கடந்த 1989 ஆம் ஆண்டு சூடானின் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற ஓமர் அல் பஷீர் 29 ஆண்டு காலமாக பதவியிலுள்ளார். குறித்த போராட்டங்களை கடுமையாக விமர்சிக்கும் ஜனாதிபதி, பொதுச் சொத்துக்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் சேதப்படுத்தி, எரித்து, வன்முறையில் ஈடுபடுவதாகவும் அவ்வாறானவர்கள் துரோகிகள் என்றும் சாடியுள்ளார். (4-7)

# வாகன விபத்து 4 பேர் மரணம்



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தின் ஹைலண்ட்ஸ் கவுண்டி பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் நால்வர் உயிரிழந்துள்ளனர்.

நத்தார் பண்டிகையான நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரு வாகனங்கள் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது.

விபத்து நேர்ந்த பின்னர் இரு வாகனங்களும் தீப்பிடித்து எரிந்து, அடையாளம் காணமுடியாத அளவிற்கு சேதமாகியுள்ளன.

விபத்தின் பின்னர் மூடப்பட்ட வீதி 7 மணித்தியாலங்களின் பின்னரே திறக்கப்பட்டது. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-7)

# கடத்தப்பட்ட ஆர்ஜென்டினா பெண் 32 ஆண்டுகளுக்குப் பின் மீட்பு

(லாபாஸ்)


பொலிவியாவில் ஆட்கடத்தல் கும்பலால் கடத்தப்பட்ட பெண் 32 ஆண்டுகளுக்குப் பின் மீட்கப்பட்டு, அவரது குடும்பத்தினருடன் சேர்த்து வைக்கப்பட்டார்.

பொலிவியாவில் 1980 களில் ஆர்ஜென்டினாவைச் சேர்ந்த ஒரு சிறுமி ஆட்கடத்தல் கும்பலால் கடத்தப்பட்டார். இதுபற்றிப் பொலிஸார் தொடர்ந்து விசாரணை நடத்தினர். ஆனால் அவரைப் பற்றிய எந்தத் தகவலும் வெளியாகவில்லை. இந்நிலையில் கடத்தப்பட்ட பெண் தெற்கு பொலிவியான் பெர்மிஜோ பகுதியில் இருப்பதாக இந்த ஆண்டின் ஆரம்பத்தில் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.

இதையடுத்து பொலிவியா மற்றும் ஆர்ஜென்டினா பொலிஸார் இணைந்து, அந்தப் பெண் குறித்த விபரங்கள் மற்றும் அங்க அடையாளங்களை வைத்து தெற்கு பொலிவியாவில் அவரை தேடும் பணியில் ஈடுபட்டனர். நீண்ட முயற்சிக்குப் பிறகு அந்த பெண்ணைப் பொலிஸார் கண்டு பிடித்தனர்.

ஆட்கடத்தல் கும்பலில் சிக்கியிருந்த அந்தப் பெண்ணையும் அவரது மகனையும் இந்த மாத ஆரம்பத்தில் மீட்டு குடும்பத்தினருடன் சேர்த்து வைத்துள்ளனர். (4-7)

# வணிக நோக்கில் திமிங்கல வேட்டையை மீண்டும் ஆரம்பிக்கவுள்ள ஜப்பான்



(டோக்கியோ)

ஜப்பானில் வர்த்தக அடிப்படையிலான திமிங்கல வேட்டை மீண்டும் வரும் ஜூலை மாதத்தில் ஆரம்பிக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானில் திமிங்கல இறைச்சி விரும்பி உண்ணப்படுகிறது. கடலோர கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பல நூற்றாண்டுகளாக திமிங்கல இறைச்சியை விரும்பி சாப்பிட்டாலும், இரண்டாம் உலகப் போருக்குப் பிறகே அதன் நுகர்வு அதிகரித்தது. தற்போது திமிங்கல இறைச்சி சாப்பிடுவது குறைந்துள்ளது. ஒரு சில பகுதிகளில் இறைச்சிக்காக திமிங்கலங்கள் வேட்டையாடப்படுகின்றன.

அதேசமயம் அறிவியல் ஆராய்ச்சிக்காக ஜப்பான் அரசு குறிப்பிடத் தகுந்த அளவுக்கு திமிங்கலங்களை வேட்டையாடியது. பின்னர் அதன் இறைச்சி விற்பனை செய்யப்பட்டது.

இதற்கு சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். திமிங்கல வேட்டையில் ஈடுபடக் கூடாது என்று சர்வதேச நீதிமன்றம் கடந்த 2014 ஆம் ஆண்டு தீர்ப்பு அளித்தது.

அந்த ஒரு வருடம் மட்டும் வேட்டையை நிறுத்திய ஜப்பான், அடுத்த ஆண்டில் இருந்து 'வேட்டையை மீண்டும் தொடங்கியது.

இந்நிலையில், வரும் ஜூலை மாதத்தில் இருந்து வர்த்தக அடிப்படையில் திமிங்கல வேட்டையை மீண்டும் ஆரம்பிக்கவுள்ளதாக ஜப்பான் அறிவித்துள்ளது.

வர்த்தக அடிப்படையிலான திமிங்கல வேட்டைக்கு சர்வதேச திமிங்கல வேட்டை தடுப்பு ஆணையம் (ஐடபுள்யூசி) தடை விதித்துள்ளது. எனவே, அந்த ஆணையத்தில் இருந்து விலகி விட்டு, திமிங்கல வேட்டையைத் தொடங்க ஜப்பான் திட்டமிட்டுள்ளது. திமிங்கல இறைச்சி சாப்பிடுவது தங்கள் கலாசாரத்தின் ஒரு அங்கம் என்றும் ஜப்பான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (4-7)

# 14 ஆவது ஆண்டு சுனாமி தினம் அனுஷ்டிப்பு



(சென்னை)

சுனாமி தாக்கி நேற்றுடன் 14 ஆம் ஆண்டு நினைவு தினம் உலகெங்கும் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

14 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நேற்று புதன்கிழமை உலகெங்கும் பல்வேறு பிரார்த்தனைகளிலும், மதவழிபாடுகளிலும் உலகவாழ் மக்கள் அனைவரும் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

உயிர்களை இழந்த சொந்தங்கள், கடல்தாயிடம் வேண்டி முறையிட்டு கனத்த இதயத்தோடு கடல்மணல் பரப்பில் அஞ்சலி செலுத்துகின்றனர். கடலில் பால் ஊற்றியும் பிரார்த்தனைகளில் ஈடுபட்டனர்.

தமிழகத்தில் நாகை, வேளாங்கன்னி, கடலூர், சென்னை, கன்னியாகுமரி உள்ளிட்ட இடங்களில் கடலோரப் பகுதிகளை சுனாமி தாக்கியதில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

சுனாமி நினைவு தினத்தை முன்னிட்டு வேதாரண்யம் அருகே அமைச்சர் ஓ.எஸ். மணியன் அஞ்சலி செலுத்தினார். ஆறுகாட்டுத்துறை மீன்பிடி இறங்குதளத்தில் அமைச்சர் ஓ.எஸ்.மணியன், மெழுகுவர்த்தி ஏற்றி மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

கடந்த 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி இந்தோனேஷியாவின் சுமாத்ரா தீவில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கம் காரணமாக இந்து சமுத்திரத்தில் ஏற்பட்ட ஆழிப் பேரலை ஆசிய நாடுகளில் வரலாறு காணாத அழிவை ஏற்படுத்தியது.

அத்துடன் பல்லாயிரக் கணக்காண மக்களை நிர்க்கதியாக்கியது. கோடிக்கணக்கான சொத்துக்கள் மற்றும் உடைமைகளையும் சேதமாக்கியது.

இதில், தமிழகத்தில் மட்டும் 7,941 பேர் உயிரிழந்தனர். அதிகமாக நாகப்பட்டினத்தில் 6,039 பேர் உயிரிழந்தனர். கன்னியாகுமரியில் 798 பேர் உயிரிழந்தனர்.

சுனாமி தாக்கி நேற்றுடன் 14 ஆம் ஆண்டு நினைவுதினத்தை முன்னிட்டு உலகெங்கும்பல்வேறு பிரார்த்தனைகளிலும், மதவழிபாடுகளிலும் உலகவாழ் மக்கள் அனைவரும் அஞ்சலி செலுத்தி வழிபாடுகளில் ஈடுபட்டனர். (4-7)

# இந்தியாவில் மிக நீண்ட பாலம் இந்தியப் பிரதமர் மோடி திறப்பு





(சென்னை)

இந்தியாவின் மிக நீளமான போகிபீல் பாலத்தை பிரதமர் மோடி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை திறந்து வைத்தார்.

ஆசியாவின் இரண்டாவது பாலமாகத் திகழும் இந்த இரண்டடுக்கு பாலத்தின் மேலே மூன்று வழிச் சாலையும் கீழே இரண்டு வழி ரயில் தடமும் அமைக்கப்பட்டுள்ளது.

வடகிழக்கு மாநிலங்களான அசாம், அருணாச்சல பிரதேச மாநிலங்கள் வழியாக ஓடும் பிரம்மபுத்திரா நதியின் வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளை இணைத்து போகிபீல் என்ற இடத்தில் 4.94 கி.மீ. நீளத்தில் இப்பாலம் கட்டப்பட்டுள்ளது

1997 இல் முன்னாள் பிரதமர் தேவேகவுடாவால் அடிக்கல் நாட்டப்பட்டு 2002 இல் அப்போதைய பிரதமர் வாஜ்பாயால் தொடங்கிவைக்கப்பட்டது.

கடந்த 16 ஆண்டுகளாகப் பல்வேறு முறை காலக்கெடுக்களைக் கடந்த பாலம், கடந்த டிசெம்பர் 3 ஆம் திகதி பணிகள் முடிவடைந்து சோதனை ஓட்டம் நடைபெற்றது. ரூ.5900 கோடி செலவில் கட்டப்பட்ட இப்பாலத்தை பிரதமர் மோடி நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.

இந்தப் பாலத்தில் ரயில்கள் இயக்கப்பட்டவுடன் வடகிழக்கு மாநிலங்களில் போக்குவரத்தை மேம்படுத்துவதன் மூலம் இந்தியாவின் கிழக்குப் பகுதிகளில் உள்ள நாடுகளுக்கு ஏற்றுமதி அதிகரிக்க முடியும். வடகிழக்கு மாநிலங்களின் பொருளாதாரம் மேம்படும். வடகிழக்கு பகுதியில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ள எல்லைப் பாதுகாப்பு படையினருக்கு இந்தப் பாலம் மிகுந்த பயனுள்ளதாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7)

# சிறுவர் அரங்கம்

## நீங்கள் தான் அந்தச் சோம்பேறிகள்



ஒரு பழைய கிராமம். அதில் ஒரு கல்மண்டபம். அங்கே எப்போதும் மூன்று சோம்பேறிகள் உட்கார்ந்துகொண்டு வழிப்போக்கர்களை வம்புக்கிழுத்து நேரத்தைப் போக்கடித்துக் கொண்டிருப்பார்கள். ஒருநாள் அந்த வழியே ஒரு வெளியூர்க்காரர் வந்தார். சோம்பேறிகள் வழக்கம்போல் பேச்சு கொடுக்கத் தொடங்கினார்கள்.

ஒரு சோம்பேறி சொன்னான், "நேரம் போகவேண்டுமல்லவா. நமக்குள் ஒரு பந்தயம் வைத்துகொள்வோம். ஆளுக்கொரு கதை சொல்ல வேண்டும். அதை மற்றவர்கள் நம்ப வேண்டும். நம்பாவிட்டால் கதை கேட்டவர் கதை சொன்னவருக்கு அடிமை. சரிதானே?"

வழிப்போக்கர் ஒப்புக்கொண்டார். கல் மண்டபத்தில் இருந்த ஒரு ஊர்க்காரர் ஒருவர் முன்னிலையில் கதை சொல்லத் தொடங்கினார்கள்.

முதல் சோம்பேறி சொன்ன கதை இது.

"ஒருநாள் பக்கத்துக் காட்டுக்குள்ளே ஒரு வகையான மருத்துவக் குணம் கொண்ட மரத்தின் காய்களைத் தேடிப் போனேன். அந்த மரத்தைத் தேடிக் கண்டுபிடிக்கவே ரொம்ப நேரம் ஆகிவிட்டது. அது உயரமான மரம். மரத்தில் ஏறிக் காய்களைப் பறித்துக்கொண்டிருக்கும் போதே இரவு நேரம் வந்துவிட்டது. ஒரே இருட்டு. கீழே இறங்க வழி தெரியவில்லை".

வழிப்போக்கர் கேட்டார், "அடடே என்ன செய்தீர்கள்?"

முதல் சோம்பேறி சொன்னான், "வேறென்ன செய்ய? மரத்தின் மேலேயே தூங்கிவிட முடிவு செய்தேன்".

"நல்ல முடிவு... நல்ல முடிவு..."

"ஆனால் அதில் ஒரு பிரச்சினை. எனக்குக் கட்டிலில் படுத்தால்தான் தூக்கம் வரும்".

"அப்படியா? அப்புறம் என்ன செய்தீர்கள்?"

" வேறென்ன செய்ய? கீழே இறங்கி, வீட்டுக்கு வந்து கட்டிலை எடுத்துக் கொண்டு போய், மரத்தில் படுத்துத் தூங்கினேன்."

வழிப்போக்கர் சொன்னார், "பலே, பலே... நல்லவேலை செய்தீர்கள்".

ஊர்க்காரர் கேட்டார், " இதை நீங்கள் நம்புகிறீர்களா?"

வழிப்போக்கர் சொன்னார்,

" நிச்சயமாக..."

இரண்டாம் சோம்பேறி கதை சொல்லத் தொடங்கினான்.

"அப்போது நான் என் அம்மாவின் வயிற்றில் இருந்தேன். என் அம்மா அப்பாவிடம் வீட்டில் இருந்த கொய்யா மரத்தில் இருந்து கொய்யாப்பழம் பறித்து தரச் சொன்னார். அப்பா முடியாது, எனக்கு வேறு வேலை இருக்கிறது" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். எனக்கு வருத்தமாகப் போய்விட்டது. அம்மாவின் ஆசையை நிறைவேற்ற வேண்டும் என்று முடிவு செய்தேன்.

இரவு எல்லாரும் தூங்கிய பின் அம்மாவின் வயிற்றில் இருந்து இறங்கி வந்து, வீட்டுக்கு வெளியே இருந்த கொய்யா மரத்தைப் பார்த்தேன். கொய்யாப் பழம் உயரத்தில் இருந்தது. உடனே மரத்தை வெட்டிச் சாய்த்து, கொய்யாப்பழத்தை அம்மா முன்னால் வைத்தேன். மரத்தையும் துண்டுதுண்டாக வெட்டி திண்ணையில் அடுக்கினேன். பிறகு அம்மா வயிற்றில் தூங்கப் போய்விட்டேன்" வழிப்போக்கர் சொன்னார், " ஆகா... ஆகா... என்ன ஒரு தாய்ப்பாசம்".

ஊர்க்காரர் கேட்டார்,

" இந்த கட்டுக்கதையை நீங்கள் நம்புகிறீர்களா?"

வழிப்போக்கர், " நம்பாமலா? என்ன ஒரு தாய்ப்பாசம்" என்றான்.

மூன்றாவது சோம்பேறி கதை சொல்லத் தொடங்கினான்.

"ஒரு நாள் நான் காட்டுக்கு முயல் வேட்டையாடப் போனேன். காடெல்லாம் அலைந்தும் ஒரு முயல்கூடக் கிடைக்கவில்லை. ஒரு புதரின் பின்னால் மறைந்து முயலுக்காகக் காத்திருந்தேன்.

அப்போது என் பின்புறமிருந்து ஒரு கர்ஜனை கேட்டது. திரும்பிப் பார்த்தேன். ஒரு சிங்கம். "அட ச்சீ... போ... நான் முயலுக்காகக் காத்திருக்கிறேன்" என்றேன். சிங்கத்திற்குக் கோபம் வந்துவிட்டது. அது கடித்து என் தலையை விழுங்கிவிட்டது.

"எனக்கோ அதைவிட ரொம்பப் கோபம். கத்தியை எடுத்தேன். சிங்கத்தின் வயிற்றைக் கிழித்தேன். என் தலையை வெளியே எடுத்து கழுத்தில் மாட்டிக் கொண்டேன்..."

"அப்புறம்..?"

"அப்றமென்ன? ஒரு முயலை வேட்டையாடி வீட்டுக்குக் கொண்டுவந்தேன்".

வழிப்போக்கர் சொன்னார், "என்ன வீரம்... என்ன வீரம்..."

ஊர்க்காரர் கேட்டார், " இதை நீங்கள் நம்புகிறீர்களா?"

வழிப்போக்கர் சொன்னார்,

"ஆமா... ஆமா...".

கடைசியாக வழிப்போக்கர் ஒரு கதை சொல்ல ஆரம்பித்தார்,

" ஒரு நாள் நான் பக்கத்து ஊர் சந்தைக்குப் போனேன். போகிற வழியில் ஒரு மனிதர் அடிபட்டுக் கிடப்பதைப் பார்த்து அவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்து அவர் உயிரைக் காப்பாற்றினேன். அவர் ஒரு மந்திரவாதி. அவர் போகும் போது எனக்கு மூன்று அவரை விதைகளைத் தந்து விட்டுப் போனார்.

நான் அந்த விதைகளை வீட்டுத் தோட்டத்தில் ஊன்றி வைத்தேன். மறுநாள் காலையில் பார்த்தால் அவை முழுச் செடிகளாக வளர்ந்திருந்தன. மதியம் பார்த்தால் மூன்று பூக்கள் பூத்திருந்தன.


மாலையில் அவை தரையில் உதிர்ந்து மூன்று மனிதர்களாக மாறிவிட்டன. அவர்கள் என்னிடம் வந்து 'நாங்கள் உங்களுடைய அடிமைகள்' என்றனர்.

"அன்று முதல் அவர்கள் மூவரும் என்னிடம் அடிமைகளாக வேலை செய்து வந்தனர். ஆனால் அவர்கள் மூவரும் படு சோம்பேறிகள். ஒரு நாள் அவர்கள் மூவரும் ஊரை விட்டு ஓடிவிட்டார்கள். அவர்களைத் தேடித்தான் நான் இந்த ஊருக்கு வந்தேன். நீங்கள் தான் அந்தச் சோம்பேறிகள்" என்று கதையை முடித்தார்.

ஊர்க்காரர் வாய்விட்டுச் சிரிக்கத் தொடங்கினார்...

சோம்பேறிகள் கதையை நம்பாவிட்டால் முதலில் போட்ட ஒப்பந்தப்படி மூவரும் வழிப்போக்கருக்கு அடிமைகள். நம்பினாலோ கதைப்படி மூவரும் வழிப்போக்கனுக்கு அடிமைகள். என்ன செய்வார்கள் அந்தச் சோம்பேறிகள்?

## தூய்மை



தூய்மை சேரடா தம்பி - என்
சொல்லை நீ பெரிதும் நம்பித்
(தூய்மை சேரடா தம்பி)

வாய்மையாலும் ஒழுக்கத்தினாலும் அகத்
தூய்மை உண்டாகும்! மேலும் மேலும்
(தூய்மை சேரடா தம்பி)

உடையினில் தூய்மை - உண்ணும்
உணவினில் தூய்மை - வாழ்வின்
நடையினில் தூய்மை - உன்றன்
நல்லுடல் தூய்மை - சேர்ப்பின்
தடையில்லை வாழ்நாள் ஒவ்வொன்றும் இன்பம்
தரும்நாள் ஆகும் நீ என்றும் -
(தூய்மை சேரடா தம்பி)

துகளிலா நெஞ்சில் - சாதி
துளிப்பதும் இல்லை - சமயப்
புகைச்சலும் இல்லை - மற்றும்
புன்செயல் இல்லை! - தம்பி!
அகத்திலே அன்பின் வெள்ளம் மூளும் தீய
அச்சம் போகும்! நீ எந்நாளும் -
(தூய்மை சேரடா தம்பி)

## பொன்மொழிகள்

- நேற்றைய பொழுதும் நிஜமில்லை. நாளைய பொழுதும் நிச்சயமில்லை. இன்றைய பொழுது மட்டுமே நம் கையில்.
- வாழ்க்கை அவனவன் வாழ்வதற்கு என்று மட்டும் கருதக்கூடாது. மற்றவர்கள் நலனும் என்று கருதவேண்டும்.
- யார் ஒருவன் தனக்கு உள்ள கௌரவமும் மரியாதையும் போய்விடுமே என்று பயந்தபடி இருக்கின்றானோ அத்தகையவன் அவமானத்தைத்தான் அடைகிறான்.,
- பழி வந்து சேரக்கூடாது என்ற அச்சவுணர்வுடன் நடக்கும் பண்பார்ந்த குடியில் பிறந்தவருடைய நட்பை எந்த வகையிலாவது பெற்றிருப்பது பெரும் சிறப்புக்குரியது.
- உண்மையான நட்பு ஆரோக்கியமானது. அதனை இழக்கும் வரை அதன் மதிப்பை நாம் உணர்வதில்லை.

ம.அப்ஷிகா, உடுவில் மகளிர் கல்லூரி,
SOS சிறுவர் கிராமம், அனுஷம் இல்லம்.

வெற்றி பெற்ற மனிதர் எல்லாம் புத்திசாலியில்லை.
புத்திசாலி மனிதர் எல்லாம் வெற்றி காண்பதில்லை.
~ கவியரசு கண்ணதாசன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தேர்தல் அரசியலை மையப்படுத்தி செயற்படாதீர்கள்

தமிழ் மக்களுக்கான அரசியல் என்பது சாதாரண அரசியல் கட்டமைப்பைக் கொண்டதாக இருந்துவிட முடியாது.

இன்றிருக்கக்கூடிய சூழ்நிலையில் அரசியல் இராஜதந்திரம் என்பது உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஏற்புடையதாக இருப்பதை தமிழ் அரசியல் தலைமைகள் உறுதி செய்ய வேண்டும்.

எனினும் தமிழர்களின் இன்றைய அரசியல் என்பது இனம் சார்ந்து; மக்கள் சார்ந்து வகுக்கப்படாமல், பதவி ஆசையை நிறைவேற்றுகின்ற அரசியலாகவே இருக்கின்றது.

இதன்காரணமாகவே தமிழ் மக்கள் தமது இலக்கை அடைய முடியாதவர்களாக இருக்கின்றனர்.

இதை நாம் கூறும்போது தமிழ் மக்கள் தமது இலக்கை அடையவில்லை என்பதற்குள் தமிழ் அரசியல் தலைமையும் உள்ளடங்குமல்லவா என்ற கேள்வி எழும்.

இங்குதான் தமிழ் அரசியல்வாதிகள் என்ற பதத்தை விலக்க வேண்டியுள்ளது. அதாவது இன்றைய தமிழ் அரசியல் தலைமை என்பது, அரசியல் மூலமாகக் கிடைக்கின்ற பதவிகளை அடைவதில் கண்ணும் கருத்துமாக இருக்கின்றதே தவிர,

தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க வேண்டும் என்ற இலட்சியம் அவர்களிடம் இல்லை என்பது புரிதற்குரியது.

இந்த அடிப்படையில், தமிழ் அரசியல் தலைமையின் இலக்கு ஏதோவொரு வகையில் வெற்றி பெற்று விடுகிறது.

தங்களின் பதவியிலக்கை அடைவதற்கான வழியாக தமிழ் மக்களின் உரிமை அல்லது இனப்பிரச்சினை என்பதை முதன்மைப்படுத்துகின்ற தந்திரோபாயம் நடக்கின்றதே தவிர வேறு எதுவும் இல்லை. இதை நாம் கூறும்போது இதனூடு இன்னோர் விடயம் எழுகை பெறுகிறது.

அதாவது தமிழ் மக்களை ஏமாற்றுகின்ற அரசியல் தலைமையே இப்போது நடைமுறையில் இருக்கின்றபோதிலும்,

நாங்கள் ஏமாற்றப்படுகின்றோம் என்பதைக் கூட தமிழ் மக்கள் புரிந்து கொள்ள முடியாத அளவில் தமிழ் அரசியல் தலைமைகளின் தந்திரோபாயங்கள் அமைந்துள்ளன.

இத்தந்திரோபாய மாயையை விலக்கி உண்மையைக் கண்டறிகின்ற வரையில், ஏமாற்று நாடகங்கள் சின்னத்திரைத் தொடர்கள் போல நீடிக்கவே செய்யும்.

இவை ஒருபுறமிருக்க, நாட்டின் அரசியல் குழப்பங்கள் ஓய்ந்துபோயுள்ள நிலையில்,

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை எதிர்ப்பது, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பது என்பதான தமிழ் அரசியல் தலைமையின் அணுகுமுறை எதிர்கால அரசியல் ஆபத்துக்களைத் தரக்கூடியதாக இருக்கும்.

ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தாம் வழங்கிய ஆதரவை நியாயப்படுத்துவதற்காக கடும் சொற்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்கள் முன்வைப்பது நாகரிகமானதாகவோ அன்றி புத்திசாலித்தனமானதாகவோ தெரியவில்லை.

தனித்து தேர்தல் அரசியலை மட்டும் மையப்படுத்திய செயற்பாடாகவே மேற்போந்த கடும் சொற்பிரயோகங்களைப் பார்க்க முடிகின்றது.

எனவே ஒட்டுமொத்த தமிழினத்துக்கும் பாதகத்தைத் தரக்கூடிய வார்த்தைப் பிரயோகங்களை முழுமையாகத் தவிர்த்து எங்களிடம் இருக்கக்கூடிய நியாயப்பாடுகளை முன்வைப்பதே தமிழர் அரசியலுக்கு நன்மை தருவதாக அமையும்.

# எம்மை பணிநீக்கம் செய்ய வேண்டாம்

## முன்பள்ளி ஆசிரியர்கள் யாழில் கவனயீர்ப்பு

### கூட்டமைப்பிடம் கோருமாறு ஆளுநர் பதில்

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் சிவில பாதுகாப்பு பிரிவின் கீழ் ஊதியம் பெறும் முன்பள்ளி ஆசிரியர்கள் தொடர்ந்தும் தம்மை பணியாற்ற அனுமதிக்க வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநரை சந்தித்து கோரிக்கை விடுத்தனர்.

வடமாகாண ஆளுநர் அலுவலகத்தின் முன் நேற்று ஒன்றுகூடி கவனயீர்ப்பில் ஈடுபட்ட முன்பள்ளி ஆசிரியர்கள், ஆளுநரை சந்தித்து தமது பிரச்சினைகள் தொடர்பில் கூறினர். அந்த சந்திப்பின்போது கருத்து தெரிவிக்கையில்,

முன்பள்ளி ஆசிரியர்களாக சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் கடந்த 5 ஆண்டுகளாக பணியாற்றி கடன்களைப் பெற்ற நிலையில். தற்போது திடீரென ஜனவரியுடன் இடைநிறுத்துமாறு ஜனாதிபதி தெரிவித்துள்ளதாக எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் எமது குடும்ப நிலைமையை கருதி தொடர்ந்தும் பணியாற்ற அனுமதிக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் 13 முன்பள்ளி ஆசிரியர்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் 322 பேரும் பணியாற்றுவதோடு முல்லைத்தீவு மாவட்டத்தில் 173 பேரும் ஆசிரியர்களாக பணியாற்றுகின்றோம். எமது சம்பளத்தை நம்பியே கடனைப் பெற்றோம். எனவே எமது பணியை தொடர்ந்தும் வழங்கி அதே சம்பளத்தை தொடர்ந்தும் வழங்க வேண்டும். கூட்டமைப்பினர் படையினரின் கீழ் இயங்கும் முன்பள்ளிகளை நிறுத்துமாறு கோருகின்றனர்.

அவ்வாறு நிறுத்துவதனை தடுக்குமாறு கோரிக்கை முன்வைததுள்ளதுடன், சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தினை இயங்க அனுமதிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

இதன்போது ஐவர் ஆளுநரைச் சந்தித்து தமது கோரிக்கை மனு ஒன்றினை கையளித்திருந்தனர்.

ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற வடக்கு கிழக்கிற்கான அபிவிருத்திச் செயலணிக் கலந்துரையாடலில் வடக்கில் படைக் கட்டுமானத்தின் கீழ் இயங்கும் முன்பள்ளிகள் சர்வதேசத்திற்கு தவறான செய்தியையும் வடக்கு மாகாண முன்பள்ளி நியதிச் சட்டத்தை மீறுவதாகவும் உள்ளதனால் அவற்றினை கல்வித் திணைக்களத்திடம் ஒப்படைத்தே ஆக வேண்டும் என்ற கோரிக்கையை தமிழ் தேசிய கூட்டமைப்பினர் முன்வைத்துள்ளனர்.

எனவே, அவர்களிடம் தான் நீங்கள் கேட்க வேண்டுமென வடக்கு மாகாண ஆளுநர். ரெஜினோல்ட் கூரே முன்பள்ளி ஆசிரியர்களிடம் தெரிவித்தார்.

இது தொடர்பில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, முன்பள்ளி நிர்வாகத்தின் கீழ் பல நூறு முன்பள்ளிகள் உள்ளன. அவற்றில் பணியாற்றும் ஆசிரியர்களிற்கு கல்வி அமைச்சர் அனுமதிக்கப்பட்ட 10 ஆயிரம் ரூபாய் மட்டுமே வழங்கப்படும் நிலையில் அவர்களின் நிரந்தர நியமனம் தொடர்பில் சிந்திக்கின்றோம்.

அதேநேரம்வலயக்கல்வித் திணைக்களங்களினால் நிர்வகிக்கப்படும் முன்பள்ளி ஆசிரியர்கள் க.பொ.த உயர்தரம் அல்லது சாதாரண தரத்தினை முழுமையாக பூர்த்தி செய்து தகைமை அடிப்படையில் பயிற்சி அளிக்கப்பட்ட நிலையில் உள்ளனர்.

ஆனால் படையினரின் முன்பள்ளியில் பணியாற்றும் ஆயிரக்கணக்கான முன்பள்ளி ஆசிரியர்களில் நூற்றுக் கணக்கானோர் 8 ஆம் ஆண்டு மட்டும் கல்வி கற்றவர்களும் உள்ளதனால பாரிய நிர்வாக முரண்பாடு உள்ளது என்றனர்.

இருந்தும் வடக்கு மாகாண ஆளுநர் இந்த முன்பள்ளி ஆசிரியர்களின் பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதியுடன் கலந்துரையாடி தீர்வினை முன்வைப்பதாக தெரிவித்தார். (இ-101)

# நாடு திரும்பும்வரை சு.கவின் தலைமையகத்தை மூடுங்கள்

## ஜனாதிபதி மைத்திரி உத்தரவு

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனையின் பிரகாரம் கொழும்பில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமையகம் மூடப்பட்டுள்ளது.

தாய்லாந்திற்கு தனிப்பட்ட விஜயத்தை மேற்கொண்டு சென்ற ஜனாதிபதி, அங்கு ஒருவார காலம் தங்கியிருப்பார். இந்நிலையில் அவர் மீண்டும் வரும்வரை சுதந்திரக்கட்சியின் தலைமையகத்தை மூடுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பில் சிங்கள ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளர் ரோகண லக்ஷ்மன் பியதாச, "கட்சிதலைமையகத்தில் பணியாற்றும்ஊழியர்களுக்கு ஆண்டின் இறுதியில் வழங்கப்படும் விடுமுறை காரண மாகவே இந்நடவடிக்கை இடம்பெற்றுள்ள தாக" கூறினார்.

கடந்த 24ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் அமைப்பாளர்களை கொழும்பில் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் ஒரு கூட்டணியை அமைப்பதற்கான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தீர்மானத்தை கட்சியின் அமைபபாளர்களின் குழு கடுமையாக விமர்சித்திருந்தது.

இந்நிலையில் ஜனாதிபதி நாடு திரும்பியதும் மீண்டும் கட்சியின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் எனவும் அதுவரை விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## சீன குழுவினர் மன்னாரில் அகழ்வாய்வு

(மன்னார்)

மன்னார் மற்றும் மாந்தை துறைமுகங்கள் ஊடாக இலங்கையுடன் சீனர்கள் மேற்கொண்ட பண்டைய வணிகம் தொடர்பாக, சீன மற்றும் இலங்கை தொல்பொருள் ஆய்வாளர்கள் கூட்டு ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர்.

சீனாவின் சிசுவான் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆய்வுக் குழுவினருடன், களனி பல்கலைக்கழகத்தின் தொல்பொருள் திணைக்களத்தின் குழுவினர் இணைந்து இந்த ஆய்வுகளில் ஈடுபட்டுள்ளனர். (ம-3)

## இல்லற வாழ்க்கையில்...

- இல்லற வாழ்வில் என்றுமே அன்பாய் வாழ்ந்திடுங்கள். ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்து வாழுங்கள். அன்பு ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு மகிழ்ச்சியாய் இருந்திடுங்கள்.
- புரிந்து கொண்டு வாழும் வாழ்க்கையே இறுதிவரை நிலைத்திடும் என்று உணர்ந்து வாழுங்கள். எல்லாவிதமான சஞ்சலங்களுக்கும் இடம்தராமல் தெளிவான மனதுடன் வாழ்ந்து வாழ்க்கையைச் செழிமைப்படுத்துங்கள்.
- சந்தேகம் என்பது தீராத வியாதியை விட மோசமானது எனக் கருதி வாழுங்கள். இருப்பதைப் பகிர்ந்து கொடுத்து உண்ண வேண்டும். பிரச்சினைகளை நல்ல முறையில் தீர்வு காணுங்கள்.
- குழந்தைகளிடம் இனிமையாகப் பேசி நலமாக வாழுங்கள். எவ்விதப் பிரச்சினைக்கும் நல்ல விதமாக முடிவு காணவேண்டும தவிர தவறான முடிவை தீயவழிகளில் பின்பற்றக் கூடாது.
- உங்கள் வாழ்க்கையை நீங்களே தீர்மானம் செய்துகொண்டு வளமாய் வாழுங்கள். நலமாய் இருங்கள்.

# சத்திய தரிசனம்

## எல்லாம் அவன் செயல்



❖ இறைவன் அன்பு வடிவானவன் என்பதால் மனிதர்களுக்கு இடையிலும் உறவு உருவாக வேண்டும். அன்பு தத்துவத்தை உணர்ந்து வாழ்வதே மனிதனின் கடமை.

❖ உனக்கு ஆற்றல் இருக்கலாம். ஆனால், தெய்வத்தின் துணையைக் கடைசி வரையில் நீ கெட்டியாகப் பிடித்துக் கொண்டால் தான் வெற்றி கிடைக்கும்.

❖ பழிப்பவர்களிடம் அன்பு காட்ட வேண்டும். அனைத்து ஜீவன்களிலும் இறைவன் இருக்கிறார். ஜீவ சேவையே தேவ சேவை.

❖ நம்மால் முடியும் என்று நம்பிக்கையில் வாழ்ந்தால், கடவுளின் அருள் கிடைப்பதில்லை. அனைத்தும் நீயே என்று கடவுளிடம் சரணாகதி அடைந்தால் நிச்சயம் உதவுவார்.

❖ இறைவனின் புகழைக் கேட்பது, பாதத்தை வணங்குவது, நமக்கு கிடைக்கும் வெற்றியை அவர் தந்ததாகக் கருதுவது ஆகியவை பக்தி மார்க்கத்துக்கு உரியனவாகக் கருதப்படுகின்றன.

❖ தெய்வத்தின் நாமத்தை நெஞ்சில் இருத்தி, வாயினால் உச்சரித்து பணி செய்வதுடன், தெய்வ சிந்தனையில்இருந்து நழுவாமலிருந்தால் தெய்வ அருள் கிடைக்கும்.

# வடமாகாண கராத்தே சம்மேளன வர்ண இரவுகள் நிகழ்வு





இலங்கை கராத்தே சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட 2018 இற்கான தேசிய ரீதியிலான கராத்தேப் போட்டியில் வெற்றி பெற்ற வீர, வீராங்கனைகளுக்கு வடமாகாண கராத்தே சம்மேளனத்தினால் முதல் முறையாக வர்ண இரவு நிகழ்வு கடந்த 23 ஆம் திகதி கிறீன் பீல்ட் சனசமூக நிலையத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் விருந்தினர்களாக யாழ்.உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் லால் கமகே, கிளி.மாவட்ட விளையாட்டு அதிகாரி எம்.ரிச்சாட் மோகனதாஸ், முல்லை. மாவட்ட விளையாட்டு அதிகாரி என்.முகுந்தன் ஆகியோர் கலந்து கொண்டு வெற்றி பெற்ற வீர, வீராங்கனைகளுக்கும் அவர்களின் பயிற்றுவிப்பாளர்களுக்கும் பதக்கம் அணிவித்துச் சான்றிதழ்களும் வெற்றிக் கேடயமும் வழங்கியதோடு வடமாகாண கராத்தே சம்மேளனத்தில் புதிதாக பதிவை மேற்கொண்ட பிரதம ஆசிரியர்களுக்கான பதிவுச் சான்றிதழ்களும் வழங்கி கௌவித்தனர்.

இந்நிகழ்வு வடமாகாண கராத்தே சம்மேளனத் தலைவர் சென்சே விஜயராஜ் தலைமையில் நடைபெற்றது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# அறிமுகப் போட்டியிலேயே அரைச்சதம் இந்திய அணி வீரர் அசத்தல்



மெல்பேர்னில் நடந்து வரும் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 3 ஆவது டெஸ்டில், இந்திய அணியின் அறிமுக வீரர் மயங்க் அகர்வால் அரைச்சதம் அடித்து அசத்தியுள்ளார்.

இந்தியா-அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான 3 ஆவது டெஸ்ட் போட்டி மெல்பேர்னில் நடைபெற்று வருகிறது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்தியா துடுப்பாட்டத்தை தெரிவு செய்து விளையாடி வருகிறது.

அதன்படி அறிமுக வீரர் மயங்க் அகர்வால்-ஹனுமா விஹாரி தொடக்க வீரர்களாக களமிறங்கினர்.

வேகப் பந்து வீச்சுக்கு சாதகமான ஆடுகளம் என்பதால், இருவரும் நிதானமாக அவுஸ்திரேலிய பந்து வீச்சை எதிர் கொண்டனர்.

இந்த ஜோடி முதல் விக்கெட்டுக்கு 40 ஓட்டங்கள் எடுத்தது. அவுஸ்திரேலியாவில் கடந்த 5 இன்னிங்சில் தொடக்க ஜோடி சேர்த்த அதிகபட்ச ஓட்டங்கள் இதுவாகும்.

மேலும், கடந்த 2010 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்துக்குப் பின் தொடக்க ஜோடி அதிகமான பந்துகளை வெளிநாடுகளில், குறிப்பாக அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, இங்கிலாந்து, தென்னாபிரிக்காவில் சந்தித்தது இது தான் முதல் முறையாகும்.

கடைசியாக சேவாக்-கம்பீர் ஜோடி தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்டில் 29.3 ஓவர்கள் நின்று துடுப்பாட்டம் செய்தனர்.

அதன் பிறகு 8 ஆண்டுகள் கழித்து மயங்க்-விஹாரி ஜோடி 18.5 ஓவர்கள் வரை நின்று விளையாடியுள்ளனர்.

அதிகமான பந்துகளை எதிர்கொண்ட விஹாரி 8 ஓட்டங்களில் அவுட் ஆனார்.


அதனைத் தொடர்ந்து வந்த புஜாராவுடன், மயங்க் அகர்வால் கைகோர்த்து அபாரமாக விளையாடி தனது முதல் அரைச்சதத்தை அடித்தார். (க)

**அன்பு வாசகர்களே!**

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

# ஹோலி அற்புதமான வீரர் அவுஸ்திரேலிய வீரர் புகழாரம்



அவுஸ்திரேலிய வேகப் பந்து வீச்சாளர் மிட்செல் ஸ்டார்க், ஐ.பி.எல்.தொடரில் விராட் ஹோலி தலைமையின் கீழ் விளையாடுவது அற்புதமானது எனத் தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல். தொடரில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணியின் தலைவராக இந்திய கிரிக்கெட் அணி தலைவர் விராட் ஹோலி செயற்பட்டு வருகிறார்.

இதே அணியில் அவுஸ்திரேலியாவின் வேகப்பந்து வீச்சாளர் மிட்செல் ஸ்டார்க் விளையாடியுள்ளார்.


இந்நிலையில் விராட் ஹோலி குறித்து அவர் கருத்து தெரிவித்துள்ளார். அவர் கூறுகையில்,

'ஐ.பி.எல். தொடரில் விராட் ஹோலி தலைமையின் கீழ் விளையாடுவது அற்புதமானது.

உண்மையிலேயே அவர் ஒரு அற்புதமான வீரர். அவுஸ்திரேலியா தொடரில் தற்போது விளையாடி வரும் ஆட்டத்தை வெளிப்படுத்தினால், இந்தியா உச்ச நிலையை அடையும்' எனத் தெரிவித்துள்ளார். (க)

# கார்த்திக்-பாண்டிற்கு போதுமான வாய்ப்பு வழங்கிவிட்டோம் அதனால்தான் டோனிக்கு இடம் கிடைத்தது- தேர்வுக்குழு

இந்திய அணியின் விக்கெட் கீப்பர்களான தினேஷ் கார்த்திக் மற்றும் ரிஷப் பாண்ட் ஆகியோருக்கு போதுமான அளவு வாய்ப்பு கொடுக்கப்பட்டுவிட்டதால், டோனியை மீண்டும் அணியில் சேர்த்தோம் என்று தேர்வுக்குழு தலைவர் பிரசாத் கூறியுள்ளார்.




அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வரும் இந்திய அணி, அதன் பின் நியூசிலாந்திற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு அங்கு 5 ஒருநாள் போட்டிகள் மற்றும் மூன்று இருபது-20 போட்டிகள் கொண்ட தொடர்களில் விளையாடவுள்ளது.

இதற்கான இந்திய அணி அண்மையில் அறிவிக்கப்பட்டது. அதில் யாரும் எதிர்பார்க்காத வகையில், மேற்கிந்திய தீவு மற்றும் அவுஸ்திரேலிய அணிக்கெதிரான இருபது-20 தொடரில் சேர்க்கப்படாமல் இருந்த டோனி, நியூசிலாந்து அணிக்கெதிரான இருபது-20 தொடரில் அணியில் இடம் பிடித்தார்.

இதனால் டோனி ரசிகர்கள் மிகுந்த மகிழ்ச்சியில் உள்ளனர்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு அவர் இருபது-20 விளையாடுவதால் இந்தத் தொடரோடு அவர் ஓய்வு அறிவிப்பை வெளியிடுவாரோ? என்ற பயமும் எழுந்துள்ளது.

இந்நிலையில் இது குறித்து தேர்வுக்குழு தலைவர் பிரசாத் கூறுகையில்,

நாங்கள் முன்பே அறிவித்தது போல ரிஷப் பாண்ட் மற்றும் தினேஷ் கார்த்திக் ஆகியோருக்கு வாய்ப்பு வழங்கும் விதமாக டோனியை அணியில் இருந்து நீக்கினோம்.

அவர்களுக்கான போதிய வாய்ப்புகள் வழங்கப்பட்டு விட்டது. இதனால் டோனியை மீண்டும் அணியில் சேர்க்க இதுதான் சரியான நேரம் என்பதற்காகவே மீண்டும் அணியில் எடுத்துள்ளோம் என்று கூறியுள்ளார். (க)

# சுரங்கவின் அசுர வேகத்தில் சுருண்டது நியூசிலாந்து

கிறிஸ்ட்சர்ச்சில் நடைபெற்று வரும் டெஸ்டில் இலங்கை வீரர் லக்மலின் அபார பந்துவீச்சில் நியூசிலாந்து அணி 178 ஓட்டங்களுக்கு சுருண்டுள்ளது.

இலங்கை-நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான 2 ஆவது டெஸ்ட் போட்டி கிறிஸ்ட்சர்ச்சில் தொடங்கியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி பந்து வீச்சை தெரிவு செய்தது.

அதன்படி நியூசிலாந்து அணியின் தொடக்க வீரர்களாக ஜீத் ராவல், டாம் லாதம் களமிறங்கினர். இலங்கையின் வேகப்பந்து வீச்சாளர் சுரங்க லக்மலின் அபார பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் இருவரும் சொற்ப ஓட்டங்களில் வெளியேறினர். பின்னர் வந்த



தலைவர் கேன் வில்லியம்சன் 2 ஓட்டங்களில் லக்மல் வெளியேற்றினார்.

அதன் பின்னர் வந்த நிக்கோல்ஸின் ஸ்டம்பை லக்மல் சிதறடித்தார். இதனால் நியூசிலாந்து அணி 36 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை இழந்தது. எனினும் வாட்லிங் 46 ஓட்டங்கள் எடுத்தார்.

தொடர்ந்து விக்கெட்டுகள் சரிந்த நிலையில், டிம் சவுதி மட்டும் அதிரடியாக ஆடி 65 பந்துகளில் 3 சிக்சர், 6 பவுண்டரிகளுடன் 68 ஓட்டங்கள் குவித்தார். இதன்மூலம், ஓரளவு நல்ல ஸ்கோரை நியூசிலாந்து எட்டியது. லஹிரு குமார 3 விக்கெட்டுகளை வீழ்த்த நியூசிலாந்து அணி 178 ஓட்டங்களுக்கு சுருண்டது.

அதன் பின்னர் தனது முதல் இன்னிங்சை தொடங்கிய இலங்கை அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி காத்திருந்தது. குணதிலக(8), கருணஉரத்னே(7), சண்டிமல்(6) ஆகியோர் ஒற்றை இலக்க ஓட்டங்களில் அவுட் ஆகினர்.

பின்னர் வந்த குசல் மெண்டிஸ் 15 ஓட்டங்களில் கிராண்ட்ஹோம் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். இலங்கை அணி முதல் நாள் முடிவில் 32 ஓவர்களில் 4 விக்கெட்டுக்கு 88 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

அஞ்சலோ மத்தியூஸ் 27 ஓட்டங்களுடனும் ரோஷன் சில்வா 15 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். நியூசிலாந்து தரப்பில் டிம் சௌதி 3 விக்கெட்டுகளும், கிராண்ட்ஹோம் ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர். (க)

## உயர்தர பெறு...

உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளைக் கணனி மயப்படுத்தும் பணிகள் நிறைவடைந்துள்ளன. நாளை வெள்ளிக்கிழமை பரீட்சைகள் திணைக்கள இணையத்தளத்தில் பெறுபேறுகள் வெளியிடப்படும். அத்துடன், பாடசாலைப் பரீட்சார்த்திகளின் பெறுபேறு பாடசாலைகளுக்கும் தனியார் பரீட்சார்த்திகளின் பெறுபேறு தபால்மூலம் அன்றைய தினமே அனுப்பிவைக்கப்படும் என்றும் அந்தத் தகவல்கள் தெரிவித்தன.

பரீட்சைப் பெறுபேறுகளை http://www.doenets.lk அல்லது http://www.exams.gov.lk என்ற இணைய முகவரிகளில் பார்வையிட முடியும். (ம-3)

## இரணைமடு குள...

வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும் ஏற்பட்டுள்ள வெள்ளத்தினால், 28 ஆயிரத்து 806 குடும்பங்களைச் சேர்ந்த 90 ஆயிரத்து 402 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

இந்த அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களில் 2 ஆயிரத்து 842 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 905 பேர் 26 இடைத்தங்கல் முகாங்களில் தொடர்ந்து தங்கவைக்கப்பட்டுள்ளனர். கிளிநொச்சி மாவட்டத்திலேயே அதிகளவாக 50 ஆயிரத்து 288 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் தலா ஒருவர் என இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

நேற்று புதன்கிழமை மாலை 6 மணி வரையான நிலவரப்படி அனர்த்த முகாமைத்துவ நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடக்கில் ஏற்பட்ட சீரற்ற வானிலை காரணமாக தொடர்ந்தும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் நேற்று புதன்கிழமை அதிகாலை முதல் மீண்டும் தொடர்ச்சியாக மழை பெய்தது.

இதன் காரணமாக இரணைமடுக் குளத்திற்கான நீர் வரத்து அதிகரித்துக் காணப்படுகின்றது. இந்நிலையில் அதன் 9 வான்கதவுகள் திறக்கப்பட்டு மேலதிக வரத்து நீர் வெளியேற்றப்பட்டு வருகின்றது.

தற்போது இரணைமடுக்குளத்தின் நீர் மட்டம் 35 அடி 11 அங்குலமாகக் அதிகரித்துக் காணப்படுகின்றது. தொடரும் மழை காரணமாக நீர் வரத்து அதிகரித்துள்ளமையால் இரணைமடுக்குளத்தின் 9 வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. அதில் 5 வான் கதவுகள் 1.5 அடியாகவும் 4 வான்கதவுகள் 6 அங்குலமாகவும் திறக்கப்பட்டுள்ளன.

இரணைமடுக்குளத்தின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளமையால் கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களின் மக்களை மிகவும் அவதானமாக இருக்குமாறு கோரப்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களாகப் பெய்த கனமழை வெள்ளப்பெருக்குக் காரணமாக பல கிராமங்களின் மக்கள் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தஞ்சமடைந்துள்ள நிலையில் மீண்டும் தொடரும் சீரற்ற காலநிலையால் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றுமுழுதாகப் பாதிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## அணை உடைப்பு...

உடையார்கட்டு அணை உடைந்து வெள்ளம் பாய்கின்றது என்ற தவறான செய்தியைக் கேட்டு பலர் இங்கிருந்து வெளியேறிவிட்டார்கள். ஆனால் விசாரித்துப் பார்த்ததில் அது தவறான தகவல் என்று அறிய நேர்ந்தது.

இவ்வாறான தருணங்களில் பொறுப்புடனும் பொறுமையுடனும் நடந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். எமது நிவாரண நிகழ்வை தடைசெய்ய இவ்வாறான தவறான செய்திகள் தரப்பட்டிருக்கலாம் என்று தமிழ் மக்கள் கூட்டணி நிறுவுநரும் செயலாளர் நாயகமுமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.(ம-3)

## பாராளுமன்றத்தி...

றுக் கொள்ளவேண்டாம் என சுமந்திரன் ஐரோப்பிய மற்றும் ஐ.நா சபையிடம் கோரியுள்ளதன் மூலம் அதற்கான சூழல் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், மகிந்த ராஜபக்ஷவை, எதிர்க்கட்சித் தலைவராக ஏற்றுக் கொள்ள வேண்டாம் என பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் ஐ.நா. சபைக்கும் அவசர கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

இது இலங்கையின் உள்ளகப் பிரச்சினை. எதிர்க்கட்சித் தலைவரை பாராளுமன்றமே தெரிவு செய்யும். பாராளுமன்றில் கடந்த முறை நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் அரசாங்கத்திற்கு 102 உறுப்பினர்களின் ஆதரவே இருந்தது.

மகிந்தவை எதிர்க்கட்சித்தலைவராக ஏற்றுக் கொண்டு செயற்பட,பாராளுமன்றின் பல கட்சிகள் ஒன்றிணைந்துள்ளன. ஆனாலும் சுமந்திரன் இவ்வாறு கடிதம் எழுதுவது அரசாங்கத்திற்கு ஒத்துப்போகும் எதிர்க்கட்சியை உருவாக்கவே.

அரசாங்கத்திற்கு சார்பான எதிர்க்கட்சி அமைந்தால், அவர்கள் எதிர்பார்க்கும் அரசியல் திருத்தத்தினை அவர்களினால் கொண்டு வரமுடியும். இதுதான் அவர்களின் முதல் முயற்சி.

எங்கள் நாட்டின் பாராளுமன்றப் பிரச்சினைக்கு ஐரோப்பிய மற்றும் ஐ.நா. சபை எவ்வாறு தலையிடமுடியும் என்று எனக்கு தெரியவில்லை.

அரசியல்வாதியாக நாம் ஏனைய நாடுகளின் எதிர்கட்சித் தலைவர் குறித்து தனிப்பட்ட விதமாக தொடர்பு கொண்டாலும் பாராளுமன்ற விடயங்களில் தலையிடுவதிலை.

ஆனால் இங்கு பாராளுமன்றத்திற்குள்ளும் ஐரோப்பிய மற்றும் ஐ.நா சபை தலையிடவேண்டும் என்று கோரியுள்ளனர் என தெரிவித்தார். (ம-3)

## வடக்கில் ஏற்பட்ட...

அனர்த்தம் தொடர்பில் அறிவுறுத்துவதற்காக அலரி மாளிகையில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வைத்தே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பலத்த மழை காரணமாக வடக்கு மாகாணத்தில் 26 ஆயிரம் குடும்பங்களை சேர்ந்த 87 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இன்றைய தினமும் நாட்டின் பல மாகாணங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. (ம-3)

## தர்மபுரத்தில் தனி...

னம் ஒன்றும் உந்துருளி ஒன்றும் முன்னுக்கு தாறுமாறாக ஓடியுள்ளார்கள். இந்நிலையில் நெத்தலியாற்று பாலத்தினை தாண்டி சென்றபோது ஹயஸ் வாகனத்தை முன்னுக்கு செல்ல விட்டு தனியார் பேருந்தினை மறித்துள்ளார்கள்.

இதன்போது தனியார் பேருந்தின் சாரதி பேருந்தினை நிறுத்தியுள்ளார் இச்சம்பவத்தில் ஹயஸ் வாகனத்தில் இருந்து இறங்கியவர்கள் பேருந்தின் முன்பக்கத்தின் மின்குமிழ் மீதும் பக்க கண்ணாடி மீதும் தாக்குதல் நடத்தி உடைத்தெறிந்துள்ளார்கள்.

பேருந்துக்குள் புகுந்த இனந்தெரியாதோர் சாரதியினை தாக்கியுள்ளதுடன் பேருந்தில் இருந்த பயணிகள் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளார்கள். இதன்போது பயணிகள் இருவர் காயடைந்துள்ளார்கள்.

தலைக்கவசத்தினை கொண்டும் பயணிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ள அதேவேளை இரும்பு கம்பிகள் கொண்டு பேருந்தின் ஓட்டுநர், நடத்துநர்கள் மீது சரமாரியாக தாக்குதல் நடத்தியுள்ளார்கள். இதன்போது பேருந்தில் இருந்த பயணிகள் அல்லோலகல்லோலப்பட்டுள்ளார்கள். (ம-281)

## நத்தார் கொண்டா...

பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும் கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது நூற்றுக்கு 13 வீதத்தினால் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக கொழும்பு தேசிய வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றது.

இதேவேளை, வாகன விபத்துக்களினால் 163 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் நூற்றுக்கு 18 வீதத்தால் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-3)

## பிரதமர் ரணில்...

மாவட்டச் செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-3)

# எதிர்க்கட்சியை கொடுங்கள் நாம் செய்து காட்டுகின்றோம்

## ஜே.வி.பியினர் கோரிக்கை

மக்கள் விடுதலை முன்னணிக்கு எதிர்க்கட்சி தலைவர் பதவியை கொடுத்துப்பாருங்கள், நாங்கள் உரிய கடமையை செய்து காட்டுகின்றோம் என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா குறிப்பிட்டார்.

நிகழ்கால அரசியல் நடவடிக்கைகள் குறித்து கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறிய அவர்,

நேற்று இந்த நாட்டில் பொறுப்புக்கூறக் கூடிய தலைமைத்துவம் ஒன்று இல்லாது போய்விட்டது. ஜனாதிபதி -பிரதமர் இடையில் முரண்பாடுகள் நிலவுகின்றன. ஜனாதிபதி சொல்வது ஒன்று செய்வது வேறொன்று. பிரதமர் நாட்டின் குற்றவாளிகளை காப்பாற்ற வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் ஆட்சி நடத்தி வருகின்றார்.

பலமான எதிர்க்கட்சி என கூறிக்கொண்டு செயற்படும் எவரும் உறுதியாக இல்லை. அவர்களும் அதிகார மோகத்தில் மாத்திரமே செய்ற்பட்டு வருகின்றனர். மகிந்த ராஜபக்ஷ அணியினர் எந்த நேரமும் அவர்களுக்கு ஏதேனும் பதவி கிடைக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் மட்டுமே செயற்பட்டு வருகின்றனர்.

பாராளுமன்றத்தில் சட்ட விரோதமாக பிரதமர் பதவியை கைப்பற்றினர். அது பறிபோனதும் இன்று எதிர்க்கட்சித் தலைவர் பதவியை கைப்பற்றி பாராளுமன்றத்தை ஆக்கிரமிக்க முயற்சித்து வருகின்றனர். கடந்த சில பாராளுமன்ற அமர்வுகளின் போதெல்லாம் அவர்கள் எதிர்க்கட்சி ஆசனம் குறித்த நோக்கத்தில் மட்டுமே செயற்பட்டு வந்தனர்.

அதேபோல் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இத்தனை காலம் எதிர்க்கட்சி அதிகாரத்தில் இருந்தது. ஆனால் பிரதான எந்தவொரு பிரச்சினையையும் அவர்கள் கையாளவில்லை. மாறாக வடக்கின் ஒரு சில அரசியல் பிரச்சினைகள் குறித்து மட்டுமே பேசினார்கள்.

ஆனால் மக்கள் விடுதலை முன்னணியின் ஆறு பாராளுமன்ற உறுப்பினர்களும் எதிர்க்கட்சியின் உண்மையாக பொறுப்பினை சரியாக செய்து வருகின்றோம். மக்களின் நேரடியான பிரச்சினைகள் குறித்து மக்கள் விடுதலை முன்னணி மட்டுமே கலந்துரையாடி அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்து வருகின்றது.

ஆகவே எமக்கு அங்கீகாரம் இல்லாது போனாலும் கூட இன்றும் உண்மையான எதிர்க்கட்சி நாம் தான். மக்கள் எமது கொள்கையை, நிலைப்பாட்டினை ஆதரித்து மக்களின் மூலமாகவே அதிகாரத்தை வழங்கும் வரையில் எமது போராட்டம் ஜனநாயக ரீதியில் முன்னெடுக்கப்படும். (ம-3)




தெல்லிப்பழை கே.வி.ஆனந்தன் சிற்ப கலைக்கூடத்தில் இடம்பெற்ற சுனாமி நினைவு நாள் நிகழ்வுகளின் போது...

தன நிதானய
திகதி 2018-12-26
சீட்டிழுப்பு இலக்கம் 93
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கங்கள் 31 42 61 63
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2018.12.26
சீட்டிழுப்பு இலக்கம் 1985
ஆங்கில எழுத்து L
வெல்லப்பட்ட இலக்கங்கள் 03 12 13 19
தேசிய லொத்தர் சபை

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 26-12-2018
சீட்டிழுப்பு இலக்கம் 903
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 9 8 2 7 0 5
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 26/12/2018
சீட்டிழுப்பு இலக்கம் 323
வெற்றி எழுத்து D
சுப்பர் இலக்க 09
வெற்றி இலக்கங்கள் 39 42 54 60
தேசிய லொத்தர் சபை

## அரச தொழில் பெற்று தருவதாக...

வவுனியா உக்கிளாங்குளம் பகுதியிலுள்ள நபர் ஒருவர் அதே பகுதியில் வசித்து வரும் வைத்திய சாலை தாதிய உத்தியோகத்தர் ஒருவருடன் நெருங்கிப் பழகி அவர் ஊடாக அவரின்கணவருக்கு வேலை இல்லை எனவே அவருக்கு புனர் வாழ்வு அமைச்சில் வேலை பெற்றுத்தருவதாகவும் பலருக்கு அரச தொழில் வாய்ப்பு வெற்றிடம் இருப்பதாகவும் தெரிவித்துள்ளதுடன் தன்னை மாவட்ட செயலகத்தில் புனர்வாழ்வு அமைச்சில் பணியாற்றும் உத்தியோகத்தர் என்று அறிமுகம் செய்து நீண்டகாலமாக பழகி வந்துள்ளதுடன் தாதிய உத்தியோகத்தரின் கணவருக்கு தொழில் பெற்றுத்தருவதாக தெரிவித்துள்ளதுடன் மோட்டார் சைக்கிள்கள் அரச சலுகை விலையில் பெற்றுக் கொடுப்பதாகவும் தெரிவித்து தாதிய உத்தியோகத்தரிடமிருந்து ஒரு இலட்சத்திற்கும் அதிகமான பணத்தினைப் பெற்றுள்ளார்.

இதையடுத்து தாதிய உத்தியோகத்தரும் தனக்கு நெருக்கமானவர்களிடம் இவ்விடயத்தினைத் தெரிவித்துள்ளார். இதனால் பலரிடமிருந்து அரச தொழில் பெற்றுக் கொள்வதற்கும் அரச சலுகையில் மோட்டார் சைக்கிள் பெற்றுக் கொள்வதற்கும் பாரிய நிதிகள் பொதுமக்களிடமிருந்து மோசடி செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்களிடமிருந்து பணத்தினைப் பெற்றுக்கொள்ளும்போது மாவட்ட செயலகத்தில் வேலையிலிருப்பதாகவும் வெளியே வருகின்றேன் பணத்தினைத்தருமாறு தெரிவித்து மாவட்ட செயலகத்தின் வாசலில் வைத்து பலரிடம் பணத்தினைப் பெற்றுக்கொண்டுள்ளார். இதனிடையே குறித்த தாதிய உத்தியோகத்தரின் பாவனையற்ற வங்கிக்கணக்கின் புத்தகம் குறித்த நபரினால் திருடப்பட்டு அந்த வங்கியின் இலக்கத்திற்கு பணம் அனைத்தும் வைப்பிடப்பட்டுள்ளது. இவ்விடயம் தாதிய உத்தியோகத்தருக்கு நீண்டகாலமாக தெரியவரவில்லை குறித்த தாதிய உத்தியோகத்தரை தனது சொந்த சகோதரி என்று தெரிவித்து அவரின் வங்கிக்கணக்கிற்கு பண வைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இதன் பின்னர் குறித்த தாதிய உத்தியோகத்தர் தனது பாவனையற்ற தனியார் வங்கிப் புத்தகம் உட்பட பணம் பெற்றுக்கொள்ளும் அட்டை என்பன தவறிவிட்டுள்ள தாக நேற்று வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவல கத்தின் கீழ் செயற்படும் விசேட குற்றப் பிரிவின் அலுவலகத்தில் முறைப்பாடு ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த தனியார் வங்கி கணக்கிற்கு 6 தொடக்கம் 7 இலட்சம் ரூபாய் வரையில் வைப்பிட்டு பணம் மீளப் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது. இதைவிட தனி நபர்களிடம் அரச தொழில் பெற்றுத்தருவதாக 20 இலட்சத்திற்கும் அதிகமான நிதி மோசடி இடம்பெற்றுள்ளது. சிலருக்கு மோட்டார் சைக்கிளின் மாதிரி சாவியை வழங்கி விட்டு இது உங்களுக்கான மோட்டார் சைக்கிளின் சாவி வைத்திருக்கவும் மோட்டார் சைக்கிள் வந்ததும் பெற்றுக் கொள்ளவும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து நேற்று மாலை குறித்த பண மோசடியில் ஈடுபட்டுள்ள உக்கிளாங்குளம் பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தை கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் ஏற்கனவே குருமன் காடு பகுதியில் பெண் ஒருவரைத் திருமணம் செய்வதாக தெரிவித்து பெரும் தொகை பணம் மோசடி இடம்பெற்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு பலரிடம் அரச தொழில் பெற்றுத்தருவதாகவும் அரச சலுகையில் மோட்டார் சைக்கிள் பெற்றுத்தருவதாகவும் தெரிவித்து சுமார் 27 இலட்சம் ரூபாயினை பல வழிகளிலிருந்து பொது மக்களிடம் வேலை பெற்றுத்தருவ தாக நிதி மோசடி செய்துள்ள தாக விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது. இன் னும் பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கலாம் என்று பொலிஸார் எதிர்பார்க் கின்றனர்.

சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்டு வரும் மேலதிக விசாரணைகளின் பின்னர் இன்றைய தினம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை இடம்பெற்று வருவதாகவும் மேலும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-281)


விசேட கருத்தரங்குகள்
M.Ed தெரிவு
வெள்ளி
9.00 - 4.00
புகையிரத அத்தியட்சகர்
வெள்ளி, சனி
9.00 - 3.30
அலுவலக பணியாளர்
வெள்ளி, சனி
9.30 - 2.30
அதிபர் சேவை
புதிய பிரிவு
வெள்ளி, சனி
9.00 - 3.00
076 688 3394
யாழ்ப்பாணக்கல்லூரி, பட்டப்படிப்புகள் பிரிவு



விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
(C-4853)

DELIVERY IN 3-5 DAYS
UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)
● மானிப்பாய் 0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
V2 TRAVELS



பணியாளர் தேவை

யாழ் நகரில் உள்ள பிரபல தனியார் வைத்திய நிலையத்திற்கு பெண் தாதி உத்தியோகத்தர்கள் தேவை.

யாழ் நகரை அண்டிய பகுதியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு :
578, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல : 077 940 5928
(6613)


## பாதிக்கப்பட்ட...

குக்கருத்துத் தெரிவித்த தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள்.

கடந்தகாலங்களில் போரின் நிமித்தம் மோசமாகப் பாதிக்கப்பட்டு அவற்றின் தாக்கங்களில் இருந்து விடுபடமுன்னர் இயற்கையின் சீற்றம் மீண்டும் எம் மக்களுக்குத் துன்பத்தைக் கொடுத்திருப்பது எமக்கு மிகவும் வேதனை அளிக்கிறது.

யுத்தகாலங்களில் பல்லாயிரக் கணக்கில் இடம் பெயர்ந்தது போல மீண்டும் பல்லாயிரக்கணக்கில் அவர்கள் இடம்பெயரநேர்ந்துள்ளது. தமக்குக்கிடைத்த சொற்ப உதவிகள் மூலம் சிறுகச் சிறுக அவர்கள் கட்டி எழுப்பிய வாழ்வாதார செயற்பாடுகளை மழை வெள்ளம் சின்னா பின்னமாக்கியுள்ளதாக அறிந்து மனவருத்தம் அடைந்தோம். அவர்கள் துயரங்களைத் தீர்ப்பதற்கு எம்மால் முடிந்தளவுக்கு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம். சென்றமுறை அவர்கள்வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட போது 2015ல் எமது அமைச்சர் ஐங்கரநேசன் ஊடாக நிவாரணங்கள் வழங்கி இருந்தோம். இன்றும் வழங்குகின்றோம். தொடர்ச் சியாக நாங்கள் அவர்களுடன் இருப்போம்.

கிளிநொச்சிமற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு மேலும் உலர் உணவுகளை வழங்க உத்தேசித்துள்ளோம். தற்காலிகமான அவர்களின் இன்றைய நிலையைக்கடந்து செல்லவே எமது நிவாரணங்கள் வழங்கப்படுகின்றன. ஆனால் நிவாரணங்களுடன் நின்றுவிடாமல் அவர்கள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளும் நிலைவரவேண்டும். அதற்கு தன்னம்பிக்கை அவசியம். சுய முயற்சிகளால் உயர வேண்டும் என்று அவர்கள் நினைப்பது அவசியம். இப்போது ஏற்பட்டுள்ள இந்தவெள்ளம் காரணமாக பெரும் தொற்றுநோய், தொற்றாநோய் ஆபத்தும் சுகாதாரச்சீர்கேடும் ஏற்படும் வாய்ப்பு இருக்கின்றது. இது தொடர்பில் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் மற்றும் மருத்துவர்களுடன் ஆலோசனை நடத்தி எத்தகைய முற்பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்கலாம் என்று ஆராய விருக்கின்றோம்.

அடுத்து மக்களின் வாழ்வாதாரங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. பல இடங்களில் விவசாயம் அழிவடைந்துவிட்டது. கால்நடைகள் இறந்துவிட்டன. வாழ்வாதாரங்கள் தடைப்பட்டுள்ளன. சிலகுடும்பங்களுக்கேனும் உலர் உணவுகள் கொடுத்திருப்பது தற்போதைய அவர்களின் நெருக்கடிகளைச் சமாளிப்பதற்காகவே. இந் நிவாரணப் பணியில் யாழ் பல்கலைக்கழக மாணவ மாணவியரும் தமிழ் மக்கள் கூட்டணியுடன் இணைந்து தங்கள் சேவையை வழங்கி வருகின்றார்கள். அத்துடன் தமிழ் மக்கள் கூட்டணியின் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர் அணியும் தங்கள் சேவையை வழங்கி வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

எமக்குக் கிடைக்கும் அனைத்துப் பொருட்களும் தேவையிருக்கும் பாதிக்கப்பட்டமக்களுக்குச் சென்றடைய வேண்டும் என்றுநாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

பாதிக்கப்பட்ட எம் மக்கள் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள். பராமரிக்கப் படவேண்டியவர்கள். எமது கடமைகளை நாம் எமது கட்சி ரீதியாகச் சுறு சுறுப்புடன் செய்வோம். கட்டுப்பாட்டுடன் செய்வோம். மனிதநேயத்துடன் செய்வோம். கொடைகள் யாவும் தேவையுடையமக்களுக்கு முழுமையாகச் சென்றடைய நாங்கள் எம்மால் ஆன மட்டில் முயல்வோம். விரைவில் கட்சி ரீதியாக, உத்தியோக பூர்வமாக மக்கள் யாவரையும் சந்திப்பேன் என்று கூறி விடைபெற்றுக் கொண்டார் தமிழ் மக்கள் கூட்டணி நிறுவுநரும் செயலாளர் நாயகமுமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன். (ம-3)

## கஞ்சாவுடன்...

ஒருவர் காங்கேசன்துறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை கடற்படை முகாமில் கடமையாற்றும் காலியை சேர்ந்த 23 வயதுடைய கடற்படை சிப்பாயே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரிடம் இருந்து 27 கிராம் 7 மில்லிகிராம் கஞ்சா போதை பொருளை மீட்டதாகவும், அவரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து உள்ளதாகவும் காங்கேசன்துறை பொலிஸார் தெரிவித்தனர். (ம-3)


FALC FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்சு
(C-4839)
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)
40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781
181, பிரதான வீதி, நெல்லியடி. 0779 789 456 / 0762 669 614
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills.A1,B1
IELTS,SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.



முதலாம் ஆண்டு நினைவு தினம்
அமரர் எதிர்நாயகம் சிவநாயகம்
(முன்னாள் சங்கானை ப.நோ.கூ.சங்க கணக்குப்பதிவாளர்)
தோற்றம் 03 11 1956

மறைவு 06 01 2018
எமது குடும்பத்தின் குலவிளக்கே
ஆண்டொன்று போனதப்பா
ஆனாலும் உங்கள் அன்பு உள்ளம்
எம் நினைவை விட்டு நீங்கவில்லை
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
நீங்காது உங்கள் நினைவுகள்
(6811)
சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம். இங்ஙனம் - குடும்பத்தினர்


## கையூட்டல்...

யாழ். சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் பணியாற்றும் கிராம சேவகர் ஒருவரே அவ்வாறு பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

குறித்த கிராம சேவையாளர் பிரிவின் கீழ் வசிக்கும் பெண் தலைமைத்துவ குடும்பத்தை சேர்ந்த குடும்ப பெண் ஒருவருக்கு வீட்டு திட்ட பணிக்காக ஒரு இலட்ச ரூபாய் பணம் வழங்கப்பட்டுள்ளது.

அதில் தனக்கு 25 ஆயிரம் ரூபாய் பணத்தினை வழங்க வேண்டும் என கிராம சேவையாளர் குறித்த பெண்ணிடம் வற்புறுத்தி உள்ளார். அதனால் குறித்த பெண் 15 ஆயிரம் ரூபாயினை வழங்கியுள்ளார்.

இருந்த போதிலும் மிகுதி 10 ஆயிரம் ரூபாய் பணத்தினை விரைந்து தருமாறு தொடர்ந்து வற்புறுத்தியுள்ளார்.

அந்நிலையில் குறித்த பெண் கிராம சேவையாளர் தன்னிடம் பணம் கேட்டு வற்புறுத்துவது தொடர்பிலும் தான் ஏற்கனவே 15 ஆயிரம் ரூபாய் பணம் வழங்கியமை தொடர்பிலும் யாழ்.மாவட்ட செயலருக்கு முறையிட்டுள்ளார்.

அது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட மாவட்ட செயலர் நிர்வாக நடைமுறையின் கீழ் நடவடிக்கை எடுக்கும் வரையில் குறித்த கிராம சேவகரை தற்காலிகமாக பணி இடைநிறுத்தம் செய்யுமாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

அது தொடர்பில் மாவட்ட செயலரிடம் கேட்ட போது. மக்கள் சேவைக்காக எந்தவொரு உத்தியோகஸ்தரும் பணம் கோர முடியாது. அவ்வாறான சம்பவங்கள் நடைபெற்றால், அது தொடர்பில் நேரடியாகவோ, தபால் மூலமாகவோ என்னிடம் முறைப்பாடு செய்ய முடியும்.

குறித்த முறைப்பாடுகள் தொடர்பில் உடனடியாக விசாரணைகளை மேற்கொண்டு முறைப்பாடு உண்மை என எண்பிக்கபட்டால் தகுதி தராதரம் இன்றி உடனடியாக நடவடிக்கைஎடுக்கப்படும் என மாவட்ட செயலர் தெரிவித்தார். (ம-3)


A/L 3 PASSES உடன் BIT DEGREE from Colombo University
Call and Register before 31.12.2018 @ 0779785796
BIT Semester 1,3,5 & Project classes
2nd Upper உட்பட இதுவரை 80 பேர் BIT Degree பெற்றுள்ளனர். 12 வருட அனுபவம்.
வகுப்புக்கள் சனி மற்றும் ஞாயிறு தினங்களில்
By: T.Tharmmendra (BIT, MCSE, MBCS)
28/23, Manaltharai lane(by lane of Palaly Rd), Kandarmadam.
(6771)


இப்பத்திரிகை வலம்புரி அன்சோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.12.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.